வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர் ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 07.08.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 244 | பக்கங்கள் : 20


மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


08 ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு தொடர்பில் ரணிலின் நழுவல் போக்கு


10 கூட்டமைப்பும் சஜித் பிரேமதாச கட்சியும் தங்கள் தரப்பினரின் தாவலைத் தடுக்கவே


14 கோபாலபுரத்தில் நான்



16 கலைந்த கனவாகும் 'கட்டலோனியா" தேசம்

# பொருளாதார நெருக்கடியை வெல்ல ரணிலின் தலைமைத்துவம் முக்கியம்

## ஐ.நா. பொதுச் செயலர் சுட்டிக்காட்டு



நியூயோர்க், ஓக. 07

நாடு எதிர்நோக்கியுள்ள தற்போதைய சவால்களை வெற்றி கொள்வதற்குச் சாதகமான சூழலையும் ஸ்திரத்தன்மையையும் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் மிகவும் முக்கியமானதாக அமையும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர், ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள விசேட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்து

19

போர் விதிமுறைகளை மீறியதற்காக

# இலங்கை இராணுவ அதிகாரிகள் 58 பேரை கைது செய்யவேண்டும்!

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்து



ஜெனிவா, ஓக. 07

**போர் விதிமுறைகளை மீறி மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்ட இலங்கை இராணுவ அதிகாரிகள் 58 பேரைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் அம்மையார் வலியுறுத்தியுள்ளார்.**

அதற்காக சர்வதேச நீதி அமைப்பைப் பயன்படுத்துமாறும் ஐ.நா. உறுப்புரிமையிலுள்ள 47 நாடுகளின் தலைவர்களிடம் மிச்சேல் பச்லெட் கோரிக்கை விடுத்துள்ளார்.

குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட 58 இராணுவத்தினரையும் கைதுசெய்ய இலங்கை அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டி

19

# பீரிஸின் பதவியை பறிக்கிறது மொட்டு!

கொழும்பு, ஓக. 07

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து பேராசிரியர் ஜி.எல். பீரிஸை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவரான மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கலந்துரையாடி முடிவொன்றை எடுப்பதற்காக மொட்டு கட்சியின் விசேட கூட்டமொன்று விரைவில் இடம்பெறவுள்ளதென கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

19

# அமைச்சுப் பதவிகளை பெறுவதில் முற்போக்கு கூட்டணிக்குள் மோதல்!

கொழும்பு, ஓக. 07

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமையவுள்ள சர்வகட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்ளும் விடயத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குள் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

சர்வகட்சி அரசாங்கம் மற்றும் அமைச்சுப் பதவிகள் தொடர்பில் ஏற்கனவே எட்டப்பட்டிருந்த

19

# சிங்கப்பூரில் மேலும் 14 நாட்கள் தங்க அனுமதி கோரும் கோட்டா!



கொழும்பு, ஓக. 07

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூரில் மேலும் 14 நாட்கள் தங்கியிருப்பதற்கு அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ள கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 11ஆம் திகதி நாடு திரும்புவார் என்று தெரிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அவர் இந்த மாதம் இறுதி

19

# சர்வ கட்சி அரசில் 30 அமைச்சர்கள்!

கொழும்பு, ஓக. 07

அனைத்து கட்சி அரசாங்கத்தில் 30 பேருக்கு அமைச்சர் பதவிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து வெளிவரும் வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த ஊடகத்தில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்

19

# குமார் குணரட்ணத்தை கைது செய்யத் திட்டம்!

கொழும்பு, ஓக. 05

முன்னிலை சோசலிச கட்சியின் பொதுச் செயலாளர் குமார் குணரட்னம் உள்ளிட்ட 14 பேரை கைது செய்ய பொலிஸார் தயாராகி வருவதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

19

# சர்வகட்சி அரசு தொடர்பான பேச்சுவார்த்தைகள் வெற்றி

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 07

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ராமாக்ஞ நிக்காயாவின் மாநாயக்கர் மகுலேவே

19

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது!

ஒரு நாடு- இரு தேசம். அதாவது இலங்கை ஒரு நாடு, அதற்குள் சிறிலங்கா, ஈழம் என்ற இரண்டு தேசங்கள் இருக்கின்றன என்பதுதான் அவர்களின் கொள்கை.

முதலில் தமிழர் தேசத்தை அங்கீகரியுங்கள், சமஷ்டி கட்ட மைப்பை உருவாக்குங்கள், இருவருமாக நாட்டைக் கட்டி யெழுப்புவோம் என்று சில தினங்களுக்கு முன்னர் தான் பாராளு மன்றத்தில் அழைப்பு விடுத்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன்.

நியாயமான கோரிக்கைதான். அந்தக் கோரிக்கையை யாரும் ஏற்றுக்கொண்டதாகவோ, அல்லது ஆதரவாக கருத்துச் சொன்னதாகவோ இதுவரை அறியவில்லை.

ஆனால், திடீரென்று நேற்று முன்தினம் யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் வழக்கம்போல ஒரு சிலருடன் கூடிய முன்னணி யினர், இந்த அரசாங்கத்திற்கு எதிராக செயல்படுவதற்கு முடிவெடுத்திருப்பாக அறிவித்திருக்கின்றனர்.

கடந்த நூறு நாட்களுக்கும் மேலாக காலிமுகத்திடலில் "அரகலய"" நடத்தியவர்கள் யார் என்பதும், அதன் பின்னணியில் நின்றவர்கள் யார் என்பதும் ஒன்றும் இரகசியமானதல்ல. அங்கே சில தன்னார்வ அமைப்புக்கள் களத்தில் இருந்தாலும், ஜே.வி. பியும், முன்னிலை சோஷலிசக் கட்சியுமே முக்கிய பங்காற்றின. அவர்களின் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள் முக்கிய பங்காற்றின.

அதனால்தான், அவர்களுடன் கூட்டமைப்பின் சுமந்திரனும் சாணக்கியனும் ஒடி ஒடி பணியாற்றினார்கள். அவர்களின் நோக்கம் என்ன என்பதும் இரகசியமானதல்ல. அவர்களைப் பொறுத்தவரை, அப்போது ஆட்சியிலிருந்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இவர்கள் தேவையற்றவர்கள். தமக்கு தேவை யில்லாதவர்கள் ஆட்சியில் இருப்பதும் இவர்களுக்கு பிடித்த மானதல்ல.

நல்லாட்சி அரசாங்கத்தில் ரணிலின் செல்லப்பிள்ளையாக இருந்தவர்கள், ரணில் தோல்வியடைந்ததும் சஜித்துடன் நெருக்க மானார்கள். ரணில் படுதோல்வியடைந்தும், அவரை கேலி செய்ததோடு, அவர் தோற்றுப்போன ஒருவர் என்று பொது வெளியில் கூறினர்.

கோட்டாவுக்கு எதிராக நின்ற அரகலய காரர்களை ஆதரித்து, அவரைப் பதவியிலிருந்து விரட்டும்வரை அவர்களோடு நின்றனர். அவர்களைப் பொறுத்தவரை கோட்டாவை அனுப்பி, சஜித்தை கொண்டு வரவேண்டும்.

ஆனால், அப்போதெல்லாம் அமைதியாக இருந்தவர்கள்கள் இந்த முன்னணியினர். கோட்டாவை வீட்டுக்கனுப்ப நடந்த போராட்டத்தில் பார்வையாளர்களாக மாத்திரம் இருந்த முன்ன ணியினர், இப்போது அதே போராட்டம் ரணிலுக்கு எதிராக மாறியதும் அவர்களுடன் கைகோர்த்திருக்கின்றனர்.

இதனைத்தான் புரிந்து கொள்ளமுடியவில்லை.

அந்தப் போராட்டத்தின் பின்னணியில் நின்றவர்கள், அது ஜே.வி.பியாக இருக்கட்டும் அல்லது முன்னிலை சோஷலிசக் கட்சியாக இருக்கட்டும். இருவருமே அவர்களின் தமிழ்த் தேசத்தை ஏற்றுக்கொண்டவர்கள் அல்லர். அதிகம் ஏன், அவர்கள் நிராகரிக்கும் பதின்மூன்றாவது திருத்தத்தில் தமிழ் மக்களுக்கு இருந்த ஒரேயொரு சாதகமான விடயம், அது வடக்கு-கிழக்கை தமிழர்களின் பூர்வீக நிலமாக - தாயகமாக ஏற்றுக்கொண்டது தான். அதனையே இல்லாமல் செய்ய நீதிமன்றுக்கு சென்று நீதிமன்றம் ஊடாக இல்லாமல் செய்தவர்கள் இந்த ஜே.வி. பியினர்.

கோட்டாவுக்கு எதிராக போராட்டம் நடந்தபோது, கோட்டா தனது உண்மையான முகத்தை வெளிப்படுத்துவார், போராட்டக் காரர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுப்பார் என்றே பலரும் எதிர்பார்த்தனர். அந்த எதிர்பார்ப்பு முன்னணியினருக்கும் இருந்திருக்கும்.

அப்படியொரு நிலையை எடுத்திருந்தால், கொழும்பில் தமக்கி ருக்கும் "சொந்தங்கள்" பாதிக்கப்படலாம் என்ற பயமோ தெரிய வில்லை, அமைதியாக இருந்தவர்கள், இப்போது ரணி லுக்கு எதிராக போராட்டக்காரர்களுடன் களத்தில் குதித்திருக் கின்றனர்.

கோட்டா தனது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நம்பியே அறுபத்தி ஒன்பது லட்சம் மக்கள் அவருக்கு வாக்களித்தார்கள். அந்த வாக்குறுதியை அவர் மீறியபோது- அல்லது அதனைக் கண்டுகொள்ளாதபோது, அவர்கள் வீதிக்கு வந்தார்கள். அவரை விரட்டியடித்தார்கள். அவை ஏற்றுக்கொள்ளக்கூடியவை தான்.

ஆனால், முன்னணியினர், தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்கு றுதிகள் என்ன என்பது இங்கே எழுதித் தெரியவேண்டிய வையல்ல.

தமிழர் தேசத்தை அங்கிகரிக்க- அதனை அடைவதற்காகவே அவர்களுக்கு தமிழ் மக்கள் வாக்களித்தார்களே தவிர, இலங்கை என்ற நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக அல்ல.

இப்போது கோட்டாபய ஆட்சியில் இல்லை. ரணில் என்ற தாராளவாதி ஆட்சியில் இருக்கிறார். என்னதான் சொன்னாலும், செய்தாலும் அவர் கொழும்பிலுள்ள "சொந்தங்கள்" மீது கைவைக் கப்போவதில்லை என்ற நம்பிக்கையில் அவருக்கு எதிராக களம் இறங்கியிருந்தால், அது அவர்களை நம்பி வாக்களித்த மக்களுக்கு துரோகம் செய்வதற்கு ஒப்பானது.!

- ஊர்க்குருவி

# காலிமுகத்திடல் போராட்டத்தில் எம்மைப் பற்றி பேசப்படவில்லை

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவலை

கிளிநொச்சி, ஒக. 07

**கொழும்பில் இடம்பெற்ற போராட்டத்தில் அரசியல்வாதிகள்கூட எமது போராட்டம் தொடர்பில் பேசி வலுச்சேர்க்கவில்லை என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

கிளிநொச்சியில் அமைந் துள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவு கள் சங்கத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பின்போது, சங்கத் தலைவி கதிர்காமநாதன் கோகிலவாணி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

இன்று எங்கள் போராட் டம் 13 வருடங்களையும் தாண்டி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதில் நீதி கிடைக்கவில்லையென்பதால் இன்று, தனித்துவமாக போராட்டத்தை 8 மாவட் டங்களிலும் முன்னெடுக்க தொடங்கி 5 ஆண்டுகளை கடந்துள்ளன.

6ஆவது வருடத்திலும் போராடிக்கொண்டிருக்கும் எமக்கு இலங்கை அரசாங்க மும் எந்தவொரு நீதியையும் தரவில்லை. இந்த நிலையில் ஜெனிவா கூட்டத் தொட ருக்கு சென்றும் அங்கும் இது வரை நீதி கிடைக்கவில்லை.

எமக்கு நீதி கிடைக்கும் வரை நாங்கள் போராடிக் கொண்டே இருப்போம். அதேவேளை, எமது போராட்டம் தனித்துவமாக ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக் கிழமை 2000 ஆம் நாட்களை அடைகின்றது. அன்றைய தினம் மாபெரும் போராட் டமாக முன்னெடுக்க அனைத் துத் தரப்பினரையும் அழைத்து போராட இருக்கின்றோம்.

அரசியல்வாதிகள், அரச அரச சார்பற்ற நிறுவனங்கள், தமிழ் மக்ககள் என அனைத்து தரப்பினரும் எமது போராட் டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டும்.

வடக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களையும் ஒன்றி ணைத்து கிளிநொச்சி கந்த சுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப்படும் பேரணி டிப்போ சந்தியில் நிறை வடையும். இதன்போது ஐக் கிய நாடுகள் சபைக்கு மகஜரும் கையளிக்கப்படவுள் ளது.

இதேபோன்று கிழக்கு மாகாணத்திலும் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது. எமது உறவுகள் கிடைக்கும் வரை நாங்கள் போராட் டத்தை கைவிடப்போவ தில்லை. எமது போராட்டத் துக்கு வலுச்சேர்க்கும் வகை யில் அதில் கலந்து கொள்ளு மாறு மக்களை அழைக்கின் றோம் - என்றார். (அ)

# அமைச்சரவையில் பங்கேற்கமாட்டோம்

## ஜி.எல். பீரிஸ் திட்டவட்டம்



கொழும்பு, ஒக.07

"சர்வகட்சி வேலைத் திட் டத்துக்கு ஒத்துழைப்பு வழங் கினாலும், அமைச்சுப் பதவி களைப் பெற்றுகொள்ளமாட் டோம்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் தவிசாளர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன் னணியின் டலஸ் ஆதரவு அணி உறுப்பினர்கள் கொழும்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதன்போதே 'மொட்டு'க் கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பியான பீரிஸ் மேற்கண்ட வாறு கூறினார்

"மக்கள் நலன்சார்ந்து அரசால் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும். எனினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பதவிகளை ஏற்பதற்குத் தயா ரில்லை" என்றும் பீரிஸ் மேலும் குறிப்பிட்டார்.(அ)

# சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான மருத்துவ சோதனை கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, ஒக. 07

சாரதி அனுமதிப்பத்திரத் திற்கான உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய வற்றுக்கான மருத்துவப் பரி சோதனைக் கட்டணம் எதிர் வரும் 08 ஆம் திகதி முதல் மாற்றியமைக்கப்படவுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவ பரிசோதனை கட்டணம் மற்றும் அதற்கு பயன்படுத்தப்படும் பொருட் கள் மற்றும் உபகரணங்களின் விலை அதிகரிப்பு காரணமாக இந்த திருத்தம் மேற்கொளி ளப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் தெரிவித்துள் ளது.

இதன்படி இலகுரக வாக னங்களுக்கான மருத்துவ பரி சோதனை கட்டணம் 1,500 ரூபாவாக அதிகரிக்கப்பட் டுள்ளது.

மேலும், கனரக வாகனங்க ளுக்கான மருத்துவ பரிசோத னைக் கட்டணம், சிறுநீர் பரிசோதனை தவிர்த்து 1500 ரூபாவாக அதிகரிக்கப்பட் டுள்ளதாக தேசிய போக்கு வரத்து மருத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது.

(அ)

# யானை தாக்கி வீடு சேதம்

மட்டக்களப்பு, ஒக. 07

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கண்ணகி கிராமம் 2 இன் 3ஆம் வட்டாரத்தில் நேற்று முன் தினம் இரவு யானையின் தாக்குதலுக்கு உள்ளான வீடொன்று சேதத்துக்குள் ளாகியுள்ளது.

கணவன் மனைவி ஆகிய இருவரும் வாழ்ந்துவரும் வீடொன்றிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. ஆயினும் அதிர்ஷ்டவசமாக குறித்த நேரத்தில் வீட்டில் யாரும் இல்லை.

அச்சந்தர்ப்பத்தில் வீட்டின் கூரையை உடைத்த யானை உள்ளே இருந்த நெல்லை உண் டதுடன் இழுத்துச் சென்றுள் ளதாக தெரிவிக்கப்பட்டது.

அறுவடை முடிவடைந்து வரும் இச்சந்தர்ப்பத்தில் யானைகள் தற்போது கிரா மத்தை நோக்கி நகர்ந்து வரும் நிலை உருவாகியுள்ளது.

இதன் காரணமாக குறித்த கிராமத்தில் வாழும் மக்கள் பீதியடைந்துள்ளதுடன் வரு டாந்தம் இதுபோன்ற சம்ப வங்கள் அவ்வப்போது இடம் பெறுவதாகவும் சுட்டிக் காட்டுகின்றனர். (அ)

# சர்வகட்சி அரசுக்கான பேச்சுக்கள் மும்முரம்!

## அமைச்சுப் பதவிகளுக்கு போட்டி

கொழும்பு, ஓக. 07

**சர்வகட்சி அரசு மற்றும் சர்வகட்சி வேலைத்திட்டம் சம்பந்தமாக அனைத்து கட்சிகளுடனும் ஜனாதிபதி பேச்சுகளை நடத்திவருகின்றார்.**

**ஐக்கிய மக்கள் சக்தி, ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட பிரதான கட்சிகளுடன் முதல் சுற்று பேச்சை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார்.**

இந்நிலையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை, ஜே.வி.பியினருடன் பேச்சு நடத்தவுள்ளார். சர்வக்கட்சி அரசில் இணைந்து, பதவிகளை ஏற்பதில்லை என்ற நிலைப்பாட்டிலேயே ஜே.வி.பி. உள்ளது. எனினும், கோப் குழு உட்பட நாடாளுமன்ற குழுக்களில் தலைமைப்பதவியை ஏற்பதற்கு அக்கட்சி தயாராக உள்ளது.

சர்வகட்சி அரசில் இணைவதற்கு ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பச்சைக்கொடி காட்டியுள்ளது. அக்கட்சியால் முன்னெடுக்கப்பட்ட 'தேசிய சபை' யோசனையை ஜனாதிபதி ஏற்றுள்ளார்.

43 ஆம் படையணியின் செயலாளர் சம்பிக்க ரணவக்க, நாடாளுமன்ற உறுப்பினர் குமார் வெல்கம ஆகியோரும் சர்வக்கட்சி அரசில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். சஜித் தரப்புடன் கூட்டணி வைத்துள்ள சிறு கட்சிகளும் சர்வக்கட்சி அரசில் இணைந்து பதவிகளை பெறுவதற்கு தயார் நிலையில் உள்ளன.

எனினும், 30 பேர்கொண்ட அமைச்சரவேயை அமைக்கப்படவுள்ளது. இதற்கிடையில் அமைச்சுப் பதவிகளை பெறுவதில் கடும் போட்டியும் ஏற்பட்டுள்ளது. (அ)




# எரிபொருள் விநியோகத்தில் பெண்களுக்கு தனி வரிசை

வடமராட்சி, ஓக. 07

வடமராட்சி நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மகளிருக்கான தனியான வரிசை நேற்று முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2:30 மணியளவிலிருந்து அமைதியான முறையில் எரிபொருள் வழங்கும் நடவடிக்கைகள் இடம் பெற்றன.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் வழங்கப்பட்டும் சுமார் 1000 க்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் பெற்றோல் கையிருப்பு முடிவுற்ற நிலையில் திரும்பிச் சென்றன கடந்த வெள்ளியன்று பிற்பகல் 2:30 மணியிலிருந்து பெற்றோல் விநியோகம் கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் கலாநிதி ஐ.யோகராசாவின் நேரடி கண்காணிப்பில் மகளிருக்கான தனியான வரிசை ஒழுங்குபடுத்தப்பட்டு கியூ.ஆர் அடிப்படையில் இடம்பெற்றது.

இதில் இராணுவம், பொலிஸார் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குபடுத்தலின்கீழ் மிகவும் அமைதியான முறையில் பெற்றோல் விநியோகம் இடம்பெற்றது.

(அ-02)

# காஸ் விலை குறைகிறது!

கொழும்பு, ஓக. 07

12.5 கிலோ எடையுடைய லிற்றோ சமையல் எரிவாயுவின் விலை 250 ரூபாவால் குறைக்கப்படவுள்ளதென நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

நாளை திங்கட்கிழமை முதல் குறித்த விலை குறைப்பு அமுலுக்கு வரவுள்ளது. 5 மற்றும் 2.5 கிலோ எடையுடைய சமையல் எரிவாயு விலையும் குறைக்கப்படவுள்ளது.

லாப் காஸ் குறித்து இன்னும் உறுதியான தகவல் வெளியாகவில்லை. லிற்றோ நிறுவனம் குறித்த தகவல் உறுதியாகியுள்ளது. (அ)




## நீதிமன்றில் துப்பாக்கிச் சூடு

# பொலிஸ் அதிகாரிகள் இருவர் பணி நீக்கம்!

கொழும்பு, ஓக. 07

கல்கிஸை நீதவான் நீதிமன்றில் பாதுகாப்புக் கடமையில் இருந்த இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நீதிமன்றில் வழக்கு விசாரணை இடம்பெற்றிருந்தபோது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் குறித்த இருவரும் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

குற்றவாளி கூட்டில் இருந்த ஒருவர் மீதே இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

பின்னர் பொலிஸ் பாதுகாப்பையும் மீறி துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட நபர் அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றிருந்தார்.

இந்நிலையில் , துப்பாக்கிச் சூடு இடம்பெற்றபோது பாதுகாப்புக் கடமையில் இருந்து பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவரே இவ்வாறு பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

(அ)

# வாடகை வாகனங்களுக்கு அநியாயமாக பணம் செலுத்தும் அரச திணைக்களங்கள்

கொழும்பு, ஓக. 07

தனியார் நிறுவனங்களில் இருந்து அரசால் வாடகைக்கு எடுக்கப்பட்ட சுமார் 250 வாகனங்கள் இயங்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளபோதிலும் அவற்றுக்கான மாதாந்த வாடகை செலுத்தப்பட்டு வருவதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

எரிபொருள் பற்றாக்குறையால் குறித்த வாகனங்கள் ஓடாமல் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் மாதாந்த வாடகை செலுத்தப்பட்டு வருகின்றது.

இதில் ஒரு வாகனத்துக்கு குறைந்தபட்ச மாத வாடகை மட்டும் இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் செலுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு, செலவுகளை கட்டுப்படுத்தவும், வாகனங்களைப் பயன்படுத்துவதை கட்டுப்படுத்தவும் நிதியமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், பல அரச நிறுவனங்கள் அந்த அறிவுறுத்தல்களை புறக்கணித்து, வாடகை செலுத்தி வாகனங்களை நிறுத்தி வைத்திருப்பதாக கொழும்பு செய்திகள் மேலும் கூறுகின்றன. (அ)

# சீரற்ற காலநிலையால் 14,885 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஓக. 07

மத்திய மாகாணம் உட்பட ஐந்து மாகாணங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் 3 ஆயிரத்து 850 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 885 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அடை மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவால் ஐவர் பலியாகியுள்ளனர். ஒருவர் காணாமல்போயுள்ளார். நால்வர் காயமடைந்துள்ளனர். ஆயிரத்து 692 வீடுகள் சேதமடைந்துள்ளன.

58 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. சீரற்ற காலநிலையால் மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கே கூடுதல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (அ)

# சர்வகட்சி அரசில் இணையுமா ஜே.வி.பி.?

## செவ்வாயன்று ஜனாதிபதியுடன் பேச்சு

கொழும்பு, ஓக. 07

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் , அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினருக்கும் இடையிலான சந்திப்பு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

சர்வகட்சி அரசு மற்றும் அதற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளன.

சர்வகட்சி அரசு தொடர்பில் அரசியல் கட்சிகளுடன் ஜனாதிபதி பேச்சு நடத்திவருகின்றார். இதன் ஓர் அங்கமாகவே மேறபடி சந்திப்பும் இடம்பெறவுள்ளது. (அ)

# கோழி இறைச்சி, முட்டை விலை சடுதியாக உயர்வு!

கொழும்பு, ஓக. 07

கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலைகள் சடுதியாக அதிரித்துள்ளது.

முட்டையொன்றின் விலை 55 முதல் 57 ரூபாவரை விற்கப்படுவதுடன், ஒரு கிலோ கோழி இறைச்சி விலை ஆயிரத்து 400 ரூபாவரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

விலங்கு தீணி விலை அதிகரிப்பு உட்பட மேலும் சில காரணங்களாலேயே விலை அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது. (அ)

# சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு செல்ல முற்பட்ட 1,024 பேர் கைது!

கொழும்பு, ஓக. 07

இலங்கையில் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு செல்ல முற்பட்ட ஆயிரத்து 24 பேர் இலங்கை கடற்பரையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2022 ஜனவரி முதல் இதுவரையான காலப்பகுதியிலேயே மேற்படி கைதுகள் இடம்பெற்றுள்ளன. இந்தியா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ் உட்பட சில நாடுகளுக்கு கடல் மார்க்கமாக செல்ல முற்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, சட்டவிரோத குடியேற்ற வாசிகளுக்கு அவுஸ்திரேலியாவில் இடமில்லை என அந்நாட்டு அதிகாரிகள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். (அ)

# சீன கண்காணிப்புக் கப்பலின் வருகையை ஒத்திவையுங்கள்

## இலங்கை அரசு அவசர கோரிக்கை

கொழும்பு, ஓக. 07

**இரண்டு அரசாங்கங்களுக்கிடையில் மேலும் ஆலோசனைகள் மேற்கொள்ளப்படும் வரை அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கான, விண்வெளி-செயற்கைக்கோள் கண்காணிப்பு கப்பலான யுவான் வாங் 5 பயணத்தை ஒத்திவைக்குமாறு இலங்கை அரசாங்கம், சீன அரசாங்கத்திடம் கோரியுள்ளது.**

இந்த செய்தியை இந்திய ஊடகமான ஹிந்துஸ்தான் ரைம்ஸ் வெளியிட்டுள்ளது. இந்த உளவுக் கப்பல் 11ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்து 17ஆம் திகதி புறப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும் இந்த கப்பல் பயணத்தின் உண்மையான நோக்கம் என்ன என்பதை அறிவிக்குமாறு இந்தியா, இலங்கையிடம் கோரியுள்ளது.

இதனையடுத்தே கப்பல் பயணத்தை ஒத்திவைக்குமாறு இலங்கை, சீனாவிடம் கோரியுள்ளதாக இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

யுவான் வாங் 5 கப்பல் கடந்த ஜூலை 13 அன்று சீனாவின் ஜியாங்யினில் இருந்து புறப்பட்டு தற்போது தாய்வானுக்கு அருகில் அம்பாந்தோட்டையை நோக்கி பயணிக்கிறது.

இந்தநிலையில், இலங்கை வெளியுறவு அமைச்சு, சீனாவின் கப்பலை அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் நிறுத்துவதற்கான அனுமதியை ஒத்திவைக்கும் கோரிக்கையை முறையான இராஜதந்திர வழிகள் மூலம் சீன வெளியுறவு அமைச்சு சக அதிகாரிகளுக்கு எழுத்து பூர்வமாக அனுப்பியுள்ளது.(அ)

# பொல்லால் தாக்கி முதியவர் கொலை!

## கொட்டாஞ்சேனையில் பயங்கரம்

கொழும்பு, ஓக. 07

இருவருக்கிடையில் ஏற்பட்ட முறுகலில் ஒருவர் பொல்லால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். கொழும்பு, கொட்டாஞ்சேனையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வத்தளை, ஹுனுப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 76 வயது வயோதிபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக கொழும்பு தேசிய வைத்திய சாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# மொட்டுக் கட்சியின் எம்.பிக்களை திடீரென சந்தித்த பிரதமர் தினேஷ்



கொழும்பு, ஓக. 07

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இரவு 'மொட்டு'க் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

சர்வகட்சி அரசு சம்பந்தமாக இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இதன்போது ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் முன்னெடுக்கும் நகர்வுகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று மொட்டுக் கட்சி தரப்பில் பிரதமரிடம் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

சர்வகட்சி கோட்பாட்டுக்காகவே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் பதவி விலகினர். எனவே, இந்த இலக்கை அடைய தமது கட்சி முழு ஒத்துழைப்பை வழங்கும் என்று மொட்டுக் கட்சி எம்.பிக்கள் தெரிவித்துள்ளனர்.

எம்.பிக்கள், பிரதமரைச் தேடிச் சென்றே பேச்சு நடத்துவர். எனினும், மொட்டுக் கட்சி தலைமையகத்துக்கே வந்து அக்கட்சியினருடன் பிரதமர் கலந்துரையாடியுள்ளார். (அ)

# வட்டுக்கோட்டையில் தொடர் திருட்டு பொலிஸாரினால் இளைஞர் கைது!



யாழ்ப்பாணம், ஓக. 07

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக மோட்டார் நீர் இயந்திரங்கள் மற்றும் சைக்கிள்கள் திருட்டு போயுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன.

இதனையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.பி.டி. கொஸ்தாவின் வழிகாட்டலில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி என் எஸ்.டி. சத்திரசிங்கவின் தலைமையில் விசேட தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கமைய நேற்று முன்தினம் மாலை வட்டுக்கோட்டை பொலிஸார் வட்டு தெற்கு இன் பச்சோலை பகுதியைச் சேர்ந்த 22 வயதான இளைஞன் ஒருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் பிரகாரம் வட்டுக்கோட்டை பொலிஸார் 8 சைக்கிள்கள் மற்றும் 8 மின் மோட்டார் இயந்திரங்களை கைப்பற்றினர்.

சந்தேக நபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றின் வழக்கு தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்திருப்பதாகவும் மேலும் திருட்டுக்களில் சந்தேக நபர் ஈடுபட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# எரிபொருள் பவுசர் மோசடியில் இரு உயர் அதிகாரிகள் அடக்கம்!

கொழும்பு, ஓக. 07

முத்துராஜவெல பெற்றோலிய முனையத்தில் இருந்து கட்டுநாயக்க பிரதேசத்தில் உள்ள நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்காகக் கொண்டு செல்லப்பட்ட எரிபொருள் பவுசரை மீகொட பிரதேசத்தில் அதிக விலைக்கு விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் நான்கு சந்தேக நபர்களை மீகொட பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களில் இரண்டு பெரிய தனியார் நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் இருவர் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முத்துராஜவெல பெற்றோலிய முனையத்தின் இரண்டு சிரேஷ்ட அதிகாரிகள் இந்த மோசடிக்கு தலைமை தாங்கியதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் மீகொட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையில் இடம்பெற்று வருகின்றது. (அ)

# துப்பாக்கிகளுடன் இருவர் கைது!

கொழும்பு, ஓக. 07

இருவேறு பிரதேசங்களில் இருவர் துப்பாக்கிகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

கொழும்பு, பேலியகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வெளிநாட்டுத் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் இரண்டுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நவகமுவ, ரணால பிரதேசத்தை சேர்ந்த 36 வயது நபரே கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் விசேட அதிரடிப்படையின் தலைமையகத்துக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் அவரது வீட்டைச் சோதனை செய்தபோது வெளிநாட்டுத் துப்பாக்கி, தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கொழும்பு அவிஸாவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலட்டுவாவ பிரதேசத்தில் உள்நாட்டுத் துப்பாக்கி ஒன்றுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தும்மோதர பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயது நபரே கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# அழகுக்கலை நிலையத்திற்கு புகுந்து துப்பாக்கி பிரயோகம்

## இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 07

கம்பஹா பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞன் அழகுக்கலை நிலையமொன்றில் இருந்தபோது அங்கு வந்த துப்பாக்கிதாரி இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

கம்பஹா உடுகம்பொல பிரதேசத்தை சேர்ந்த இளைஞன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# நடமாடும் தடுப்பூசி நிலையங்களை நிறுவ சுகாதார அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஓக. 07

கொரோனா தடுப்பூசியின் நான்காவது டோஸை மக்களுக்கு வழங்குவதற்காக நடமாடும் தடுப்பூசி நிலையங்களை அமைக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேவைக்கு ஏற்ப குறித்த நடமாடும் நிலையங்களைத் தொடர்புகொண்டு பொதுமக்கள் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடியுமென சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

மேலும், கொரோனா தடுப்பூசியின் நான்காவது டோஸை பிரதான மருத்துவமனைகள் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகளிடமிருந்து பெறலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu
07.08.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆடி 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# சீன விவகாரம் - சிறிலங்காவின் நடுநிலை எதுவரையில்?

சீனாவின் - யுவான் வாங் - 5 ஆய்வுக் கப்பல் விவகாரம் மீளவும் உலக அதிகார சக்திகளின் மோதலுக்குள் இலங்கைத் தீவை இழுத்து விட்டிருக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு இது ஒரு புதிய நெருக்கடியாகும். ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருக்கின்றபோது தான், அம்பாந்தோட்டை துறைமுகம், சீனாவிற்கு, 99 வருடக் குத்த கைக்கு வழங்கப்பட்டது. சீனாவின் கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலையிலேயே இவ்வாறானதொரு உடன்பாட்டிற்கு செல்ல வேண்டிய இக்கட்டு நிலையேற்பட்டதாகவே அப்போது கூறப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க இதன் விளைவுகளை அறியாமல் செயற்பட் டாரா என்னும் கேள்வி அப்போது பலராலும் முன்வைக்கப்பட்டிருந்தது. இன்று, சீனாவின் இராணுவ பிரசன்னம் தொடர்பில் கவலை வெளியி டும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்தான், அப்போது சிறி லங்காவின் எதிர்கட்சி தலைவராக இருந்தார். இது தொடர்பில் எந்தவொரு கரிசனையையும் சம்பந்தன், அப்போது வெளிப்படுத்தியிருக்க வில்லை.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா, அதன் இராணுவ தேவை களுக்கு பயன்படுத்தலாம் என்னும் எதிர்வு கூறல்கள் அப்போதே முன் வைக்கப்பட்டிருந்தன. 2018இல், அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸ், அம்பாந்தோட்டை துறைமுகம் காலப் போக்கில் சீனாவின் இராணுவத் தளமாக மாறக் கூடுமென்று எச்சரிக்கை செய்திருந்தார். அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையிலும் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதனை அப்போது ரணில் விக்கிரமசிங்க மறுத்திருந்தார். அம்பாந்தோட்டை துறைமுகம் ஒரு வர்த்தக உடன்பாடு. எனவே இவ்வாறான அச்சங்கள் தேவையற்றது என்றவாறு ரணில் வாதிட்டிருந்தார்.

2019இல், ஆட்சியதிகாரத்தை கைப்பற்றிய கோட்டபாய ராஜபக்ஷ, தனது புதுடில்லி விஜயத்தின் போது, குறித்த உடன்பாட்டை தான் மீள்பரீசீலனை செய்யப் போவதாகவும், ஒப்பந்தத்தை 40 வருடங்களாக குறைக்கப் போவதாகவும் தெரிவித்திருந்தார். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. ஆனால் இன்று அமெரிக்காவின் எதிர்வு கூறலுக்கு அமைவாக விடயங்கள் நடைபெறுகின்றனவா என்னும் கேள்வி எழுந்தி ருக்கின்றது. சீனாவின் இராணுவ இலக்கிற்கான ஆய்வுகளை மேற் கொள்ளும் கப்பல், அம்பாந்தோட்டை நோக்கி விரைந்து கொண்டி ருக்கின்றது.

2014இல் இது போன்றதொரு சம்பவம் இடம்பெற்றிருந்தது. அப்போது இந்தியா கடுமையான கண்டனங்களை வெளியிட்டிருந்தது. 2015இல் ஆட்சியிலும் மாற்றம் ஏற்பட்டது. ஏழு வருடங்கள் கழித்து மீண்டுமொரு நெருக்கடி உருவாகியிருக்கின்றது. கேள்வி, இந்த விடயம் இத்துடன் முடிந்துவிடுமா அல்லது தொடருமா? உண்மையில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறான விடயங்கள் எதிர்காலத்திலும் நிச்சயம் இடம்பெறும். ஏனெனில் இலங்கைத் தீவு ஏற்கனவே அதிகார சக்திகளின் போட்டிக்குள் வீழ்ந்துவிட்டது. இதிலிருந்து இலகுவாக தப்ப முடியாது. ஒரு நிலப்பகுதியை குறிப்பிட்ட நாட்டிற்கு 99 வருட குத்தகைக்கு வழங்குவது என்பது, கிட்டத்தட்ட அந்த நாட்டிற்கு சொந்தமாக வழங்கியதற்கு சமனாகும். இந்த நிலையில் குறித்த துறைமுகத்தை சீனா தேவைப்படும் போது, அதன் இராணுவ நோக்கங் களுக்கு பயன்படுத்த முற்பட்டாலும் அதனை கொழும்பால் ஓர் எல்லைக்கு மேல் கட்டுப்படுத்த முடியாமல் போகும். இது மறுபுறும் இந்தியாவிற்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும். இந்தியா அதன் பாதுகாப்பை கருத்தில் கொண்டு சில விடயங்களை முன்னெடுக்கும்.

சிறிலங்கா வெளிவிவகாரங்களில் நடுநிலை கொள்கையை முதன் மைப்படுத்தி வருகின்றது. ஆனால் எதுவரையில் கொழும்பால் நடு நிலையை பேணிப்பாதுகாக்க முடியும்?

# ஜனாதிபதியின் உரைக்கு ஏற்ற முறையில் நடவடிக்கைகளும் வேண்டும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை தொடக்கிவைத்து நிகழ்த்திய கொள்கை விளக்கவுரை உலகினால் பாராட் டப்படக்கூடிய அளவுக்கு நல்லாட்சிமுறைக் கான தொலைநோக்கை வகுப்பதாக பாராட்டி யிருக்கும் இலங்கை தேசிய சமாதானப் பேரவை தனதுரையில் கூறிய விடயங்களுக்கு ஏற்றமுறையில் அரசாங்கத்தின் நடவடிக் கைகள் அமைவதை அவர் உறுதிசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறது.

ஶ்‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

மக்கள் போராட்ட இயக்கத்தின் பிரத்தி யேகமான தன்மையை அங்கீகரித்து ஜனாதி பதி கைதுசெய்யப்பட்டிருக்கும் அல்லது சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருக் கும் போராட்ட இயக்க முன்னணி உறுப்பி னர்களுக்கு முழுமையான மன்னிப்பை வழங்க வேண்டும் என்றும் கலாநிதி ஜெகான் பெரேராவை நிறைவேற்று பணிப்பாளராகக் கொண்ட தேசாய சமாதானப் பேரவை கேட்டிருக்கிறது.

இது தொடர்பில் பேரவை வெளியிட்டி ருக்கும் ஊடக அறிக்கையில் கூறப்பட்டிருப்ப தாவது:-

தற்போதைய பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை சம்பிரதாய பூர்வமாக தொடக்கிவைத்து கடந்த புதன் கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிகழ்த்திய கொள்கை விளக்கவுரை உலகினால் மெச்சப்படக்கூடிய நல்லாட்சி மற்றும் பண்பு நயத்துக்கான நோக்கை வகுப்பதாக அமைந்தி ருக்கிறது.முன்னாள் ஜனாதிபதியையும் பிரத மரையும் அமைச்சரவையையும் பதவிவிலகச் செய்த மக்கள் போராட்டங்களின்போது சட்டத்தை மீறிச் செயற்பட்டதற்காக போராட்ட இயக்கத்தின் பல தலைவர்களும் இளம் செயற்பாட்டாளர்களும் கைது செய்யப்பட் டுக்கொண்டிருக்கின்ற ஒரு நேரத்தில் ஜனாதிபதி அந்த உரையை நிகழ்த்தி யிருக்கிறார்.

ஜனாதிபதி பதவியேற்றிருப்பதை முன் னிட்டு அவருக்கு வாழ்த்துக்களை தெரிவிக் கும் தேசிய சமாதானப் பேரவை அவரது நோக்கு மெய்ம்மையாவதற்கு ஆதரவை வழங்குகிறது.தற்போதைய நிலைவரத்தை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதி தலைமையி லான அரசாங்கம் பல்வேறு புதிய முன்முயற்சி களை எடுப்பதை நாம் காண்கிறோம். போராட்ட இயக்கமும் இந்நாட்டின் இளை ஞர்களும் வேண்டிநிற்கின்ற முறைமை மாற்றம் (system Change ) என்பது பொரு ளாதாரக் கட்டமைப்பின் நிலைகுலைவுக்கு பங்களிப்புச் செய்த தற்போதைய பாராளு மன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் இருக் கும் தற்போதைய கட்டமைப்புக்களின் முற்றுமுழுதான மாற்றமேயாகும்.

இந்த தருணத்தில் ஜனாதிபதியிடம் நாம் ஐந்து விசேட வேண்டுகோள்களை முன்வைக் கின்றோம்.

*(1)* தடுப்புக்களையும் சமப்படுத்தல்களை யும் (System of checks and balances ) வலுப்படுத் துவதற்கு அரசியலமைப்புக்கு கொண்டுவரப் பட உத்தேசிக்கப்பட்டிருக்கும் 22 வது திருத் தத்தை அமைச்சரவை அங்கீகரித்திருக்கிறது. அரசியலமைப்பு பேரவையின் பத்து உறுப்பி னர்களில் மூவர் சிவில் சமூகத்தை பிரதி நிதித்துவப்படுத்துவார்கள். ஆனால் அவர் களை தெரிவுசெய்வதற்கான தற்துணிபு அதி காரம் பாராளுமன்ற சபாநாயகருக்கு வழங்க ப்படுகிறது. அதனால் அந்த தெரிவுகள் அரசாங்கத்துக்கு அனுகூலமாக அமையக் கூடிய சாத்தியம் இருக்கிறது.எனவே அரசியல மைப்புக்கான 19 வது திருத்தத்தில் இருந்த தைப் போன்று அரசியலமைப்பு பேரவைக் கான சிவில் சமூக பிரதிநிதிகளை பிரதமரும் எதிர்க்கட்சி தலைவரும் சேர்ந்து தெரிவு செய்வதாக இருக்கவேண்டும் என்று நாம் கோருகிறோம்.

*(2)* உள்ளடக்கத்திற்காகவும் எடுத்தியம்பப் பட்ட முறைக்காகவும் பலராலும் பாராட்டப் படுகின்ற தனது கொள்கை விளக்கவுரையில் ஜனாதிபதி சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்ற தனது யோச னையை மீண்டும் முன்வைத்தார்.முன்னதாக இது தொடர்பில் சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர் கடிதங்களை எழுதியிருந்தார்.பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பருமன் மற்றும் எண்ணிக்கையை பொருட்படுத்தாமல் சகல கட்சிகளுக்கும் சமமான முக்கியத்துவத்தை கொடுக்கக்கூடியதாக சர்வகட்சி அரசாங் கத்தை அமைக்குமாறு நாம் ஜனாதிபதியை

வலியுறுத்துகிறோம்.ஆட்சிமுறையில் தங்களுக்கு ஒரு உரிமை இருக்கிறது என்று ஒவ்வொரு கட்சியும் உணரக்கூடிய முறையில் அமைச்சரவையை அமைக்கவேண்டியது அவசியமாகும்.

*(3)* தன்னை இன்று ஜனாதிபதியாக ஆட்சி யதிகாரத்துக்கு கொண்டுவந்ததில் போராட்ட இயக்கம் ஆற்றிய முக்கியத்துவம் வாய்ந்த பங்கை அவர் அங்கீகரித்திருக்கிறார்.அமைக் கப்படவிருக்கும் தேசிய கொள்கை சபையில் போராட்ட இயக்கத்தவர்களுக்கு இடம் கொடுக்க ஜனாதிபதி முன்வந்திருக்கிறார். மேலும்,போராட்ட இயக்கத்தின் உறுப்பினர் களுக்கு சர்வகட்சி அரசாங்கத்தில் பிரதிநிதித் துவம் வழங்கப்படவேண்டும் என்று நாம் கோருகின்றோம்.

*(4)* கொள்கை விளக்கவுரையில் ஜனாதிபதி குறிப்பிட்டதைப் போன்று சகல சமூகங்களை யும் சேர்ந்த இளைஞர்களையும் குடும்பங்க ளையும் உள்ளடக்கிய மக்கள் போராட்டத் தின் பிரத்தியேகமான தன்மையை அவர் அங்கீகரிக்கவேண்டும் என்று நாம் கோருகி றோம். தற்போது தடுப்புக்காவலில் வைக்கப் பட்டிருப்பவர்களுக்கு அல்லது சட்ட

(18ஆம் பக்கம் பார்க்க)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# முயற்சிப் பகிர்வு

பகிர்வு -41

**கணபதி சர்வானந்தா**

முயற்சி திருவினையாக்கும் என்கிறார் வள்ளுவர். முயற்சி ஒரு பயிற்சி எனலாம். நீ ஏழையாகப் பிறந்துவிட்டேன் என்று சொல், அது உன் தவறல்ல, அதனை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நான் ஏழையாகச் சாகப்போகிறேன் என்று ஆதங்கப்படுவாயானால் அதனை உன் தவறு என்பேன். ஏனெனில் " நான் முயற்சி அற்றவனாக இருந்துவிட்டேன்"என்று நீ ஒப்புக் கொள்வதாகத்தான் அதனை எடுத்துக் கொள்ளலாம். எடுத்துக் கொள்வேன்.

ஒரு சதமும் இல்லாது ஆசியாவில் இருந்து அமெரிக்காவுக்கு வந்து நடிகனாகி பல இலட்சங்களைப் பார்த்த புரூஸ்லி என்ற நடிகன் தனக்குத்தானே ஒரு கடிதத்தை எழுதினானாம். "என்ர தி றகன்" என்ற திரைப்படத்தின் மூலம் கோடியைப் பார்த்தவன் அந்த புரூஸ்லி. அவன் எழுதிய அந்தக் கடிதத்தை இன்று அமெரிக்கர்கள் ஒரு பெறுமதிமிக்க ஆவணமாகப் பாதுகாத்து வைத்திருப்பதாகச் செய்தி உண்டு. அவனது விடா முயற்சி அவனை உச்சத்தைத் தொட வைத்தது என்று தான் சொல்லப்படுகிறது.

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும் (அதிகாரம்:ஆள்வினையுடைமை குறள் எண்:619)

அதற்குரிய பொழிப்பை மணக்குடவர் பின்வருமாறு எழுதுகிறார். புண்ணியம் இன்மையால் ஆக்கம் இல்லையாயினும் ஒருவினையின் கண்ணே முயல்வானாயின் முயற்சி தன்னுடம்பினால் வருந்திய வருத்தத்தின் அளவு பயன் கொடுக்கும் என்று அவர் முடிக்கிறார். வருந்திய வருத்தம் என்று அவர் குறிப்பிடுவது முயற்சியைக் குறிப்பதாகக் கண்டேன். தெய்வத்தின் துணையில்லாமையால் மேற்கொண்ட செயலில் எண்ணிய ஆதாயம் கிடைக்காமல் போனாலும் உடம்பு வருத்த உழைத்த தன் அளவுக்குப் பயன் கிடைத்தே தீரும்.

இன்றுவரை உலகால் அறியப்படுபவர் விஞ்ஞானி தோமஸ் ஆல்வா எடிசன். மின் விளக்கைப் பார்க்கும்தோறும் அவரது கண்டுபிடிப்பே மனக்கண் முன் தோன்றும். அதற்காக ஆயிரம் தடவைக்கு மேலாக முயன்றும் தோல்வியை மட்டுமே கண்டவர் அவர். இருந்தும் அவரது விடா முயற்சின் பயனாக இறுதியில் மின் விளக்கினைக் கண்டுபிடித்து உலகிற்கு ஒளியூட்டினார். உலகுக்கு ஒளியூட்டினார் என்பதைவிடப் பலரது வாழ்க்கைக்கு ஒளியூட்டினார் என்றுதான் பெருமைபடச் சொல்லலாம். அவர் செய்த முயற்சியினாலேயேதான் அனைவரது மனதிலும் இடம் பிடித்த விஞ்ஞானியாக இன்றும் திகழ்கின்றார். அதனாலேயே முயற்சி மனிதனின் உயிர் மூச்சு எனக் கூறப்படுகின்றது. "முயற்சி என்னை கைவிட்டதுண்டு ஆனால் முயற்சியை நான் ஒருபோதும் கைவிட்டதில்லை" என்று தோமஸ் அல்வா எடிசன் குறிப்பிட்டதையும் ஞாபகப்படுத்திக் கொள்ளுகிறேன்.

தனது வறுமையைக் காரணம் காட்டாது மேற் குறிப்பிட்ட விஞ்ஞானியான எடிசன் கண்டுபிடித்த தெரு விளக்கின் கீழ் உட்கார்ந்து படித்து உயர் கல்வியில் தேறினார் முத்துசாமி அய்யர். தாழ்ந்த குலத்தில் பிறந்து தனது விடாமுயற்சியால் சட்ட மேதையானவர் டாக்டர் அண்ணல் அம்பேத்கர். அவர் ஒரு மாபெரும் புரட்சியாளர் என்று இன்றும் இந்தியாவில் போற்றப்படுகின்றார்.

அவருக்கு இந்திய மண்ணில் பல இடங்களில் சிலைகளை நிறுவியிருக்கின்றனர். செருப்புத் தைப்பவரின் மகனாகப் பிறந்து தனது விடாமுயற்சியால் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியானார் ஆபிரகாம் லிங்கன். பல ஆண்டுகள் ஓய்வின்றி ஓடி ஓடி உழைத்து ரேடியத்தை கண்டுபிடித்து சாதித்தார் கியூரி அம்மையார்.

உழவரின் முயற்சியால் உணவைப் பெற்றுக் கொள்ளுகிறோம். நெசவாளரின் முயற்சியால் சிலையும், புலவரின் முயற்சியால் காவியமும் உருவாகுகின்றன.

முயற்சியின் சிறப்புகள் இவை. மழைக்காலத்தில் மகிழ்ச்சியாக வாழ உணவைச் சேமிக்கின்றன எறும்புகள். தேனீக்கள் தேன் கூடு கட்டுவது சிலந்தி வலை பின்னுவது குருவிகள் கூடு கட்டுவது போன்றவையும் முயற்சியின் சிறப்புக்களே.இவற்றை மனிதராகிய நமக்கு இயற்கை கூறும் சிறந்த முன்னுதாரணங்கள் எனக் கொள்ளலாம்.

தேங்கிக் கிடக்கும் நீர் சாக்கடையாக மாறுகிறது. பல தடைகளை உடைத்து முன்னேறிப் பாயும் நதியே இறுதியில் கடலை சேர்ந்து தனக்கான நிரந்தர இடத்தையும் அடையாளத்தையும் உருவாக்கிக் கொள்கின்றது. இது இயற்கையின் முயற்சி என்று சொல்லலாம்.

ஆபிரிக்க கறுப்பு இனத்தவரான நான் அமெரிக்க செனட் சபையின் உறுப்பினராக வரமுடியும் என்றால், கறுப்பினத்தவரும் வெள்ளையர்களும் கலந்திருக்கும் சம உரிமையுடைய தென்ஆபிரிக்கர்களின் கூட்டத்தில் நான் பேச முடியும் என்றால் மாற்றங்கள் வரும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. மாற்றங்கள் நிச்சயம் வரும். நாமும் முன்னேறிச் செல்வோம். – அமெரிக்க அதிபராக இருந்த ஒபோமா 2006 இல் கேப் ரவுன் நகரில் உரையாற்றியபோதே இதனைக் குறிப்பிட்டார். அவர் பேச்சில், செயலில், விளையாட்டில், சமூக சேவையில், சட்டத்துறையில் எனப் பல துறைகளில் தனது விடா முயற்சியால் முன்னேறியவர்.

வறுமை, எயிட்ஸ், ஊழல் எனப் பலவற்றில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த தென் ஆபிரிக்காவுக்கு விழிப்பூட்டியவர் அவர். இதனால் அவர் ஆபிரிக்க மக்களின் மனதில் நம்பிக்கையை விதைத்துக் கொண்டார்.

இதே போலத்தான் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த அன்ரூ கொனார்க்கி என்பவரும் கருதப்படுகிறார். அவரது தந்தை ஸ்கொட்லாந்தில் வேலை இழந்ததால் அமெரிக்காவில் குடியேறியவர். அப்போது கொனார்க்கிக்கு வயது பன்னிரண்டு.

இளமையில் கொடிய வறுமையை அனுபவித்தவர் அவர். தொடக்கத்தில் ஒரு பருத்தித் தொழிற்சாலையில் எடுபிடியாகப் பணியாற்றினார். பின்னர் பென்சிலேனியாவில் உள்ள ரயில் தொழிற்சாலையில் பணி கிடைத்தது. அவர் தனது 23 வயதில் தான் சேமித்து வைத்த பணத்தை எண்ணெய்த்தொழிலிலும், இரும்புத் தொழிலும் முதலீடு செய்தார். அயராத முயற்சியால் அவர் ஒரு பெருந் தொழில திபரானார்.ஒரு கால கட்டத்தில் அமெரிக்காவிலுள்ள பல தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு இவரது இரும்புத் தயாரிப்புகளையே நம்பியிருக்க வேண்டியிருந்தது.

இந்தியாவில், இராமநாதபுரத்தில் உள்ள வீடுகளுக்குப் பத்திரிகை போட்ட சிறுவன் பின்னாளில் இந்தியாவை விண்வெளியில் தலைநிமிர வைத்த கலாநிதி அப்துல்கலாம் ஆக மாற முடியும் என்றால்? அது போன்ற சாதனைகளைச் செய்ய நாமும் முயற்சிக்கலாமே!

# இந்தவார ராசிபலன் 07.08.2022 - 13.08.2022



ஒகஸ்ட் 07 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - ஆடி 22

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : தசமி




உங்கள் விருப்பம் நிறைவேறும். செயல்களில் விழிப்புணர்வு தேவை. உங்கள் முயற்சி நன்மையாகும்.எச்சரிக்கை அவசியம். எதிர்பார்ப்புகள் நிறைவேறத்தொடங்கும். முயற்சிக்கேற்ப பலன் உண்டாகும்.சந்திர பலத்தினால் சாதனை புரிவீர்கள். சந்திராஷ்டமம் என்பதால் எச்சரிக்கை அவசியம். உங்கள் எண்ணங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறும்.




உங்கள் முயற்சிகள் நடந்தேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நிதிநிலை உயரும். ஒவ்வொரு செயலிலும் கவனம் தேவை. நீங்கள் நினைப்பது நிறைவேறும். உங்கள் முயற்சிக்கேற்ற ஆதாயத்தை அடைவீர்கள். சங்கடங்கள் தோன்றும். அதன்பின் நிலைமை சீராகும். நற்பலன்கள் காணும் வாரம் இது. முயற்சிகள் இழுபறியாகும். சில சங்கடங்கள் உண்டாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறத் தொடங்கும். நன்மைகள் உண்டாகும்.




விருப்பங்கள் பூர்த்தியாகும் வாரம் இது. இழுபறியாக இருந்த முயற்சிகள் நிறைவேறும். வேலை தேடி வந்தவர்களுக்கு எதிர்பார்த்த வேலை அமையும். அந்நியர்களால் ஆதாயம் அதிகரிக்கும். செயல்களில் கவனம் தேவை. நீண்ட நாள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத்தை நவீனமயம் செய்வீர்கள். தடைபட்டிருந்த வருவாய் வர ஆரம்பிக்கும். முயற்சிகள் பலிதமாகும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.




திட்டமிட்ட செயல்களில் லாபநிலை உண்டாகும். மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உங்கள் செயல்களில் வேகம் இருக்கும். ஈடுபடும் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உங்களுடைய திறமை வெளிப்படும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். உங்கள் செயல்களை நிறைவேற்றிக் கொள்ள எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வீர்கள். நிதிநிலை உயரும். செல்வாக்கு அதிகரிக்கும்.




உங்கள் முயற்சிகள் நிறைவேறும். உங்களுடைய ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள முயல்வீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். லாபம் அதிகரிக்கும். உங்கள் வருமானம் அதிகரிக்கும். குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள். அரசு பணியாளர்களின் நிலை உயரும். விருப்பங்கள் பூர்த்தியாகும். வேலை வாய்ப்பிற்காக காத்திருந்தவர்களுக்கு நல்ல தகவல் வந்து சேரும். பொருளாதார நிலை உயரும்.




பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். உங்களுடைய முயற்சிகள் நிறைவேறும். அதன்பின் முயற்சிகளில் கவனம் தேவைப்படும் என்றாலும் வரவு அதிகரிக்கும். அரசு வழியிலான முயற்சிகள் ஆதாயமாகும். புதிய பொறுப்பு வந்து சேரும். அரசு ஊழியர்களின் விருப்பங்கள் நிறைவேறும். வெளிவட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். அரசு வழி செயல்கள் ஆதாயமாகும். பண வரவு எதிர்பார்த்த அளவிற்கு இருக்கும்.




செயல்களில் இழுபறி ஏற்பட்டாலும் அதன் பிறகு உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். வேலை வாய்ப்பிற்காக மேற்கொண்ட முயற்சி நிறைவேறும். ஒரு சிலர் புதிய தொழில் தொடங்குவீர்கள். பண வரவில் உங்கள் கவனம் செல்லும். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரம் விருத்தியாகும். வேலைக்காக மேற் கொண்ட முயற்சி நிறைவேறும். இறைவழிபாட்டை மேற்கொள்வதால் எண்ணங்கள் நிறைவேறத் தொடங்கும்.




திட்டமிட்டு செயல்பட்டு முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். வீண் செலவுகள் இருக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறப்படைவீர்கள். பொருளாதார நிலை உயரும். எதிரிகளின் தொல்லைகள் விலகும். எந்தவொரு செயலிலும் யோசித்து செயல்படுங்கள். குடும்பத்தினரின் நலனில் அக்கறை அதிகரிக்கும்.இழுபறியாக இருந்த வேலைகள் முடியும்.




மனதில் குழப்பங்களும் செயலில் தடைகளும் இருக்கும். முயற்சிகள் தள்ளிக்கொண்டு போகும். உங்கள் அலட்சியத்தால் சில இழப்புகளை சந்திப்பீர்கள்.உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். வரவேண்டிய பணம் வந்து சேரும். ஒரு முயற்சி லாபமாகும். பூர்வீக சொத்துகளில் பிரச்சினை ஏற்படும். அலைச்சல் அதிகரிக்கும். செயல்களில் கவனம் செலுத்த முடியாமல் மனம் குழப்பமடையும்.




வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். புதிய முயற்சிகள் லாபம் தரும். அதன்பின் தேவையற்ற செலவுகள் ஏற்படும் என்பதால் பண விஷயத்தில் கவனம் தேவை. செயல்களில் குழப்பம் உண்டாகும். உடல் நிலையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாளாக இருக்கும். தொழில், உத்தியோகத்தில் முன்னேற்றம் உண்டாகும். பழைய கடன்களை அடைப்பீர்கள்.




உங்கள் எண்ணங்கள் நிறைவேறும் வாரம் இது. எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். அரசு வகையிலான முயற்சிகள் நன்மையில் முடியும். வேலைக்காக முயற்சித்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். பொருளாதார நிலை உயரும். திட்டமிட்ட செயல்களில் லாபமடைவீர்கள்.உங்கள் தைரியம் அதிகரிக்கும். அலைச்சல் அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகள் உண்டாகும். தைரியமாக செயல்படக்கூடிய மன நிலை உண்டாகும்.




செயல்களில் கவனம் தேவை. அதன் பின் உங்கள் முயற்சிகள் ஆதாயம் தரும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகள் வழியே நன்மைகள் தோன்றும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். நெருக்கடிகளை சந்தித்தாலும் அதன்பின் உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். திட்டமிட்டு செயல்படுவீர்கள். மனதில் இருந்த குழப்பங்கள் விலகும். செயல்களில் சிரமத்தை அடைந்தாலும் அதன்பின் தெளிவுடன் செயல்படுவீர்கள். அனுபவ அறிவால் உங்கள் முயற்சிகளில் நன்மை அடைவீர்கள் என்றாலும் குடும்பத்தில் ஒரு நேரம் இருப்பது போல் மறு நேரம் இல்லாமல் போகும்.



## ஜெயம் ரவியுடன் பிரியங்கா

*ஜெயம் ரவி நடிப்பில் பொன்னியின் செல்வன், அகிலன் ஆகிய படங்கள் வெளியீட்டுக்கு தயாராகி வருகின்றன. தவிர அஹமது இயக்கத்தில் “ஜன கன மன” என்ற படத்திலும், அவரின் இயக்கத்தில் மற்றொரு படத்திலும் நடித்து வருகிறார்.*

*இந்நிலையில் ஜெயம் ரவியின் 30 ஆவது படத்தை “பாஸ் என்கிற பாஸ்கரன், ஒரு கல் ஒரு கண்ணாடி” போன்ற படங்களை இயக்கிய ராஜேஷ் இயக்குகிறார். நாயகியாக பிரியங்கா அருள் மோகன் நடிக்கிறார். வில்லனாக நட்டி என்கிற நட்ராஜ் நடிக்கிறார். ஹரிஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார்.*

## சங்கர் படத்தில் சூர்யா



*லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் கமல் நடித்திருந்த விக்ரம் படத்தில் ரோலக்ஸ் என்ற ஒரு சிறப்புத் தோற்றத்தில் நடித்திருந்தார் சூர்யா. ஐந்து நிமிடம் மட்டுமே விக்ரம் படத்தில் இடம் பெற்ற அந்தப் பாத்திரத்தில் பெரிய அளவில் ரசிகர்களை கவர்ந்தது.*

*இதையடுத்து சுதா இயக்கத்தில் அக்ஷய்குமார் நடித்து வரும் சூரரைப் போற்று ஹிந்தி ரீமேக் படத்திலும் சிறப்புத் தோற்றத்தில் நடிக்கிறார் சூர்யா. இந்த நிலையில் தற்போது ராம்சரண் நடிப்பில் ஷங்கர் இயக்கி வரும் இன்னமும் பெயரிடப்படாத படத்திலும் சூர்யா ஒரு சிறப்புத் தோற்றத்தில் நடிக்க இருக்கிறார். இப்படத்தில் சூர்யா நடிக்கும் வேடம் 10 நிமிடங்கள் வரை இடம்பெறுகிறதாம். விக்ரம் படத்தை விட சூர்யா நடிக்கும் இந்த வேடம் மிகப் பெரிய அளவில் ரசிகர்கள் மத்தியில் பேசப்படக் கூடியதாக இருக்கும் என்று கூறப்படுகிறது.*

## புஷ்பா 2இல் பிரியாமணி



*சுகுமார் இயக்கத்தில் அல்லு அர்ஜுன், ராஷ்மிகா, பஹத்பாசில் நடிப்பில் தெலுங்கில் உருவாகி தமிழ், ஹிந்தி உள்ளிட்ட மொழிகளில் வெளியாகி வரவேற்பையும், வெற்றியையும் பெற்ற படம் “புஷ்பா”. இதன் இரண்டாம் பாகம் அதே கூட்டணியில் தயாராகிறது. பிரமாண்டமாக தயாராகும் இந்தப் படத்தில் இன்னும் சில முக்கிய நடிகர்களையும் நடிக்க வைக்க பேசி வருகின்றனர்.*

*முதல் பாகத்தில் வில்லனாக நடிக்கவிருந்த விஜய் சேதுபதி இரண்டாம் பாகத்தில் நடிப்பது உறுதியாகியுள்ளது. இந்நிலையில் பருத்தி வீரன் பிரியாமணி இந்த படத்தில் ஒப்பந்தமாகியுள்ளார். இப்படத்தில் அவர் ஒரு வலுவான பாத்திரத்தில் கிட்டத்தட்ட வில்லி வேடத்தில் நடிக்கிறார் என்று கூறப்படுகிறது. இவர் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக நடிக்கிறாராம்.*



## நாயகியாகிறார் ஷெரின்

*ஏ. எஸ். என்டர்டெயின்மென்ட் சார்பில் அலெக்சாண்டர் தயாரிக்கும் புதிய படத்தை வி. பி. நாகேஸ்வரன் இயக்குகிறார். இவர் ஏற்கனவே தொட்டுவிடும் தூரம் என்கிற படத்தை இயக்கியவர். விக்ராந்த் கதாநாயகனாக நடிக்கும் இந்த படத்தில் இன்னொரு நாயகனாக புதுமுகம் நடிக்கிறார்.*

*டிக்கிலோனா படத்தில் நடித்த ஷெரின் கஞ்ச்வாலா கதாநாயகியாக நடிக்கிறார். தென் மாவட்டங்களின் வாழ்வியல் சார்ந்து சமூக அக்கறை மற்றும் அதிரடி கலந்த குடும்பப் பாங்கான கதை அம்சத்துடன் இந்த படம் உருவாகிறது.*

## விலகிய லோகேஷ்

‘விக்ரம்’ படம் இயக்குநர் லோகேஷ் கனகராஜை இந்திய அளவில் அடையாளப்படுத்தியது. இப்படத் தைத் தொடர்ந்து நடிகர் விஜயுடன் லோகேஷ் கனகராஜ் மீண்டும் இணைகிறார். ‘விஜய் 61’ என அழைக்கப்படும் அப்படத்திற்கான ஆரம்ப பணிகள் நடக்கின்றன. ஒக்ரோபரில் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.

இந்நிலையில், சமூக வலைதளங்களில் இருந்து சில நாட்கள் விலகி இருக்கப் போவதாக அறிவித்துள்ளார் லோகேஷ். “நான் அனைத்து சமூக ஊடக தளங்களில் இருந்து சிறிது இடைவெளி எடுத்துக்கொள்ள நினைக்கிறேன். எனது அடுத்த படத்தின் அறிவிப்புடன் நான் விரைவில் திரும்பி வருவேன். அதுவரை அனைவரையும் பார்த்துக்கொள்ளுங்கள்” எனப் பதிவிட்டுள்ளார். விஜய் 61 படத்துக்கான கதையை எழுதத் தொடங்கியதால் அதில், கவனம் செலுத்தவே இந்த இடைவெளி என்று கூறப்படுகின்றது.

## இமான் இசையில் பாடிய ஈழத் தமிழ்ப் பெண்

*பிரபுதேவா, ரைசா வில்சன், வரலட்சுமி, பிரகாஷ்ராஜ், சமுத்திரக்கனி ஆகியோர் நடிப்பில் உருவாகியிருக்கும் படம் பொய்க்கால் குதிரை. இந்தப்படம் கடந்த வெள்ளிக்கிழமை திரைக்கு வந்தது.*

*இதில், ஈழ தமிழ் பாடகி ஆஷ்னா சசிகரன் என்பவரை பாட வைத்துள்ளார் இசையமைப்பாளர் டி இமான். தற்போது அவர் இங்கிலாந்தில் இருக்கிறார். இந்தப் பாடலை கார்க்கி எழுதியுள்ளார்.*

*இதற்கு முன்பும் தனது இசையில் பல திறமை வாய்ந்த புதிய பாடகர்- பாடகிகளை டி. இமான் அறிமுகம் செய்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.*






**திரைப்படம் - எண்ணித் துணிக கருமம்**
**இயக்கம் - வெற்றிச்செல்வன்**
**இசை - சாம் சிஎஸ்**
**நடிப்பு - ஜெய், அதுல்யா ரவி, அஞ்சலி நாயர்**

இயக்குநர் வெற்றிச்செல்வன் ஆரம்பத்தில் ஓர் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி அதன்பின் கொஞ்சம் பரபரப்பை ஏற்படுத்தி பல திருப்பங்களுடன் படத்தை முடிக்க முயற்சித்திருக்கிறார். சில இடங்களில் பரபரப்பாகவும், சில இடங்களில் கொஞ்சம் தொய்வாகவும் நகர்கிறது கதை. ஆனாலும், சில முக்கிய திருப்பங்கள் படத்தைக் காப்பாற்றுகிறன.

ஜெய், அதுல்யா ரவி காதலர்கள். நகை ஒன்றை வாங்குவதற்காக அதுல்யா அமைச்சரின் பினாமி நகைக் கடை ஒன்றுக்குள் செல்கிறார். அந்த சமயம் அங்கு வரும் முகமூடி கொள்ளையர்கள் அங்குள்ள 2000 கோடி மதிப்பு வைரத்தைக் கொள்ளையடித்ததுடன், அதுல்யா உள்ளிட்ட சிலரைக் கொன்றுவிட்டுச் செல்கிறார்கள். தன் காதலியைக் கொன்றவர்களை பழி வாங்கத் துடிக்கிறார் ஜெய். அந்தக் கொள்ளையர்களை அவர் கண்டுபிடித்தாரா, பழிக்குப் பழி வாங்கினாரா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

படத்தின் ஆரம்பம் வைரக் கொள்ளையில் ஆரம்பித்தாலும், அதற்கு பிறகு காதல் படமாக மாறிவிடுகிறது. ஜெய், அதுல்யா இடையிலான காதலை பற்றிச் சொல்ல அதிக நேரம் எடுத்திருக்கிறார் இயக்குநர். அதன்பிறகே த்ரில்லர் கதைக்கு வருகிறார். ஒரு பக்கம் அமைச்சர் தனக்குச் சொந்தமான 2000 கோடி வைரத்தை பறி கொடுத்தது, இன்னொரு பக்கம் கொள்ளையடித்த வைரத்தைக் காணாமல் வம்சி தலைமையிலான கொள்ளைக் கூட்டம் தவிப்பது, வம்சியை இந்த வேலையைச் செய்யச் சொன்ன அமெரிக்காவைச் சேர்ந்த சுரேஷ் மிரட்டுவது, மற்றொரு பக்கம் தன் காதலியைப் பறி கொடுத்ததால் பழி வாங்க ஜெய் துடிப்பது என திரைக்கதையை நகர்த்தியிருக்கிறார் இயக்குநர்.



காதலியைக் கொன்றவர்களை பழி வாங்கத் துடிக்கும் காதலனாக ஜெய். முழுமையான அதிரடி நாயகனாக மாறி நடித்திருக்கிறார். சண்டைக் காட்சிகளில் அனல் பறக்க வைக்கிறார். பொலிஸ விசாரித்து செல்வதற்கு முன்பாகவே ஜெய் வேகவேகமாக விசாரிக்கிறார். ஒரு த்ரில்லர் படத்தில் கதாநாயகன் என்னவெல்லாம் செய்வாரோ அதைச் செய்ய வைத்திருக்கிறார் இயக்குநர்.

ஜெய்யின் காதலியாக அதுல்யா ரவி. மதுபான கடைகளை எதிர்த்துப் போராடும் ஒரு போராளி. கல்லூரியில் படித்த காலத்தில் ஜெய்யை அதுல்யா காதலிக்க அவரை நிராகரிக்கிறார் ஜெய். ஆனால், நான்கு வருடங்களுக்குப் பிறகு தன் தவறை உணர்ந்து அதுல்யாவை விரட்டி விரட்டி காதலிக்கிறார் ஜெய். கொஞ்ச நேரமேதான் வருகிறார் அதுல்யா. இன்னும் “ழ“ உச்சரிப்பை எப்போது சரியாக சொல்லப் போகிறாரோ ?.

நகைக்கடை கொள்ளையில் கொள்ளையர்களிடம் சிக்கி உயிர் பிழைத்தவராக அஞ்சலி நாயர், தனது வைரங்களைப் பறி கொடுத்த அமைச்சராக சுனில், அவரின் ஆசை நாயகியாக வித்யா பிரதீப், நகைகளைக் கொள்ளையடிப்பவராக வம்சி என மற்ற கதாபாத்திரங்களின் நடிப்பும் பரவாயில்லை.

சாம் சிஎஸ் பின்னணி இசை பல இடங்களில் ஒரே மாதிரி இருக்கிறது. “விக்ரம் வேதா“ படத்துக்கு இசையமைத்தவரா என ஆச்சரியப்பட வைக்கிறார்.

“எண்ணித் துணிக“ என அருமையான தலைப்பை யோசித்த இயக்குநர் அருமையான படத்தைக் கொடுக்க வேண்டும் என்ற முயற்சியில் இறங்கி அதை ஓரளவு நிறைவேற்றியும் இருக்கிறார். சில பல குறைகளைத் தவிர்த்திருந்தால் பாராட்டும்படியான த்ரில்லர் படமாக அமைந்திருக்கும்.

# ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு தொடர்பில் ரணிலின் நழுவல் போக்கு

## கொள்கை விளக்கவுரையில் வரவேற்கப்படவேண்டிய பல அம்சங்கள் இருந்தாலும், நடைமுறையில் என்ன ஆகுமோ?



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

ரணில் விக்கிரமசிங்க தனது 45 வருடகால பாராளுமன்ற அரசியல் வாழ்வில் 6 தடவைகள் பிரதமராகவும் அதற்கு முன்னர் அமைச்சராகவும் பெருமளவு உரைகளை நிகழ்த்தியிருக்கிறார். ஆனால், இலங்கையின் புதிய ஜனாதிபதி என்ற வகையில் கடந்தவாரம் தற்போதைய பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை சம்பிரதாய பூர்வமாக தொடக்கிவைத்து நிகழ்த்திய நீண்ட கொள்கை விளக்கவுரை இதுகாலரையிலான அவரின் உரைகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அது பரவலான வரவேற்பை பெற்றிருக்கிறது. உரை என்ற வகையில் அதற்கு இருக்கக்கூடிய முக்கியத்துவத்துக்கு நிகரான முறையில் அவரது அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமையவேண்டியது அவசியமாகும்.

நாட்டின் இன்றைய நெருக்கடி நிலையில் இருந்து மீட்பதற்கு சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு முன்வருமாறு சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி விக்கிரமசிங்க முன்னதாக கடிதங்களை எழுதியபோது அவரது யோசனைக்கு கிடைக்காத வரவேற்பு அதிகப்பெரும்பாலான கட்சிகளிடமிருந்து இந்த கொள்கை விளக்கவுரைக்கு பிறகு கிடைத்திருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. ஒன்றிரண்டைத் தவிர பாராளுமன்ற கட்சிகள் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது குறித்து அவருடன் பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டிருக்கின்றன.

நம்பிக்கை இழந்த நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கான பரந்தளவிலான அரசியல் மற்றும் பொருளாதார திட்டங்களை தனதுரையில் ஜனாதிபதி அறிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை உடனடியாக அமைப்பது, கொள்கைகள் தொடர்பில் அரசாங்கத்துக்கு ஆலோசனைகளை வழங்குவதற்கு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளினதும் தலைவர்களை உள்ளடக்கிய தேசிய சபையையும் குடிமக்களின் பல்வேறு தரப்புகளையும் உள்ளடக்கிய மக்கள் சபையையும் அமைப்பது, ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தி பாராளுமன்றத்தின் அதிகாரங்களை அதிகரிப்பதற்கு அரசியலமைப்பில் திருத்தங்களை செய்வது ஆகியவை ஜனாதிபதியின் திட்டங்களில் முக்கியமானவை.

தேசிய சபையின் முதலாவது பணி குறைந்தபட்ச பொது வேலைத் திட்டத்தை வகுப்பதாகும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி இன, மத அடிப்படையிலான பகைமைகள் இல்லாத இலங்கை ஐக்கியத்தை கட்டியெழுப்புவது அந்த சபையின் இலக்காக இருக்கும் என்று கூறினார்.

சகல தரப்பினரதும் அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் கேட்டறிந்து வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட்டு சமூக, அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களுக்கான தேசிய திட்டமொன்றைத் தயாரிக்கும் பொறுப்பு மக்கள் சபையிடம் ஒப்படைக்கப்படும் என்று கூறிய விக்கிரமசிங்க அந்த சபையின் செயற்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் மீது அரசாங்கம் எந்தவிதமான செல்வாக்கையும் செலுத்தாத வகையில் அது சுதந்திரமான அமைப்பாக இருக்கும். அரசாங்கம் அதற்கு தேவையான வளங்களை மாத்திரமே வழங்கும் என்றும் ஒருங்கமைவு பல்வேறு கட்சிகளுடனும் கலந்தாலோசித்து தீர்மானிக்கப்படும் என்று கூறினார்.



பொருளாதார ரீதியில் இன்று நாடு வங்குரோத்து நிலையை அடைந்தமைக்கு காரணமாயமைந்த கடந்த கால தவறுகள் குறித்து விளக்கிக்கூறிய ஜனாதிபதி அடுத்த 25 வருடங்களுக்கான தேசிய பொருளாதாரக் கொள்கையொன்று வகுக்கப்படும் என்றும் அந்த கொள்கை வறியவர்களுக்கும் வசதி குறைந்த பிரிவினருக்குமான அபிவிருத்தியை உறுதிசெய்வதற்கும் சிறிய மற்றும நடுத்தர தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்குமான சமூக சந்தைப் பொருளாதார முறைமையொன்றுக்கான (Social market economic system) அத்திபாரத்தை அமைக்கும். தேசிய பொருளாதார கொள்கையின் ஊடாக தேசத்தையும் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்பினால் இலங்கை சுதந்திரம் பெற்ற நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடும்போது 2048 ஆம் ஆண்டில் முழுமையான அபிவிருத்தியடைந்த நாடாக விளங்கும் என்றும் தெரிவித்தார். பொருளாதார முனையில் அது அவரது கனவாக இருக்கிறது.

தமிழச்சமூகம் நீண்டகாலமாக எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வொன்றைக் காணவேண்டிய அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தியிருப்பது கவனிக்கத்தக்கது. தென்னிலங்கை அரசியல் சமுதாயத்தின் பெரும் பகுதியும் தேசிய இனப்பிரச்சினை குறித்து எந்தவித அக்கறையும் இல்லாமல் இருக்கும் ஒரு நேரத்தில் அவரிடமிருந்து அரசியல் தீர்வின் அக்கறை வெளிப்பட்டிருக்கிறது.

போரின் காரணமாக தமிழ் மக்கள் பல சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகளினால் இடர்பாடுகளை அனுபவித்து வருகிறார்கள். தீர்க்கப்படவேண்டிய நிலப்பிரச்சினைகளும் இருக்கின்றன. வடக்கின் அபிவிருத்தி பணிகள் குறித்து புதிதாக சிந்திக்கவேண்டியிருக்கிறது.

இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதில் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுடன் நெருக்கமாக பணியாற்றுவதன் மூலம் அவர்களது ஆதரவை பெறலாம் என்று எதிர்பார்க்கிறோம். தாய்நாட்டுக்கு வந்து அவர்கள் முதலீடுகளை செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம் என்று தனதுரையில் கூறி நல்லிணக்கத்துக்கான தெளிவான சமிக்ஞையை ஜனாதிபதி காட்டியிருக்கிறார். தனது திட்டங்களுக்கு தமிழ் கட்சிகளின் ஒத்துழைப்பை பெறுவதும் அவரின் இந்த அறிவிப்பின் ஒரு நோக்கமாக இருக்கும். மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காணவேண்டியதன் அவசியமும் அவரது உரையில் வலியுறுத்தப்பட்டது.

கடந்த நான்கு மாதங்களாக இடம்பெற்றுவந்த “அறகலய” மக்கள் கிளர்ச்சி போராட்டங்களில் இனவாத அரசியலுக்கு எதிராக இளைஞர்களில் கணிசமான பிரிவினர் எழுப்பிய குரலை அங்கீகரிப்பவராகவும் ஜனாதிபதி கருத்துவெளியிட்டிருக்கிறார்.

“இன்று பெரும்பான்மையான இளைஞர்கள் இனவெறிக்கும் மதவெறிக்கும் எதிராக குரல் எழுப்புகிறார்கள். இனங்கள் மத்தியில் நல்லுறவும் சமாதானமும் நிலவவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன. தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் உட்பட சகல இனக்குழுக்களும் சமத்துவமாக நடத்தப்படவேண்டும் என்று சிங்கள இளைஞர்கள் கூறுகிறார்கள் ” என்று அவர் தனதுரையில் குறிப்பிட்டார்.

இனவாதத்தையே தங்களது பிரதான அரசியல் தளமாகக் கொண்டு செயற்பட்ட ராஜபக்சாக்களின் ஆட்சியின் வீழ்ச்சிக்குப்பிறகு அதிகாரத்துக்கு வந்திருக்கும் ஜனாதிபதி விக்கிரமசிங்க, இனவாத அரசியலின் பாதகங்கள் குறித்து தனது கொள்கை விளக்கவுரையில் குறிப்பிட்டது மிகவும் கவனிக்கத்தக்கது.

இது இவ்வாறிருக்க, சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதில் ஜனாதிபதியினால் எந்தளவுக்கு வெற்றிபெறக்கூடியதாக இருக்கும் என்ற கேள்வி எழுகிறது. பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பல்வேறு கட்சிகளும் அவருடன் பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டிருக்கின்றன. அது சர்வகட்சி அரசாங்கமாக இருக்குமா அல்லது பலகட்சி அரசாங்கமாக இருக்குமா என்று யோசிக்கவேண்டியிருக்கிறது. பரவலாக ஒத்துழைப்பு கிடைத்தாலும் சகல கட்சிகளும் அரசாங் கத்தில் இணைவதற்கான சாத்தியம் இல்லை என்றே தெரிகிறது.

இங்கு நாம் ஒரு முக்கிய விடயத்தை கவனிக்க வேண்டும். சர்வகட்சி அரசாங்கம் என்ற யோசனை விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்த பிறகு முன்வைக்கின்ற ஒரு யோசனையல்ல. கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது சில மாதங்களுக்கு முன்னரே சர்வகட்சி அரசாங்கம் குறித்து பேசப்பட்டது. அதாவது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துக்கு (ஒரு 6 மாதங்களுக்கு அல்லது சற்றும் கூடுதலான காலத்துக்கு) இடைக்கால சர்வகட்சி அரசாங்கத்தை அமைத்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை சாத்தியமானளவு விரைவாக ரத்துச் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்வதும் தேர்தல்களுக்கு போவதுமே அப்போது முன்வைக்கப்பட்ட யோசனையின் அடிப்படையாக இருந்தது.




(09 ஆம் பக்கம் பார்க்க...)

# சிறிலங்காவில் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படுமா? ரணில் அரச தலைவர் பதவியில் நீடிப்பாரா?:

## ஜோதிடர்கள் அலசல்!

சிறிலங்காவில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் பொருளாதாரத்தில் மறுமலர்ச்சி ஏற்படும் என்றும் ஜனாதிபதியாக எதிர்காலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் ஜோதிடர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை கொழும்பில் இருந்து வெளியாகும் வார ஏட்டில் வெளியான சிறிலங்கா தொடர்பான ஜோதிடர்களின் அலசல் தொடர்பான கட்டுரையின் முக்கிய பகுதிகள்:



### ஜோதிட நிபுணர் எஸ்.ஜே.சமரகோன்

செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களில் குறிப்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். இது நிர்வாக மட்டத்தில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தும். பிரச்சினைகள் மற்றும் தடைகள் எதுவாக இருந்தாலும், ஜனவரி 2023 வரையிலான நேரத்தை பொறுமையாகவும் புத்திசாலித்தனமாகவும் கையாள வேண்டும்.

எதிரிகளின் இடையூறுகள் மற்றும் பாதுகாப்பு குறித்து ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

ஜனவரி 2023-க்குப் பின்னர், தற்போதைய தடை அபாயம் குறைவாக இருக்கும். தற்போதைய போராட்ட நிலையை ஏப்ரல் 2023 வரை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் 2023 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாடு படிப்படியாக முன்னேறும்.

நல்ல அதிர்ஷ்டத்தைத் தக்கவைக்க, ராஜபக்சகளிடமிருந்து சாபம் அகற்றப்பட வேண்டும்.

திருடர்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, சட்டத்தை முறையாகச் செயற்படுத்தி, துன்பப்படும் மக்களை மீட்க வேண்டும். பின்னர் மக்களின் ஈர்ப்பை பெற்று 2025-க்கு பின்னரும் ஜனாதிபதி என்பது உறுதி.

### ஜோதிட நிபுணர் கிவிபதி, ஜெயதிர்வேதினி

சிறிலங்காவின் ஜாதகத்தில் இரண்டாவதாக உள்ள வியாழன் கிரகமான நெப்டியூனின் செல்வாக்கின் காரணமாக தேசிய பண நிலைமையை மேம்படுத்துவதற்கான வழிகளைக் கண்டுபிடிக்க அரசாங்கம் தவறிவிட்டது.

அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 10 ஆம் வீட்டிற்கு அதிபதியான செவ்வாய், சிறிலங்காவின் 4 ஆம் வீட்டிற்கு 2022 ஒகஸ்ட் 14 திகதி தொடக்கம் 2023 மார்ச் 14 வரை சஞ்சரிப்பதால், அரசாங்கம் பிரச்சனைகளை சந்திக்கும், இயற்கை பேரழிவுகள் அதிகரிக்கும், எதிர்க்கட்சிகள் வலுவடையும்.

இந்நிலையின் யதார்த்தத்தை அறியாமல் அனைத்துலக நாடுகளின் தலையீட்டின் மூலம் அரசை நலிவடையச் செய்தது கோள்களின் தாக்கம் என்று தோன்றுகின்றது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜோதிட நிபுணர் சரத்சந்திர போத்தலாவின்

நாட்டு மக்களின் வாக்கு மூலம் நாட்டின் ஜனாதிபதியாகும் அதிகாரம் ரணிலுக்கு இல்லை.

எவ்வளவு முயன்றாலும் மக்கள் இறையாண்மையின் பலத்தால் ஜனாதிபதி ஆவதற்கு கிரக பலம் இல்லை என்றே கூறலாம். தற்போது கேது இடைக்கால தசாவைக் கழிக்கிறார். கழித்த பத்தாண்டுகள் மிகவும் சாதகமற்றவை. அவர் தனது பாதுகாப்பில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

ஒருவருக்கு நல்லது கெட்டது ஆகிய இரண்டு நிலைகளும் கிடைக்கும். கோட்டாபயவுக்கு ஜனாதிபதி பதவி கிடைத்தது துரதிர்ஷ்டம். மக்களின் அதிருப்தியை இழந்த அவர் தனது பதவியை கூட இழந்த தற்கு காரணம் அவருக்கு ஜனாதிபதி பதவி கிடைத்ததுதான்.

துரதிர்ஷ்டத்திற்கு ஜனாதிபதி பதவியையும் ரணில் பெற்றார். அவர் எதிர்காலத்தில் கடுமையான கஷ்டங்களை சந்திக்க வேண்டியிருக்கும். ரணில் அவர்களின் ஜன்ம அட்டவணைப்படி அவர் நீண்ட காலம் பதவியில் இருக்க முடியாது.

கடந்த காலங்களில் பெரும் தியாகங்களை செய்து நாட்டை உறுதியான நிலைக்கு கொண்டு வந்த போதும் அதிகா ரத்தை விட்டுக்கொடுக்க வேண்டிய சந் தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

இம்முறை ஜனாதிபதியாக இருந்தும் அவருக்குக் கிடைத்தது அரச கிரீடம் அல்ல முள் கிரீடம். ஜூலை 21 ஆம் திகதி அவர் பதவியேற்ற நேரத்தில், தற்போதைய கிரக நிலை மிகவும் அசுபமாக இருந்தது.

8 ஆம் இடத்தில் சந்திரன், செவ்வாய், ராகு இருக்கும் நேரத்தில் கன்னி ராசியில் உதிப்பது அசுப ஸ்தானம். செவ்வாய் மற்றும் ராகுவின் எரிப்புகள் சந்திரனை விதைக்கின்றன. பதவிப் பிரமாணம் செய்து 24 மணி நேரத்திற்குள் போராட்டத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மூலம் அது தெளிவாக நிரூபணமானது.

இருப்பினும், அவர் எதிர்காலத்தில் கடுமையான சிரமங்களை சந்திக்க நேரிடும். நாட்டை உறுதியான நிலைக்கு கொண்டு வருவதற்கு அனைத்து கட்சி ஆட்சிக்கு செல்ல வேண்டியது அவசியம்.

# ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு ...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் விக்கிரமசிங்க அத்தகைய காலவரையறை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. அதையே காரணம் காட்டி ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) சர்வகட்சி அரசாங்கத்தில் இணைய முடியாது என்று அறிவித்திருக்கிறது.

அரசியலமைப்புக்கான 22 வது திருத்தவரைவு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்க காலத்தில் நிறைவேற்றப்பட்ட 19 வது அரசியலமைப்பு திருத்தத்தின் முக்கியமான ஏற்பாடுகளை புதிய திருத்தவரைவு கொண்டிருப்பதாக ஜனாதிபதியே பாராளுமன்றத்தில் கூறினார்.

அவரைப்பொறுத்தவரை இந்த திருத்தத்தை நிறைவேற்றுவதில்தான் கவனத்தைச் செலுத்துகிறார். 19 வது திருத்தத்தில் குறைபாடுகள் இருந்தாலும் ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பது தொடர்பில் அதில் இருந்த முக்கியமான ஏற்பாடுகள் எல்லாம் புதிய வரைவில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனவா என்பது தெரியவில்லை.

22வது திருத்தத்தின் மூலமாக சகலவற்றையும் சாதித்துவிடமுடியாது. தொடர்ச்சியான பல சீர்திருத்தங்களுக்கு இது ஒரு அடிப்படையே என்றும் ஜனாதிபதி கூறுகிறார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது தொடர்பில் கொள்கை விளக்கவுரையில் துல்லியமில்லாத கருத்தையே அவர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஜனாதிபதி ஆட்சிமுறை தொடர வேண்டுமா? எமது நாட்டுக்கு எத்தகைய ஆட்சிமுறை பொருத்தமானது? ஆட்சிமுறை எவ்வாறு சீர்திருத்தப்பட வேண்டும்? என்ற விவகாரங்களை ஆராயும் பொறுப்பை உத்தேச மக்கள் சபையிடமே ஜனாதிபதி விட்டுவிடுகிறார்.

கடந்த காலத்தில் பல ஜனாதிபதி தேர்தல்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு பற்றி வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. ஆனால் அவ்வாறு வாக்குறுதியளித்து பதவிக்கு வந்த எந்த ஜனாதிபதியும் அந்த ஆட்சிமுறையை ஒழிக்கவில்லை. எவராவது அந்த ஆட்சிமுறையை ஒழித்தாலும் கூட பின்னர் அதிகாரத்துக்கு வரக்கூடியவர்கள் அதே ஆட்சிமுறையை மீண்டும் கொண்டுவரமாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதமில்லை என்ற வாதத்தை முன்வைக்கும் விக்கிரமசிங்க, தேசிய கருத்தொருமிப்பின் அடிப்படையில் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதே பொருத்தமானது என்கிறார்.

அந்த தேசிய கருத்தொருமிப்பை காணும் பொறுப்பை அவர் உத்தேச மக்கள் சபையிடம் ஒப்படைக்கப்பார்க்கிறார். அதனால் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு தொடர்பில் முன்னெடுக்கப்படவேண்டிய ஏற்பாடுகளில் இருந்து தனது தலைமையில் அமையக் கூடிய அரசாங்கத்தை அவர் விலக்கி வைக்க முற்படுகிறார் என்றே தோன்றுகிறது.



கடந்த 44 வருடங்களாக நடைமுறையில் இருந்து வரும் ஜனாதிபதி ஆட்சி முன்னென்றும் இல்லாத வகையில் மக்களின் வெறுப்புக்கு ஆளாகியிருக்கிறது. எவ்வளவுதான் ஜனாதிபதியிடம் அதிகாரங்கள் குவிந்திருந்தாலும் தவறான ஆட்சிமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்கள் ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் வாசற்படிவரை வந்து அந்த அதிகாரங்களை உலுக்கிய பிறகு அந்த பதவிக்கு இருக்கக்கூடிய “மதிப்பின்“ அளவை ஜனாதிபதி விக்கிரமசிங்க உணர்ந்திருக்கிறார் போலும்.

அதனால்தான் மக்களுக்கு மேலாக போற்றக்கூடிய ஒரு மன்னராகவோ அல்லது கடவுளாகவோ நாட்டின் ஜனாதிபதி இருக்கவேண்டியதில்லை. அவரும் குடிமக்களில் ஒருவரே. அதனால் ஜனாதிபதிக்கு என்று தனியான கொடி, தனியான இலச்சினை, தனியான கௌரவ பட்டங்கள் எல்லாம் தேவையில்லை என்று அவர் அறிவித்தார். எல்லாவற்றுக்கும் மேலாக பதில் ஜனாதிபதியாக கோட்டாபயவினால் நியமிக்கப்பட்ட உடனடியாகவே விக்கிரமசிங்க ஜனாதிபதியை “அதிமேதகு“ என்று இனிமேல் அழைக்கத்தேவையில்லை என்று முடிவெடுத்தார். பாராளுமன்ற உறுப்பினர்களை “கௌரவ“ என்று அழைக்கவேண்டுமா இல்லையா என்பதையும் அவர் கூறியிருக்கலாம்.

என்னதான் இருந்தாலும், ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பை மானசீகமாக விரும்புகின்ற ஒருவராக விக்கிரமசிங்க ஒருபோதும் அடையாளம் காணப்பட்டவர் அல்ல. அது விடயத்தில் இன்னமும் அவர் நழுவல் போக்கையே வெளிப்படுத்துகிறார்.

ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு எதிராக நாட்டு மக்கள் கிளர்ந்தெழுந்திருக்கும் இன்றைய சூழ்நிலை அதை ஒழிப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கு மிகவும் வாய்ப்பானதாகும். முன்னென்றும் கிடைத்திராத இந்த அரிய வாய்ப்பும் அரசியல் வர்க்கத்தினால் தவறவிடப்படக்கூடிய ஆபத்தே இருக்கிறது.

# கூட்டமைப்பும் சஜித் பிரேமதாச கட்சியும் தங்கள் தரப்பினரின் தாவலைத் தடுக்கவே

# ரணிலின் சர்வ கூட்டுக்கு வெள்ளைக்கொடி!

**பனங்காட்டான்**

இலங்கை அரசியலில் உருவான இடர்காலம் என்பது இடைக்காலமாக மாறி, இப்போது நிலைமாறு காலமாக ஆகியுள்ளது. கடந்த மாதம் 20ஆந் திகதி ஜனாதிபதியாகத் தெரிவாகிய ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வரும் சர்வகட்சி அரசாங்கம் என்பது பல்வேறு கட்சிகளின் கூட்டாக்கப்படுகிறது.

மைத்திரி - ரணில் இணைப்பில் இயங்கிய நல்லாட்சி அரசுதான் இப்போது ரணிலின் தனித் தலைமையில் சர்வகட்சி அரசாக, பல கட்சிகளை உள்வாங்கி உருவாக்கப்படுவதைப் பார்க்க முடிகிறது.

அடுத்த இரண்டரை ஆண்டுகளுக்கு தம்மை அசைக்க முடியாத தலைவராக ரணில் அமைத்துக் கொள்ளும் நிலைமைக்கு இலங்கையின் பொருளாதாரமுடை, நிதிப்பற்றாக்குறை மட்டும்தான் காரணம் என்றில்லை. சகல அரசியற்கட்சிகளும் தனித்தும், இணைந்தும் இயங்க முடியாத நிலைக்கு அதன் தலைமைகள் தள்ளப்பட்டுள்ளமையே இதன் அடிப்படை.

மகிந்தவின் பொதுஜன பெரமுன இரண்டாகிக் கொண்டிருக்கிறது. சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் கட்சி ஏற்கனவே பிளவு கண்டுவிட்டது. மலைய மக்கள் முன்னணியின் தலைமைக்குள் பனிப்போர் இடம்பெறுகிறது. முஸ்லிம் கட்சிகள் காற்று வீசும் பக்கத்திற்குச் செல்கின்றன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நிலைமை எவ்வாறானதென்பதை ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு பட்டவர்த்தனமாக்கியுள்ளது. ஜே.வி.பி. இளைத்துக் களைத்துப்போன கட்சியாகி விட்டது.

இந்த நிலைமை ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவிக்கு வந்த பின்னர் துளிர் விட்டு, அவர் ஜனாதிபதியாகிய பின்னர் கிளை பரப்பி - அரசியல் சதுரங்கத்தில் பிரித்தாளும் காய்களை உருட்டிவிட்டு ருசி கண்டவரின் சாணக்கியத்துக்கான பரிசு. இதுவே, அவரது சர்வகட்சி அரசாட்சிக்கு பல கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவிக்க முடியாது சரணாகதியாகும் நிலையை ஏற்படுத்தி வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி என்பது எப்போதும் வல்லரசு ஒன்றின் சுவீகாரப்பிள்ளையாகவே அடையாளம் காணப்படுகிறது. இதனை உண்மையாக்கும் வகையில் அமெரிக்க ராஜாங்க செயலாளர் (அமைச்சர்) அன்ரனி பிளிங்கென் இந்த வாரம் தெரிவித்த கூற்று நிரூபிக்கிறது.

'இலங்கை தற்போது சவாலான நெருக்கடித் தருணத்தில் உள்ளது. இந்த நெருக்கடியே அதிகளவு ஜனநாயக அரசாங்கத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பானது" என்பது அன்ரனி பிளிங்கெனின் வாய்மொழி.

கம்போடியாவில் இடம்பெற்ற உயர்மட்ட சந்திப்பொன்றில் இலங்கை அமைச்சர் அலி சப்ரியிடம் இவர் தெரிவித்த இக்கருத்து ஊடகங்களில் மிகப் பிரகாசமாக வெளிவந்துள்ளது.

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், கடந்த சில வாரங்களாக இலங்கையின் நெருக்கடி வேளைகளில் தெரிவித்து வந்து கருத்துகள் மீள்நினைவுக்கு உட்படுத்தப்பட வேண்டியவை. மக்கள் எழுச்சிப் போராட்டத்திற்கு ஆதரவான கருத்துகளை இவர் வெளிப்படுத்தி வந்தார். அவ்வேளை சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த ரணிலின் கருத்துகளும் ஜூலி சங்கின் வழித்தடத்திலேயே வளர்ந்தது.

கோட்டாபய ஜனாதிபதியாக இருந்தபோது ஜூலி சங் அவருக்கு பலவகையான நெருக்கடிகளை வழங்கி வந்ததாகவும், அதனால் கோட்டாபய மனஉளைச்சலுக்கு உள்ளானதாகவும் நம்பகமான செய்திகள் அண்மையில் ஊடகங்களில் வெளிவந்தன.

> ஜனாதிபதித் தேர்தலில் கூட்டமைப்பு மற்றும் சஜித் பிரேமதாசவின் கட்சி எம்.பிக்கள் ரணிலுக்கு ஆதரவாக வாக்களித்தது இப்போது பகிரங்க ரகசியமாகிவிட்டது. சர்வ கட்சி ஆட்சி அமைப்பிலும் அதே எம்.பிக்கள் கட்சி தாவலாம் என்ற அச்சம் காரணமாகவே இரண்டு கட்சிகளும் ரணிலுக்கு ஆதரவளிக்க வெள்ளைக்கொடி ஏந்தி அவரிடம் சரணாகதி அடைந்துள்ளன.

ஆக, நடைபெற்ற - நடைபெறும் நிகழ்வுகளை ஒன்றோடொன்று கூட்டிப் பார்க்கையில் எங்கிருந்தோ வைக்கப்பட்ட குறி, லாவகமாக ஆட்சி மாற்றமொன்றை தீவில் ஏற்படுத்தி விட்டது.

இந்த மாதம் 3ஆம் திகதி ஜனாதிபதி பதவி வழியான தமது கன்னி உரையை நாடாளுமன்றத்தில் ரணில் நிகழ்த்தினார். சுமார் 30 நிமிடங்களைக் கொண்ட அமைதிப் போக்கிலான, சாது வடிவிலான இந்த உரை உள்நாட்டில் மட்டுமன்றி, சர்வதேச அரங்கிலும் அவருக்கு மகிமையை ஏற்படுத்தி உள்ளது.

'கடந்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளாக நாடு நிலையற்றதாக மாறி விட்டது..... பேரழிவிலிருந்து ஒரு நாட்டை நான் எடுத்துக் கொண்டேன்.....' என்ற இவரது சொல்லாடல்கள் ராஜபக்சக்களின் தலைமையிலான பொதுஜன பெரமுனவை நேரடியாகக் குத்திக் காட்டியதை அவதானிக்க வைத்துள்ளது. பெரமுனவின் ஆதரவில் கதிரை ஏறிய ரணில் அவர்களைச் சாடுவதால் பாதிப்பு ஏற்படாதா என்று கேட்டால், அதற்கான காலநிலை இன்று இலங்கை அரசியலில் இல்லை என்பதே பதில்.

புதிய அரசியலமைப்பு, ஜனாதிபதி அதிகாரக் குறைப்பு போன்றவைகளை நடைமுறைப்படுத்தப் போவதாகக் கூறியுள்ள ரணில், சகல அரசியல் கட்சி தலைவர்களையும் கொண்ட தேசிய சட்டமன்றத்தை நிறுவப்போவதாகவும் கோடு காட்டியுள்ளார்.

அதேசமயம் தமிழர் பிரச்சனைத் தீர்வு பற்றியும் சில வார்த்தைகளால் கோலம் கீறியுள்ளார். அது பின்வருமாறு அமைந்துள்ளது:

'தமிழ்ச் சமூகம் நீண்டகாலமாக எதிர்நோக்கியுள்ள அரசியல் தீர்வை வழங்குவது இன்றியமையாதது. யுத்தத்தின் கஷ்டங்கள் காரணமாக அவர்கள் சமூக, பொருளாதார பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். தீர்க்கப்பட வேண்டிய பல காணிப் பிரச்சனைகள் உள்ளன. வடக்கில் அபிவிருத்திப் பணிகள் பற்றி நாம் புதிதாகச் சிந்திக்க வேண்டும். இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தில் அவர்களுடன் நெருக்கமாக இணைந்து செயற்படுவதன் மூலம் வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வோம் என நாம் எதிர்பார்க்கிறோம். அவர்களின் வருகைகள் மூலம் தாய்நாட்டின் முதலீடுகளை நாங்கள் எதிர்நோக்குகிறோம்'.

ரணிலின் இந்த அறிவிப்பின் ஊடாக, இருவேறு அர்த்தங்களைக் காணமுடிகிறது. தமிழரின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற அவர் விரும்புகிறார் என்பது ஒன்று. இவ்வாறு செய்வதன் ஊடாக புலம்பெயர் தமிழரின் முதலீட்டை இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு மூலதனமாக்கும் உள்நோக்கம் அவரிடம் உள்ளது என்பது இரண்டாவது.

அதாவது, புலம்பெயர் தமிழரின் பணப்பெட்டியில் கண்வைத்து அதனைக் கவர்வதற்கான சூழ்ச்சியாக தமது நரித்தந்திரப் பாணியை ரணில் மேற்கொள்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, பதவி இழப்பதற்குச் சில வாரங்களுக்கு முன்னர் கூட்டமைப்பினரைச் சந்தித்து எவைகளை முன்னிறுத்தி கவர்ச்சிகரமாக உரையாடினாரோ, அவைகளை அப்படியே அச்சரம் பிசகாது ரணிலும் ஒப்புவித்துள்ளதை இங்கு பார்க்க முடிகிறது.

ரணிலின் தமிழர் பிரச்சினை தீர்வு அறிவிப்பு தொடர்பான கருத்துப் பரிமாற்றம் ஒன்று இந்தவாரம் கொழும்பில் இடம்பெற்றது. இதில் சர்வகட்சி ஆட்சி அமைப்பு பற்றி முக்கியமாக உரையாடப்பட்டது.

தேசிய வேலைத்திட்டமொன்றை உருவாக்குவதற்கு கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்குமென இங்கு அறிவிக்கப்பட்டது. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உடல் நிலை காரணமாக இச்சந்திப்பில் பங்கேற்கவில்லை. கூட்டமைப்பின் மூன்று கட்சிகளின் தலைவர்களும் இதில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. சர்வகட்சி அரசில் பங்கேற்பது பற்றி கூட்டமைப்பு இன்னமும் முடிவெடுக்கவில்லை என்றும், நிலைமையைப் பரிசீலனை செய்து முடிவெடுக்கப் படும் என்றும் ரணிலுக்குத் தெரிவிக்கப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க முறைப்படி ஜனாதிபதியாகவில்லை என்றும், அப்பதவியிலிருந்து அவரை அகற்ற வேண்டும் என்றும், நாடாளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்பட வேண்டும் என்றும் கடந்தவாரம் வரை பொதுவெளியில் கோசமெழுப்பி வந்த சுமந்திரனும், அவரது புதிய ஜோடியான சாணக்கியனும் எந்த நிலைப்பாட்டில் ரணிலைச் சந்திக்கச் சென்றனரென்பது பதில் காணமுடியாத ரிசிமூலம்.

இச்சந்திப்பில் ரணில் போட்டுடைத்த ஒரு விடயம்தான் இப்போது தமிழர் அரசியல் அரங்கில் சூடுபிடித்துள்ளது.

கடந்த மாத ஜனாதிபதித் தேர்தலில் கூட்டமைப்பின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலுக்கு ஆதரவாக வாக்களித்ததாக அவரின் தேர்தல் முகவர் ஹரின் பெர்ணான்டோ அன்றே தெரிவித்திருந்தார்.



இதனை மறுதலிக்கும் வகையில், 'கூட்டமைப்பினராகிய நாங்கள் ஜனாதிபதி தேர்தலில் உங்களுக்கு வாக்களிக்காத போதிலும்....' என்று சுமந்திரன் இக்கூட்டத்தில் உரையாற்ற ஆரம்பிக்க, அதனை இடைமறித்த ரணில் 'உங்கள் ஆட்கள் சிலரும் எனக்கு வாக்களித்தனர்' என்று கூறினார்.

சுமந்திரன் மீண்டும் அதனை மறுதலிக்க, ரணில் மீண்டும் தனது கூற்றை வலியுறுத்தினார். இதன்போது தலையிட்ட தர்மலிங்கம் சித்தார்த்தன், ரகசிய வாக்கெடுப்பு விபரம் உங்களுக்கு எவ்வாறு தெரியும் என்று கேள்வி எழுப்ப, வாக்களிப்பு விபரம் முழுமையாக தமக்குத் தெரியுமென்று ரணில் பதிலளித்த போது விடயம் தற்காலிகமாக முற்றுப்பெற்றது.

வாக்களிப்பின் போது, கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமது வாக்குச் சீட்டை தேர்தல் சட்டத்தை மீறி படமெடுக்க முனைந்த போது நாடாளுமன்ற அலுவலர் அதனைப் பறித்தெடுத்தது தெரிந்த விடயம். இவர் ரணிலுக்கு வாக்களித்ததை நிரூபிக்கவே படமெடுக்க முனைந்தார் என்பதும் ரகசியமன்று.

கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசுக்கட்சியினர் சோரம் போகாதவர்கள் என்றில்லை. 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி பெற்ற கனகரத்தினம் ஐக்கியதேசியக் கட்சிக்குப் பாய்ந்து சென்று பதவி பெற்றார். 2010இல் அம்பாறை மாவட்டத்தில் தெரிவான கூட்டமைப்பின் பியசேன கட்சி மாறி ஓடினார். சுமந்திரனின் அண்மைய சகாவான சாணக்கியன் முன்னர் மகிந்தவின் கட்சியில் போட்டியிட்டு கடந்த தேர்தலில் கூட்டமைப்புக்குள் பாய்ந்தவர்.

சாணக்கியன் தற்போது கூட்டமைப்பில் இருந்தாலும், மகிந்தவுடன் நெருங்கிய தொடர்பில் இருக்கிறார் என்று சுமந்திரன் தெரிவித்த கருத்து கூட்டமைப்புக்குள் குண்டொன்றை வீசியதாகி விட்டது.

இவைகளின் ஊடாக சர்வகட்சி ஆட்சி என்ற பெயரில் இடம்பெறும் சம்பவங்களின் ஓர் உண்மை நன்றாகத் தெரிகின்றது. தங்கள் கட்சிக்காரர்கள் ரணில் பக்கம் தாவிச்சென்று பதவிகளைப் பெற்று விட்டால், தங்கள் கட்சிகள் பலமிழந்துவிடும் என்ற அச்சத்தால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், ஐக்கிய மக்கள் கட்சியும் ரணிலின் சர்வகட்சி அமைப்புக்கு வெள்ளைக் கொடி காட்டியுள்ளனர்.

ஆனாலும், ரணில் அதற்கூடாகவும் தனது வழக்கமான அரசியல் சித்து விளையாட்டை மேற்கொண்டு வருகிறார். அடுத்தடுத்த வாரங்களில் இன்னும் பல வெளிச்சத்துக்கு வரும். காத்திருக்கலாம்!

# பகிடிவதை தேவைதானா?

பல்கலைக்கழகங்களிலும் பல உயர்கல்வி நிறுவனங்களிலும் இப்போது அதிகம் பேசப்படும் விடயம் பகிடிவதை. இதனால் பல பிரச்னைகள் ஏற்படுகின்றன.

பல்கலைக்கழகங்களில் பகிடிவதையால் பாதிக்கப்படும் மாணவர்கள் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகும் சம்பவங்களும் அதிகரித்து காணப்படுகின்றன. இதனால் பகிடிவதை என்பது கட்டாயம் தடுக்கப்பட வேண்டிய விடயம் என்ற ரீதியில் தற்போது கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இது குறித்து பல்கலைக்கழக மாணவர்கள் வெளியிடும் கருத்துக்கள் இவை.

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்

## நட்புறவுக்கான ஒரு விடயம்

**சி. ஜெல்சின்,**
கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர்,
யாழ்.பல்கலைக்கழகம்



பல்கலைக்கழகத்தை பொறுத்தவரையும் சரி கல்லூரிகளை பொறுத்தவரை சரி பகிடிவதை என்பது புதிதாக வருகின்ற மாணவர்களுக்கும் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கும்இடையிலான ஒரு நட்புறவை ஏற்படுத்தும் ஒரு விடயமாகவே காணப்பட்டது. ஆனால் காலப்போக்கில் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் வார்த்தை பிரயோகங்கள் மூலமும் பகிடிவதை என்ற சொற்பிரயோகம் பல மாணவர்களைப் பாதிக்கின்றது.

பகிடிவதையால் பாதிக்கப்படுவோம் என நினைத்து சில மாணவர்கள் பட்டப்படிப்பை தொடராமல் நிறுத்தும் நிலைமை காணப்படுகின்றது.

அதனை விட ஆரம்பத்தில் மாணவர்களுக்கிடையே ஒரு நட்புறவை, ஒரு ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் அவர்களுக்குள்ள சமத்துவத்தை மேம்படுத்தும் முகமாக இது இருந்தாலும் காலப்போக்கில் பகிடிவதையில் மாற்றம் உருவாகுவது ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாக காணப்படுகிறது.

எல்லா மாணவர்களும் அல்ல சில மாணவர்கள் அப்படியான அசம்பாவிதங்களைச் செய்கின்றார்கள். சொற்பிரயோகங்களாலும் சரி உள ரீதியாகவும் சரி, பாலியல் ரீதியாகவும் சரி, சில பாதிப்பான பகிடிவதைச் சம்பவங்கள் நடைபெறுகின்றன இவ்வாறான விடயங்களை பெரும்பாலும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் நான்காம் வருட, மூன்றாம் வருட மாணவர்கள் தவிர்க்கவேண்டும்.

சுமூகமான முறையில் - அன்பான முறையில் -அரவணைப்பான முறையில் பகடிவதை என்ற வசனத்தை தாண்டி மகிழ்ந்திரு என்ற கோணத்தில் அதனை பார்க்க வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம்.

இரண்டு வருடங்களின் பின்னர் யாழ்.பல்கலைக்கழகத்துக்குரிய ஒன்றியம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. நாங்கள் எங்களால் முடிந்த வரை இந்த பல்கலைக்கழகத்தில் தவறான பகிடிவதை நடைபெறுவதை தவிர்க்க விரும்புகின்றோம்.

பகிடிவதை செய்தால் அதற்குரிய ஒழுக்காற்று நடவடிக்கை பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்றது. அதாவது மாணவ ஒழுக்காற்று அதிகாரி, சட்டமன்றத் அதிகாரிகள் பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் இருக்கின்றார்கள். அவர்கள் மூலமாக பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்களுக்குரிய முறைப்பாடுகள் பதிவு செய்வதன் மூலம் தங்களுக்குரிய நீதியை பெற்றுக்கொள்ள முடியும்.

பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து கல்வி கற்க விரும்புவர்களாக இருந்தால் இப்படியான பகிடிவதை போன்ற விடயங்களை தவிர்த்து நல்ல நட்புறவான ரீதியிலே மாணவர்களுடன் கலந்துரையாடுவதே மிக நல்லதான விடயமாகும்.

யாழ். பல்கலைக்கழகத்தை பொறுத்தவரை நான் முதலாம் வருடமாணவனாக உட்புகுந்தபோது பகிடிவதை கூடுதலாகவே காணப்பட்டது.ஆனால் மாணவர்கள்

எல்லாரும் அவ்வாறு பகிடிவதையில் ஈடுபடுவதில்லை.குறிப்பிட்ட நபர்கள் மாத்திரமே பகிடிவதையில் ஈடுபடுவதன் மூலம் பல்கலைக்கழகத்தில் பகிடிவதை என்ற விடயம் பெரிய பாதிப்பான விடயமாக காட்டப்படுகின்றது.

ஒரு வீட்டில் ஐந்து பேர் இருந்தால் ஐந்து பேரும் ஒரே மாதிரி இருக்கமாட்டார்கள். அதேபோலத்தான் பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவர்களில் ஒரு சிலர் விடும் தவறின் காரணமாக பகிடிவதை என்ற சொற்பிரயோகம் மக்கள் மத்தியில் ஒரு பாதிப்பான விடயமாக காணப்படுகின்றது.

பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவன் ஒரு இன்னொரு மாணவருக்கு பகிடிவதை மேற்கொள்வதன் மூலம் அது பல்கலைக்கழகத்திற்கே ஒரு அபகீர்த்தி ஏற்படுத்தும் செயற்பாடாக காணப்படுகின்றது.

குறிப்பாக ஒரு பல்கலைக்கழகத்தின் நுழையும் மாணவனுக்கு ஒரு விண்ணப்ப படிவத்தில் பகிடிவதையில் இருந்து நாம் விலகுகின்றேன் என்றொரு கேள்வியும் காணப்படும். அந்த கேள்விக்கு அவர் பகிடிவதையிலிருந்து நான் விலகுகின்றேன் என தெரிவித்து இருந்தால் அவரை பகிடிவதைக்கு உட்படுத்த முடியாது. அவ்வாறான நடைமுறையும் காணப்படுகின்றது.

அத்தோடு பகிடிவதையை கண்காணிப்பதற்காக மாணவர் மட்டத்திலும் தலைமை ஆசிரியர் மட்டத்திலும் குழுக்கள் காணப்படுகின்றன. அதிகாரிகள் காணப்படுகின்றார்கள். எனவே இந்த பகிடிவதைஎன்ற விடயத்தில் பாதிக்கப்பட்ட மாணவன் தமக்குரிய நீதியை பெற்றுக்கொள்ள முடியும்

## அனைவரும் ஏற்கும் விடயம் இது

**க. கஜேந்திரன்**
பல்கலைக்கழக மாணவன்



பகிடிவதை என்ற வசனத்தை- பிழையாக தவறாக பார்த்தாலும் பல்கலைக்கழகத்தில் பகிடிவதை என்ற விடயம் சாதாரண விடயமாக காணப்படுகின்றது.

பல்கலைக்கழகத்துக்குள் பகிடிவதை என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஒரு விடயமாகும். குறிப்பாக பல்கலைக்கழக சூழலில் எவ்வாறு வாழுதல், எவ்வாறு தமது கற்றல் செயல்பாட்டை முன்னெடுத்தல் என்பதற்காகவே இந்த பகிடிவதை என்ற விடயம் கொண்டுவரப்பட்டது.

ஆனால் பகிடிவதை என்பதை தவறான கண்ணோட்டத்தில் பார்ப்பதால் தான் அது பிழையான விடயமாக எமக்கு தென்படுகின்றது.

பகிடிவதையினால் மாணவர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்னைகளை தீர்ப்பதற்கு மாணவர் ஒன்றியம் காணப்படுகின்றது. ஒவ்வொரு பீடங்களுக்கும் ஒரு தலைவர் காணப்படுகின்றார். அவர்கள் மூலமாக பகிடிவதை யால் பாதிக்கப்படுபவர்கள் தமக்குரிய தீர்வினை பெற்றுக் கொள்ள முடியும். அதேபோல ஒழுங்காற்று நடவடிக்கை அதிகாரிகள் மூலம் பகிடிவதைக்கு உட் படுத்தப்படுவோர் தமக்குரிய தீர்வை பெற்றுக் கொள்ள முடியும்.

குறிப்பாக பகிடிவதைக்குட்பட்டும் மாணவர்கள் சிலர் தமக்குரிய முறைப்பாடுகளை தெரிவிக்காததன் காரணமாகவே பகிடிவதைகக்கு உட்படுத்துவோர் தப்பித்துக் கொள்கின்றார்கள். அத்தோடு பகிடிவதையும் அதிகரித்தும் காணப்படுகின்றது.

ஒரு சிலரின் செயற்பாடினால் இந்த பகிடிவதை என்ற விடயம் சமூகத்தில் பிழையான விடயமாக காணப்படுகின்றது. குறிப்பாக இது ஒரு சாதாரண விடயம். பல்கலைக் கழகத்திற்கு நுழையும்போது அது புதிதாக இருந்தாலும் மேலும் தொடர்ச்சியாக கல்வி செயல்பாடுகளை முன் னெடுக்கும்போது அது ஒரு சாதாரண விடயமாக மாறிவிடும்.

## தவறான பகிடிவதை தடுக்கப்படவேண்டும்

**க.பிரவினா**
பல்கலைக்கழக மாணவி



பகிடிவதை என்ற விடயத்தை பார்ப்போமாக இருந்தால் என்னை பொறுத்த வரை நல்ல விடயமாக காணப்படுகின்றது.

நான் ஆரம்பத்தில் முதல் முதலாம் வருட மாணவியாக உள்நுழையும்போது பகிடிவதை என்பது ஒரு பயமாகவே காணப்பட்டது. ஆனால் பல்கலைக்கழகத்தில் நுழைந்து ஒரு கிழமை மாத்திரமே எனக்கு பயமான நிலை காணப்பட்டது. அதன் பின்னர் அனைவரும் எனக்கு தோழர்களாகவே காணப்படுகிறார்கள்.

எனக்கு ஒரு பிரச்னை காணப்பட்டாலோ அல்லது பிரச்னை ஏற்பட்டாலோ எமக்கு உதவி புரிபவர்களாக அனைவரும் மாறிவிட்டார்கள்.

எனவே பகிடிவதை என்பது ஒரு பிழையான விடயம் இல்லை.அத்தோடு ஒரு ஆசிரியருடன் எவ்வாறு அணுக வேண்டும், எவ்வாறு நமது விடயங்களை கொண்டு நடத்தவேண்டும் என்பதற்கு பகிடிவதை மூலம் ஏனைய மாணவர்களுடன் ஏற்பட்ட உறவின் காரணமாகவே என்னால் படிப்பினை தொடர முடிந்துள்ளது.

பகிடிவதை என்பது அவசியமான விடயம். அதாவது ஒரு ஜூனியர் அல்லது ஒரு சீனியருடன் கதைக்கும் போது பாடவிதானம் மற்றும் எங்கள் அறிவினை வளர்த் துக் கொள்வதற்கும் இது மிக முக்கியமான விடயம் பகிடிவதையால் பாதிக்கப்படுவராக இருந்தால் அவர்கள் அதற்குரிய தரப்பிடம் தெரியப்படுத்தும் போது தவறான பகிடிவதைக்கு உட்படுத்துவோர் கட்டாயமாக தண்டிக்கப்படுவார்கள்.

கல்விச் செயற்பாடுகள் மற்றும் தம்முடைய திறன்களை அபிவிருத்து செய்வதற்கும் பெண் மாணவர்களும் ஆண் மாணவர்களும் உதவுவார்கள்.

வெளியிலிருந்து பார்ப்போருக்கு இந்த பகிடிவதை என்பது ஒரு கஷ்டமான விடயமாகவே காணப்படும் அல்லது கசப்பான பயமாகவே காணப்படும். ஆனால் நான் முதலாம் வருட மாணவியாக பல்கலைக்கழகத்துக்கு நுழைந்து ஒரு கிழமை மாத்திரமே எனக்கு இந்த பகிடிவதை என்பது பயமான விடயமாக காணப்பட்டது.

ஆனால் நான் இன்று சந்தோஷமாக இருக்கிறேன். ஆரம்பத்தில் நான்பயந்திருந்தாலும் தற்பொழுது எனக்கு அந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தக் கூடிய நிலைமை காணப்படுகிறது. சமூகத்தில் பகிடிவதை என்ற ஒரு பிழையான கருத்து காணப் படுகின்றது. அது ஒரு சிலரின் செயற்பாட்டினால் பகிடிவதை பிழையான விடயமாக சித்தரிக்கப்படுகின்றது.

## அடிமைப்படுத்தல் பகிடிவதையல்ல

**க.பிரதீபன்**
கலைப்பீட மாணவர் ஒன்றிய உறுப்பினர்



பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர்களுக்கு பகிடிவதை என்பது பெரிய விடயமாக காணப்படும். குறிப் பாக பலர் இந்த பல்கலைக்கழக கல்வியை தொடர முடி யாமல் தவிப்பதற்கு காரணம் பகிடிவதை எனக் கூறப்படுகின்றது. ஒரு மூத்த மாணவன் புதிதாக வந்த மாணவரை கூப்பிட்டு அவருடன் அணுகும் முறையினையே பகிடிவதையாக கருதப்பட்டது

ஆனால் தற்பொழுது அந்த பகிடிவதை என்பது ஒரு அநாவசியமான விடயமாக பார்க்கப்படுகின்றது. ஒரு புதிய மாணவனை உள ரீதியாக உடல் ரீதியாகவோ தாக்குவதற்கு உரிமை கிடையாது. அத்தோடு ஒருவனை அடிமைப்படுத்துவதற்கு அல்லது துன்பப்படுத்துவதற்கோ சட்டத்தில் இடமில்லை.

சிரேஷ்ட மற்றும் மூத்த மாணவர்களுக்கிடையில் ஒரு நல்லுறவு பேணும் முகமாகவே இந்த முறை பின்பற்றப்பட்டது.

எனவே பல்கலைக மாணவர்களுக்கு இடையில் ஒரு நட்புறவை ஏற்படுத்தும் முகமாகவே இந்த பகிடிவதை காணப்பட்டதே தவிர ஒருவரை அடிமைப்படுத்த- துன்புறுத்த இது உருவாக்கப்படவில்லை. ஆனால் ஒரு சிலரின் அவ்வாறான செயற்பாட்டின் காரணமாக சமூகத்தில் பிழையான விடயமாக பார்க்கப்படுகின்றது.

# சீன உளவுக் கப்பல் வருகை ஒத்திவைப்பு!

சென்னை மடல்
-பகவான் சிங்-


வெள்ளி மாலை இனிய 'ஈழநாடு' நண்பர்களிடம் உரையாட மடிக்கணினி முன் உட்காரும் போது அறிவு ஜீவிகளாலும் அரசாங்க அதிகாரிகளின் மத்தியிலும் பரவலாகப் பேசப்படும் சங்கதி சீன உளவுக் கப்பல், யுவான் வாங் 5, அம்பாந் தோட்டை துறைமுகத்தில் ஓகஸ்ட் 11 முதல் சில வாரங் களுக்குத் தங்கி 'ஆராய்ச்சி' பணிகளை மேற்கொள்ளும் என்பதுதான். அந்தப் பிராந்தியத்தில் சுற்றிவரும் செயற் கைக் கோள்கள் குறித்த நுண்ணிய தகவல்களையும் ஒடிஸாவிலிருந்து இந்தியாவால் ஏவப்படும், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் ஆகியவற்றின் செயல்பாடுகளையும் கண்காணிப்பது மட்டுமல்லாமல், தென்னிந்தியாவில் இருக்கும் பாதுகாப்பு மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தளங்களை உளவு பார்ப்பதுதான் இந்த 'ஆராய்ச்சி'யின் பொருள் என்ப தால் இந்தியா இது குறித்து மிகுந்த கவலை கொள்வதில் அர்த்தமும் நியாயமும் உள்ளது. இந்தக் கப்பல், இந்தியக் கடலோரத்திற்கு மிக அருகில் சுமார் 750 கிமீ வரை கண்காணிக்கும் கருவிகளைக் கொண்டது. யுவான் வாங் 5-ன் நகர்வுகளை உன்னிப்பாக் கவனித்து வருகி றோம் என்ற வழக்கமான அறிக்கையுடன் நில்லாமல், அம்பாந்தோட்டையில் இக்கப்பல் நிறுத்தப்படுவதைத் தடுக்குமாறு இலங்கை அரசுக்கும் அழுத்தம் அளித்தது இந்தியா. இந்தியாவின் பாதுகாப்பு நலன்களை விட அதிக முன்னுரிமையை இந்தச் சீனக் கப்பலுக்கு அளித்த காரணம் என்ன என்றும், இந்த உளவுக் கப்பலின் 'உண்மையான நோக்கம்' என்ன என்றும் ரணில் விக்ரம சிங்கவை இந்தியா வினவியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இறுதியாகச் சனியன்று இலங்கை அயலுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது குறித்த மேல் ஆலோசனைகள் நடத்தப்படும் வரை கப்பலின் வருகையை ஒத்தி வைக்குமாறு சீனா கேட்டுக்கொள் ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், முற்றிலும் தடை என்றில்லாமல், தற்காலிக ஒத்திவைப்பு ஏன் என்ற கேள்வி எழுகிறது. உள்நாட்டுச் சிக்கல் தீரும் வண்ணம் ஓர் அனைத்துக் கட்சி தேசிய அரசை அமைக்க முயன்று வரும் இத்தருணத்தில், சர்வதேச அழுத்தத்தை எதிர்கொள்ளவும் தெளிவான மனநிலை யில் ஆலோசிக்கவும் இந்த நேரத்தை ரணில் எடுத்துக் கொள்ள நினைத்திருக்கலாம். இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் மூன்று பத்தி அறிக்கையின் இறுதிப் பகுதி சுவாரஸ்யமானது. அதில், சீனத் தூ தரகத்திற்கு அளித்துள்ள உறுதிகள் மிக அதிக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தற்காலிக ஒத்தி வைப்பு அறிக்கையின்போது இந்தியாவிற்கு என்ன உறுதிகளை ரணில் வழங்கியுள்ளார் என்பது இங்கு தெளிவாக வில்லை.

முன்னதாக அதிபர் ரணில் விக்ரமசிங்க, இந்தியாவின் நலன்களுக்குச் செவிமடுக்காமல் யுவான் வாங் 5 கப்பல் ஹம்பந்தோட்டா துறைமுகத்தில் முகாமிட அனுமதி யளித்தார். இலங்கைப் பாதுகாப்பு அதிகாரிகளும் இதில் அணு ஆயுதங்கள் எதுவும் இல்லாததால், இந்தச் சீனக் கப்பல் வருவதில் எந்தச் சிக்கலும் இல்லை என்ற வாதத்தையும் முன்வைத்தார்கள். இந்தப் பிராந்தியத்தில் உள்ள இந்தியாவின் பாதுகாப்புத் தளங்கள், செயற்கைக் கோள்கள், ஏவுகணைகள் ஆகியவற்றைக் கண்காணிக் கக்கூடிய தொலைதூர அன்ரெனாக்கள் சுற்றுவட்டா ரத்தையே கண்காணிப்பிற்குள் கொண்டு வரக்கூடியவை என்பதோ, அந்தக் கப்பலில் 400 சிப்பந்திகள் இருப்பதோ அந்த அதிகாரிகளுக்கோ அதிபருக்கோ ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. பின்னொரு காலத்தில், தென்னிந்தியக் கடலோரத்தில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளும் சூழல் ஏற்படுமானால், கண்காணித் தறிந்த இந்த முக்கியத் தகவல்களை சீனா பயன்படுத்தத் தவறாது.

கட்டாயப்படுத்தும் ஒரு முயற்சியாக இது இருக்க லாம். தனது தெற்கு எல்லையைச் சீன அச்சுறுத்தலி லிருந்து காப்பாற்ற, படைகளை மடைமாற்றும் கட்டா யத்தை உருவாக்கி, லடாக் பகுதியில் இந்தியாவின் நிலையைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளாக இவற்றை யெல்லாம் எடுத்துக்கொள்ளலாம்.

இதில் உள்ள அபாயத்தை உணர்ந்த இந்தியா, ரணில்-தினேஷ் குணவர்த்தன ஆட்சிக்கு இக்கப்பலின் வருகையைத் தடுத்து நிறுத்த அழுத்தத்தை அதிகரித்தது. இந்த இறுதி முடிவு சீனாவிற்கு மேலும் ஒரு பின்னடை வாக நிகழ்ந்துள்ளது. புதனன்று, அமெரிக்க பாராளு மன்ற சபா நாயகர் நான்ஸி பெலோஸி, விளைவுகள் குறித்த உரத்த மிரட்டல்களையும் மீறி, தைவான் வந் ததை சீனாவால் தடுக்க முடியாமல் போனது. அமெ ரிக்க அதிபர் பதவிக்கான போட்டியில் இரண்டாவதாக இருக்கும் பெலோஸி, கடந்த 25 ஆண்டுகளில் தைவானுக்கு வந்த அமெரிக்காவின் மிகவும் செல்வாக்கு மிக்க, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராவார். தைவான் அதிபர் சாய் இங்-வென் உட்பட, அந்நாட்டின் உயர் தலைவர்கள் பலருடனும் பேச்சு வார்த்தை நடத்திய பெலோஸி, "தைவான் போன்ற ஒரு ஜனநாயகக் கூட்டாளி நாட்டை அமெரிக்கா ஒருபோதும் கைவிடாது" என்று ஐயத்திற் கிடமின்றித் தெளிவாகக் கூறினார். பெலோஸி, சிங்கப்பூர், மலேஷியா, தைவான், தென் கொரியா மற்றும் இறுதியாக ஜப்பான் சுற்றுப்பயணம் மேற்கொண்டதையடுத்துக் கொதிப் படைந்துள்ள சீனா, தைவானைச் சுற்றியுள்ள கடற்பகுதி யில், முன்னெப்போதும் இல்லாத வகையில் மிகத் தீவிரமாக இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டதுடன், தைவான் பரப்பின் மீது ஏவுகணைகளையும் ஏவியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.



பயன்படுத்துவதாகும் என்பதை அறியாமல், இவற்றையெல்லாம் ஒரு பார்வையாளரைப் போல் உற்சாகமாக சுகமான கலரி இருக்கையிலிருந்து பார்த்துக்கொண்டிருக்கலாம் என்று நினைத்தால், அது விந்தை தான்.

இந்தியா அளித்த அழுத்தத்தின் காரணமாகவே இலங்கை சீனாவிடம் இக்கப்பலின் வருகையைத் தள்ளிப்போடக் கோரியிருக்க வேண்டும். இலங்கையின் பொருளாதாரம் வீழ்ந்த போது ஓடி வந்து உதவிய முதல் நாடான இந்தியாவைத் திருப்திப் படுத்த ரணில் தற்காலிகமாகச் செவிமடுத்துள்ளாரா அல்லது இது ஒரு நிரந்தர முடிவா என்பது தெளிவாக விளங்கவில்லை. சீனாவின் விரிவாக்கவாதத்துக்கு எதிராக, குவாட் கூட்டமைப்பு தவிர, மேற்குலக நாடுகளின் கூட்டமைப்பிலும் இந்தியா இடம் பெற்றிருப்பதால், கொழும்பிற்கு மிகவும் தேவையான நிதியுதவியை சர்வதேச செலாவணி நிதியம் மற்றும் பிற அமைப்புகளிலிருந்து பெற, இது உதவக்கூடும்.

இலங்கையைப் பொருளாதாரச் சிக்கலிலிருந்து மீட்பதுடன் சீனக் கடன் வலையை எதிர்கொள்ள உதவும் சில நீண்ட கால நடவடிக்கைகளுக்கும் இது முக்கியமானது சீனாவின் முதுகில் ஏறிச் சவாரி செய் வதை விட, இந்தியா- மேற்குலக நாடுகள் என்ற குடை நிழலில் சவாரி செய்வது தனக்கும் தன் நாட்டுக்கும் நலன் பயக்கும் என்று ரணில் புரிந்து கொண்டிருப்பார்.

## இந்தியாவுக்கு ரணிலின் உறுதிமொழி என்ன?

இவ்வாண்டு இறுதியில் நடைபெறவிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில், அதிபர் ஷீ ஜின்பிங், மூன்றாவது முறையாக மற்றொரு ஐந்தாண்டு பதவிக் காலத்தைத் தான் அனுபவிக்கக் கோரவுள்ளார். அத னால், சீன தேசியவாதத்தில் தான் கொண்ட பற்றைப் பறைசாற்ற விரும்புவதாகவும் கூறப்படுகிறது. பொது மற்றும் இராணுவ நிர்வாகத்தின் அனைத்துத் துறைகளி லும் வலுவான கிடுக்கிப் பிடி போடும் இந்த அரசாங்கத் தின் செயல்பாடு குறித்து மக்கள் மனதில் சிறிது அதி ருப்தி ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுவதை எதிர்கொள் ளவே இது போன்ற வெளிநாட்டு வீராப்புச் செயல்களை மேற்கொள்கிறார் என்று கூறப்படுகிறது.

அவர் தைவானுக்கும் அமெரிக்காவுக்கும் எதிராகக் கடும் எதிர் நடவடிக்கைகள் எடுக்கவும் உத்தரவிட்டிருக் கிறார்.

நடந்த இந்தக் காட்சிகளை எல்லாம் தமது தொலைக் காட்சியிலும் செய்தித்தாள்களிலும் பார்த்திருப்பார்கள் என் "ஈழநாடு" வாசக நண்பர்கள். தங்கள் நாடு எதிர்நோக்கியிருக்கும் ஆபத்தை உணராமல், சீன உளவுக் கப்பல் அம்பாந்தோட்டை வருவது, இலங்கையை சீனா ஒரு பரிசோதனைத் தளமாகப்

ஞாயிறு காலை உணவுக்குச் செல்லும் முன் உங்களை ஒரு கேள்வி கேட்க உங்களின் அனுமதி கோருகிறேன். இது நான் பல முறை கேட்டுள்ள கேள்வி தான். நான் எதிர்பார்ப்பது உங்கள் உடனடி, அவசர பதிலை அன்று. மாறாக, ஈழத் தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள பெரிய சிக்கலுக்கு நீண்ட காலத் தீர்வுகளை எட்டச் சற்றுச் சுய பரிசோதனை செய்து பதிலளிக்க வேண்டுகிறேன். உங்கள் அரசியல் தலைவர்களிடையே நிலவும் மோதல் போக்கும் மக்கள் நலனை முன்னிலைப்படுத்தாத அவர்களின் சுயநலச் செயல்பாடும்தான் அந்தப் பெரிய சிக்கல். அண்மையில் நடந்த அதிபர் தேர்தலில் அவர்கள் நடந்து கொண்ட விதத்திலிருந்தே இந்தப் பிரச்னை எந்த அளவுக்குப் புரையோடிப்போயிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம். சுய நலத்தையே பின்பற்றாமல், மக்கள் நலனுக்காகவும் உழைக்கத் தொடங்குவது எப்போது என்று அவர்களிடம் நீங்கள் கேள்வி எழுப்புவது எப்போது?

**மீண்டும் சந்திப்போம். வணக்கம்.**



# அழுத்தங்களுக்குள்ளும் தடம்பதிக்கும் இலங்கை அணி!






**பொ**ருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது நம் நாடு. எரிபொருளுக்கான வரிசைகள் இன்னமும் குறையவில்லை. உணவுப் பொருட்களின் விலையேற் றம் பசி - பட்டினி அபாயத்தை நோக்கி நாட்டை தள்ளியுள்ளது. இந்த நிலைமைகள் ஒரு புறமிருந்தாலும் விளையாட்டு நிகழ்வுகளில் இலங்கை தனது மீளெழுச்சியையும் புதிய வரலாறுகளையும் எழுதத் தொடங்கியுள்ளது.

2011 ஆம் ஆண்டின் பின்னர் வீழ்ச்சியை சந்திக்க ஆரம்பித்த இலங்கை அணி, தற்போது தட்டுத் தடுமாறி எழுந்து நிற்க ஆரம்பித்துள்ளது. அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் என வலுவான அணிகளை டெஸ்ட் போட்டிகளில் வீழ்த்தி - தொடரை சமன் செய்து தனது இருப்பை நிலைநிறுத்தியுள்ளது.

இந்நிலையில், இங்கிலாந்தின் பர்மிங்ஹாம் நகரில் நடக்கும் பொது நலவாயப் போட்டிகளில் பதக்கங்களை குவித்து வருகிறது. 2018ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் கோல்ட்கோஸ்டில் நடந்த போட்டியில் ஒரு வெள்ளி, 5 வெண்கலம் என 6 பதக்கங்களையும், 1950 ஆம் ஆண்டு நியூசிலாந்தின் ஓக்லாந்து நகரில் நடந்த போட்டியில் ஒரு தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலம் என மொத்தம் 4 பதக்கங்களையும் இலங்கை அணி வென்றிருந்தது.

இந்த வருடங்களின் பின்னர் பொது நலவாய விளையாட்டுப் போட்டியில் இலங்கை அணி கைப்பற்றியுள்ளது. தொடர் முடிவதற்கு இன்னமும் ஒருநாள் மட்டுமே இருக்கிறது. இந்த நிலையில், இந்தத் தொடரில் இலங்கை அணிக்கு இன்னமும் பதக்கங்கள் வெல்வதற்கான வாய்ப்புகள் உண்டு என்றே கணிக்கப்படுகின்றது.




இம்முறை தொடரில் இலங்கை அணி 17ஆவது முறையாகப் பங்கேற்றுள்ளது. இந்தத் தொடரில் 54 ஆண்கள், 60 பெண்கள் என 114 வீரர்கள் பங்கேற்றிருந்தனர். முதன்முறையாக ஆண்களை விட அதிக பெண்கள் பங் கேற்ற போட்டியாகவும் இந்த ஆண்டு அமைந்துள்ளது. கொரோனா தொற்று காரணமாக ஆண்கள் மேசைப் பந்தாட்ட அணி மீள அழைக்கப்பட்ட நிலையில், மிகுதி 110 வீரர்களும் தொடரில் பங் கேற்றனர்.

இலங்கை அணிக்கு முதல் பதக்கத்தை கடந்த ஜூலை 30 ஆம் திகதி டிலுக இசுறு குமார வென்று கொடுத்தார். 55 எடைப் பிரிவில் வெண்கலப் பதக்கமாக இது அமைந்தது.

இதைத் தொடர்ந்து கடந்த 3ஆம் திகதி நடைபெற்ற தடகளப் போட்டிகளில் இலங்கை அணி இரு பதக்கங்களை கைப்பற்றியது. தட்டு எறிதலில் வெள்ளிப் பதக்கத்தை பாலித பண்டாரவும் 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் யுப்புன் அபயகோன் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். உப்புன் அபயகோனின் இந்த வெற்றி 24 வருடங்களின் பின்னர் இலங்கைக்கு ஓட்டப் பந்தயத்தில் கிடைத்த முதல் வெற்றியாகவும் அமைந்தது.



ஒரு புறத்தில் என்றுமில்லாதவாறு பதக்க வேட்டையை இலங்கை அணியினர் படைத்த போதிலும், நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் ஒரு புறமிருக்க வீரர்கள், அதிகாரிகளின் தலைமறைவு இலங்கையை ஆட்டிப் படைத்து வருகின்றது. இதுவரை மூன்று வீரர்கள் தலைமறைவாகியுள்ளனர். அவர்களின் இந்த தலைமறைவு வரும் நாட்களில் இலங்கை வீரர்களின் பங்களிப்பை குறைத்து விட- திறமையான வீரர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கா மல் செய்வதற் கான வாய்ப்பாக மாறியுள்ளது.

ஒரு புறம் நாட்டின் சூழ்நிலை கொடுக்கும் சவால் - மறுபுறம் வீரர்களின் தலைமறைவு ஏற்படுத்தும் அழுத்தங்களுக்கு மத்தியில் இலங்கை அணியினர் சாதிப்பது ஒவ்வொரு இலங்கையருக்கும் பெருமையே.

# ஜடேஜா தரும் சந்தேகங்கள்!

ஐ. பி. எல். ரங்கில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியுடன் சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜா தனது பயணத்தை தொடருவாரா? என்பது மில்லியன் டொலர் கேள்வியாக உள்ளது. இந்நிலையில், சென்னை அணியின் ட்வீட்டுக்கு அவர் செய்த நான்கு வார்த்தைகள் அடங்கிய பதிலை அழித்துள்ளார். இது ரசிகர்கள் மத்தியில் பேசு பொருளாகியுள்ளது. அப்படி என்ன செய்தார் ஜடேஜா?

கடந்த மே மாதம் நிறைவடைந்த 15 ஆவது ஐ. பி. எல். தொடர் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிர்பார்த்த அளவுக்கு சிறப்பானதாக அமையவில்லை. 14 போட்டிகளில் வெறும் நான்கில் மட்டுமே சென்னை வெற்றி பெற்றிருந்தது. அதோடு தொடரை 9ஆவது இடம்பிடித்து நிறைவு செய்திருந்தது.

15ஆவது ஐ. பி. எல். தொடர் தொடங்குவதற்கு சில நாட்களுக்கு முன்னதாக அணித் தலைவர் பொறுப்பை ஜடேஜா வசம் ஒப்படைத்தார் டோனி. இருந்த போதிலும் தனது தலைமையிலான அணியில் தொடர் தோல்விகள் மற்றும் மோசமான ஆட்டம் காரணமாக தலைமைப் பொறுப்பை டோனி வசம் மீண்டும் ஒப்படைத்தார் ஜடேஜா. அதோடு சென்னை அணியின் கடைசி நான்கு போட்டிகளில்




ஜடேஜா விளையாடவில்லை. அப்போது முதலே சென்னை அணியுடனான அவரது எதிர்காலம் குறித்து பேசப்பட்டு வருகிறது.

2012 தொடர் முதல் ஜடேஜா, சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். பந்துவீச்சு, துடுப்பாட்டம், களத்தடுப்பு என சகலதுறையிலும் களத்தில் கலக்குவார். டோனி படையின் சேனாதிபதி. சென்னை அணிக்காக 142 ஐ. பி. எல். போட்டிகளில் விளையாடி உள்ளார். அதன் மூலம் 1,440 ஓட்டங்கள், 69 பிடியெடுப்புகள் மற்றும் 105 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார்.

கடந்த தொடரில் சென்னை அணி தக்கவைத்த நான்கு வீரர்களில் ஜடேஜாவுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. அது நான்கு ஐ. பி. எல். கோப்பைகளை வென்று கொடுத்த டோனியை இரண்டாவது தெரிவாக்கி கொடுக்கப்பட்ட முன்னுரிமை. இதன் மூலம் அப்போதே சென்னை அணி ஜடேஜாவுக்கான எதிர்கால திட்டத்தை தெளிவாகத் தெரிவித்திருந்தது. இப்படி எல்லாம் சரியாகத்தான் போய்க்கொண்டு இருந்தது. கடந்த தொடரைத் தவிர.

கடந்த தொடரில் சென்னை அணியுடனான கசப்பான அனுபவத்துக்குப் பிறகு தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் இருந்து 2021 மற்றும் 2022 ஐ. பி. எல். தொடரில் சென்னை அணி சார்ந்த பதிவுகளை நீக்கினார் ஜடேஜா. இந்நிலையில், இந்த வாரத்தின் தொடக்கத்தில் ஜடேஜா, சென்னை அணிக்குதான் கொடுத்த பதில் ஒன்றை அழித்துள்ளார் என்று சொல்லப்படுகிறது. அதுதான் இப்போது ரசிகர்கள் மத்தியில் கவனம் பெற்றுள்ளது.

கடந்த பெப்ரவரி 4ஆம் திகதி சென்னை அணி இந்த பதிவு செய்திருந்தது. சென்னையுடன் ஜடேஜாவின் 10 ஆண்டுகால பயணத்தை குறிப்பிடும் ருவிட் அது. அதற்கு பதிலளித்த ஜடேஜா "10 more to go" என சொல்லியிருந்தார்.

இப்போது அந்த ருவிட்டுகுதான் கொடுத்த பதிலை ஜடேஜா அழித்துள்ளார் என்று சொல்லப்படுகிறது. அதை மையமாக வைத்து ரசிகர்கள் பல்வேறு விதமாக கருத்து சொல்லி வருகின்றனர்.

"சென்னை அணியை விட்டு விலக வாய்ப்பே இல்லை", "டோனி மற்றும் பிளெமிங் போன்றவர்கள் ஜடேஜாவுடன் பேசுவார்கள். அவரை தக்க வைப்பார்கள்", "தரமான இந்திய சகலதுறை வீரரை தெரிவு செய்யலாம்", "இந்த செயல் ஜடேஜாவின் முதிர்ச்சியின்மையின் வெளிப்பாடு" என தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

சென்னை அணியுடன் ஜடேஜாவின் பயணம் தொடருமா? என்பது அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் தெரிந்துவிடும். அதுவரை காத்திருப்போம்.

# கோபாலபுரத்தில் நான்

கலைஞர் மு.கருணாநிதியின் நான்காவது நினைவு நாள் இன்று



**மறவன் புலவு க. சச்சிதானந்தன்**

இரவு 8 மணி. கோபாலபுரத்தில் கலைஞர் இல்லத்திற்குப் போகிறேன். வருவதை முன்கூட்டியே சொல்லி இருந்தேன். வாயிலில் மகன் தமிழரசு, மகள் செல்வி இருவரும் எனக்காகக் காத்திருக்கிறார்கள்.

என்னை அழைத்துச் சென்றனர். மாடிப்படி ஏறிக் கலைஞரின் அறைக் குச் செல்கிறேன். அந்த அறைக்கு எத்தனை முறை சென்றிருப்பேன்.

கலைஞர் என்னைப் பார்க் கிறார். கூர்ந்து பார்க்கிறார். நாற்காலியைக் காட்டுகிறார். அப்பொழுது வாயால் பேச முடியாது. காது அவ்வளவாக கேட்காது. எழுதினாலும் புரி யாத உடல் நலக்குறைவு அவ ருக்கு.

மீண்டும் என்னைப் பார்க் கிறார். ஏதோ சொல்ல முயல்கி றார். எனக்குப் புரியவில்லை. மகனும் மகளும் அவரின் உத வியாளரைப் பார்த்து, “அப்பா என்ன சொல்கிறார்“ எனக் கேட்கிறார்கள். உதவியாளருக் கும் புரியவில்லை.

எனக்குத் தேநீர் கொடுக்கு மாறு உதவியாளரிடம் கை காட்டுகிறார். தேனீர் தந்ததும் குடித்தேன். சற்று நேரத்தில் போகலாம் என எழுந்தேன். அமருமாறு கை காட் டுகிறார். சிறிது நேரம் செல்ல மீண்டும் எழுந்தேன். அமருமாறு மீண்டும் கை காட்டுகிறார்.

அரை மணி நேரம் வரை நானும் அவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தோம். என் மீது அவர் கொண்டிருந்த வாஞ்சை. நான் அவர் மீது கொண்டிருந்த மதிப்பு, அன்பு. அந்த அரை மணி நேரத்தில் மீண்டும் நேருக்கு நேர் பகிர்ந்து கொண்டோம்.

அதற்குப் பின் அவரை நான் பார்க்க வில்லை. பார்க்க முயலவும் இல்லை.

ககரத்தில் ஒரு சொல் தொடங்கும். அதே ககரத்தில் அடுத்து வரும் சொற்க ளும் தொடரும். அடுக்குமொழி வச னங்களாகும்.

கலைஞர் கருணாநிதி, அடுக்கு மொழி வரிகள் வழி எனக்கு அறிமுகமாகிறார் 1952இல், என் பதின்ம வயதுத் தொடக் கத்தில்.

“பாட்டொலிக்கும் குயில்கள் இல்லை என் பாதையில். படமெடுத் தாடும் பாம்புகள் நெளிந்திருக்கின்றன. தென்றலைத் தீண்டியதில்லை நான். ஆனால் தீயைத் தாண்டியிருக்கிறேன்.”

பராசக்தி - திரைப்பட வரிகள் பல, எழுபது ஆண்டுகளாக, இன்றைவரை எனக்கு மனப்பாடம்.

பதின்ம வயது முடியும் காலத்தில் 1959-1966 நான் பச்சையப்பன் கல்லூரி



மாணவன். சைவமும் தமிழும் ஊறிய பின்னணி எனக்கு. எனவே நாத்திகக் கொள்கைப் பெரியார், அறிஞர் அண்ணாதுரை போன்றவர்களை நான் நெருங்கக் கூடாது என்ற கட்டுப்பாடு டன் மாணவப் பருவத்தில் வாழ்ந்தேன்.

1967: இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு அமைச்சர் திருச் செல்வத்திற்கு உதவியாக நான் சென்னை யில் நுங்கம்பாக்கத்தில் முதலமைச்சர் அண்ணாதுரை வீட்டிற்கு அமைச்சர் திருச்செல்வத்திற்கு அழைப்பு. நானும் சேர்ந்து செல்கிறேன். அங்கே தமிழக அரசின் அமைச்சரவைக் கூட்டம். முதல் முதலாகக் கலைஞர் கருணாநிதியை அங்கு தான் பார்க்கிறேன்.

வங்காளதேசத்தில் இருந்து கொழும் புக்கு 1977 தை முதல் வாரத்தில் திரும் பும் வழியில் சென்னையில் சில நாள்கள் தங்கினேன். எதிர்பாராத விதமாக என் அருமை நண்பர் மணவைத்தம்பி அவர் களைச் சந்திக்கிறேன்.

“பிரதமர் இந்திரா, திமுக ஆட்சியைக் கலைத்தார். கலைஞர் முதலமைச்சரைப் பதவியில் இருந்து நீக்கினார். கலைஞரை யாரும் பார்க்கவோ, அவரிடம் செல் லவோ அஞ்சுகிறார்கள்.

இலங்கைத் தமிழருக்குக் கலைஞர் ஆற்றிய நன்மை களுக்காக நீங்கள் அவ ரைச் சென்று பார்த்து ஆறுதல் கூறலாம்” என மணவைத் தம்பி அவர்கள் என்னிடம் சொல்கிறார்.

உடன்பட்டேன். நானும் மணவைத்தம்பி அவர்களும் கோபாலபுரம் இல்லம் சென்றோம். கலைஞருக்கு ஆறுதல் கூறினோம்.

அடுத்த 40 ஆண்டுகள் (1977-2017). இலங்கையில் இருந்த காலத்திலும் சென் னையில் இருந்த காலத்தி லும் அவரோடு எனக்குள்ள தொடர்பு நெருக்கமாகவும் இறுக்கமாகவும் தொடர்ந் தது.

இலங்கையில் இருந் தாலும் விவரங்கள் கேட்க எனக்கு அவரிடமிருந்து தொலைப்பேசி அழைப்பு வரும்.

1986 - 2012 வரை சென்னையில் நான் குடியிருந்தேன். பல நாள்களில் காலை 5 மணிக்கு அவரிடம் இருந்து அழைப்பு வரும். விவரங்கள் கேட்பார்.

சில நாள்களில், “வேலையாக இருக்கி றீர்களா? சந்திக்கலாமா? என்ற அவரின் கனிவுக் குரல் அழைப்பாக வரும். சென்று சந்தித்து உரையாடுவேன்.

அவர் துணைவியர் தயாளு அம்மாள், இராசாத்தி அம்மாள் இருவரும் என் மீது அன்பு கொண்டவர்கள். அவ்வாறே மக்கள், அழகிரி தொடக்கம் கனிமொழி வரை என் மீது அன்பும் பாசமும் கொண்டவர்கள். அவரின் உதவியாளர் களுக்கு நான் கோபாலபுரத்துச் செல் லப்பிள்ளை.

1993 என் தந்தையார் இறந்த போது என் வீட்டிற்கு வந்து நெடுநேரம் இருந் தார். எனக்கு ஆறுதல் சொன்னார். அவ்வாறே என் மகளின் திருமணம் அதே ஆண்டு நடந்த போது நிகழ்வு முழுவதும் கலந்து கொண்டார்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அவர் மறைந்த நாளில் நான் தில்லியில் இருந்தேன். திரும்பியதும் நினைவிடம் சென்றேன். அழுத கண்ணீருடன் கோபாலபுரம் சென்றேன். இல்லத்தவர் அனைவரையும் சந்தித்துத் துயர் பகிர்ந்து கொண்டேன்.

அவர் எழுத்துகள் வழியாக எழுபது ஆண்டுகால அறிமுகம். நேரில் 40 ஆண்டுகள் தொடர்பும் அன்பும் பாச மும் மதிப்பும்.

ஆட்சியில் இல்லாவிட்டாலும் ஆட்சியில் இருந்தாலும் அவர் செய்யக் கூடியதை அவரிடம் கேட்பேன். நான் கேட்டு அவர் செய்யாமல் விட்டது எதுவும் கிடையாது. எனக்காக எதை யும் கேட்டதேயில்லை. ஈழத் தமிழ் மக்களுக்காகவே அவரிடம் எப்பொ ழுதும் எதையும் கேட்பேன். அவர் நெஞ்சத்தில் அவர் உள்ளத்தில் அவர் மனத்தில் ஈழத் தமிழர் நல்வாழ்வு என்றும் நிறைந்திருக்கும். 40 ஆண்டு காலம் நான் அதற்குச் சாட்சி.

---




**பா. பாலரஞ்சன் , குருமண்காடு, வவுனியா.**

**கேள்வி:**

தமிழ் முற்போக்கு கூட்டணியிலிருந்து அதன் தலை வர் மனோ கணேசன் விலகுவதாக அறிவித்திருந்தாரே. விலகிவிட்டாரா?

**வியுக்தியார்:**

அவர் விலக இருப்பதாகத்தானே கூறியிருந்தார். கட் சியில் பலரும் அவர் அந்தப் பதவியில் தொடர வேண் டும் என்று விரும்பினால் அவர் தொடரலாம் தானே. அவர் பதவி விலகுகிறாரோ இல்லையோ, பதவி என்பது ஒருவருக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல. அதுகும் ஒரு அரசியல் இயக்கத்தில் புதியவர்கள் உள் வாங்கப்பட வேண்டும் என்ற செய்தியையாவது சொல்லியிருக்கிறாரே. தேர்தலில் தோற்றாலும், மக்கள் இனிக் காணும் என்று சொன்னாலும் பதவியை விட்டு ஒதுங்க மனமில்லாமல் இருக்கும் தலைவர்களுக்கு அவர் நல்ல செய்தியைச் சொல்லியிருக்கிறார் என்றே நினைக்கின்றேன்.

---

**ப. தயாபரன்,சின்ன உப்போடை, மட்டக்களப்பு.**

**கேள்வி:**

சர்வகட்சி அரசாங்கத்தை எல்லோரும் வரவேற்கின் றார்கள். ஆனால் அதில் இடம்பெறுவதற்கு பின்னடிக் கின்றார்களே. பின்னர் எதற்காக வரவேற்கின்றார்கள் என்று உங்களுக்காவது புரிகின்றதா?

**வியுக்தியார்:**

மீண்டும் ஒரு போராட்டம், ரணில் கோ ஹோம் என்பதையெல்லாம் தாங்கிக்கொள்ளும் மனநிலையில் மக்கள் இல்லை என்பதையும், எல்லோருமாகச் சேர்ந்து விழுந்துகிடக்கும் இந்த நாட்டை தூக்கி நிமிர்த்த வேண் டும் என்றே மக்கள் நினைக்கின்றார்கள் என்பதையும் அவர்கள் நன்றாக புரிந்துவிட்டார்கள் என்பதாலேயே, சர்வகட்சி அரசை வரவேற்கின்றார்கள். ஆனால் தாங் களும் அதில் சேர்ந்தால் தங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்பதையும்- அதாவது தங்கள் திறமையில் அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கையால் அதில் இடம்பெறுவதை தவிர்க்கிறார்கள் அவ்வளவுதான்.

---

**கே.அமலன், கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:**

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழாவில் பங்கேற்கும் அடியவர்கள் தங்க நகைகள் மற்றும் பணத்தை எடுத்துச் செல்வதைத் தவிர்க்குமாறு யாழ்ப்பாணம் பொலிஸார் அறிவுறுத்தி யுள்ளனர். ஆனாலும் பக்தர்கள் நகை அணிவதை தவிர்க்கவில்லையே?

**வியுக்தியார்:**

கோயிலுக்குப் போவதே கடைசியாக வாங்கிய சாறியையும் புதிதாக வாங்கிய நகைகளையும் கோயிலுக்கு வரும் தெரிந்தவர்கள், நண்பர்களுக்கு காட்டுவதற்குத் தானே என்று எனது வீட்டுக்காரி அடம்பிடிக்கின்ற போது, இதற்கு நான் எப்படி பொதுவெளியில் பதில் சொல்வது?

---

**றூபன் ராஜநாயகம், இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:**

தமிழர்களின் சாபமே இன்று சிங்களவர்களின் கோப மாக மாறி ராஜபக்ஷக்களை விரட்டியது என்று தமிழ் உணர்வாளர்கள் சிலர் கூறிவருவது சரியானதுதானே. இதைத்தான் கர்மா என்று சொல்வார்களோ?

**வியுக்தியார்:**

கர்மா இல்லை என்றும் நான் வாதிடப்போவ தில்லை. இரண்டாயிரத்து பதினைந்தில் அவர் தோல்வி யடைந்து அம்பாந்தோட்டைக்கு ஓடிப்போனபோதும் இப்படித்தான் நம்மவர்கள் சிலர் சொன்னார்கள். ஆனால் அவர் மீண்டும் முன்னரைவிட பலமாக எழும்பி வந்தார். என்னைப் பொறுத்தவரை அவர் கர்மாவால் தண்டிக்கப் படுவார் என்றால், போர்க்குற்ற விசாரணையின் பின்னர் தண்டிக்கப்பட்டால் மட்டுமே அந்த நம்பிக்கை வரும்.

---

**கே. ஜெயதீபன், காரைநகர்.**

**கேள்வி:**

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு அரசி யல் தீர்வை வழங்க வேண்டியது அத்தியாவசிய விடய மாகும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கொள்கைப்பிரகடன உரையில் தெரிவித்திருக்கிறாரே. அப்போ இனியாவது தீர்வு வரும் என்று நம்புகின்றீர் களா?

**வியுக்தியார்:**

அவர் தீர்வு வழங்கவேண்டியது அவசியம் என்று தானே சொல்லியிருக்கிறார். வழங்குவேன் என்றோ அல்லது வழங்குவோம் என்றோ சொல்லவில்லையே.

# பைத்தியம்

போகன் சங்கர்



ஒருவேளை பைத்தியமோ என்று யோசித்தேன். ஆனால் ஆளைப் பார்த்தால் அப்படியெல்லாம் தோன்றவில்லை. ஒரு பைத்தியம் இப்படித்தான் இருக்க வேண்டும் என வரையறை இருக்கிறதா என்றுகூட யோசித்தேன். இன்று பைத்தியம் எனச் சொல்வது சரியில்லை என்று என் தோழி ஒருத்தி சொல்கிறாள்.

அப்படிச் சொல்லும் லைசன்ஸ் மனநல மருத்துவர்களிடம் மாத்திரமே உள்ளது. அவர்களும் வேறு ஏதேதோ வாயில் நுழையாத வார்த்தைகளால் அதைச் சொல்லுகிறார்களே தவிர நேரடியாகப் பைத்தியம் என்று சொல்லுவதில்லை. முன்பு இப்படி இல்லை. பைத்தியம் என்கிற சொல் சர்வசாதாரணமாகப் புழங்கியது. பைத்தியங்கள் சர்வசாதாரணமாகப் புழங்கின. இப்போது கவிஞர்கள் மட்டுமே பைத்தியம் என்று அழைக்கப்படும்போது கோபப்படுவதில்லை.

அந்தப் பெண்ணின் கண்களைப் பார்த்தேன். '"ஈ மெயில் போட்டிருந்தேன்" என்றாள். "வரச்சொல்லி பதில்கூட போட்டிருந்தீங்க."

நான் "ஓ" என்றேன். என்னுடைய வழக்கமான சபலப்புத்தி கொண்டு வந்துவிட்ட பிரச்சினையோ இது? பொதுவாகவே எனக்கு வாசகிகள் அதிகம். இது சில சந்தோஷங்களையும் சில தொந்திரவுகளையும் கொண்டு வந்துவிடுகிறது. "உங்கள் கதைத்தலைப்புகளில் ஷ, ஸ, க்ஷ போன்ற மெல்லினங்கள் அதிகம் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று ஒரு மூத்த எழுத்தாளர் என்னிடம் உபதேசித்தார்.

''நீங்க என்ன பண்றீங்க?'' என்று தொடர்பில்லாமல் கேட்டு வைத்தேன்.

அவள், ''மெயில்ல எழுதிருந்தேனே?'' என்றாள். நான் தர்மசங்கடத்துடன் உள்ளே பார்த்தேன். மனைவி வழக்கத்துக்கும் அதிகமான சத்தத்துடன் காப்பி டம்ளர்களை உருட்டும் சத்தம் கேட்டது. என்னைத் தேடி வருகிறவர் ஆணா பெண்ணா, பிராயம் என்ன, அழகாய் இருக்கிறாரா இல்லையா, எப்படி ஆடை அணிந்திருக்கிறார் என்பதைப் பொறுத்து இந்த 'ணங்'கென ஒலிக்கு நாதத்தின் ஓங்காரம் கூடும். அவளைச் சொல்லியும் குற்றம் உண்டா? இதே அவள் ஒரு எழுத்தாளராய் இருந்து வாரத்துக்கு நாலு தடியன்கள் அவளைத் தேடிக் காலையிலேயே வந்து கூடத்தில் அமர்ந்திருந்தால் நான் என்ன செய்திருப்பேன்? நான் பெண்ணியவாதி இல்லை. இருந்தாலும் ஓரளவு பட்சபாதம் இல்லாமல் சிந்திக்கக்கூடியவன்.

நான் அந்தப் பெண்ணின் மற்ற விவரங்களையும் கவனிக்க ஆரம்பித்தேன். வடிவாகத்தான் இருக்கிறாள். பைத்தியத்தின் எந்த இலட்சணமும் இல்லை. அம்மாகூட அப்படித்தானே? அவளிடம் பிரச்சினை இருந்தது என்று யாராலும் கண்டுபிடிக்கவே முடியவில்லை. ஏனோ பெண்களுக்குத்தான் அதிகமாகப் பைத்தியம் பிடிக்கிறது. அவர்கள் உடல் வாகோ மன வாகோ என்னவோ, பைத்தியம் தாவிப் பிடிப்பதற்கு ஏதுவாய் இருக்கிறது. அம்மாவின் பைத்தியம் அவளது கர்ப்பப்பையை எடுத்ததும் அடங்கிவிட்டது. ஆனால் அதன்பிறகு ஒரிஜினல் டாக்குமெண்டின் நூறாவது நகல் போலாகிவிட்டாள்.

ஆண்களுக்குத்தான் கர்ப்பப்பை இல்லையே? அவர்களுக்கு ஏன் பைத்தியம் பிடிக்கிறது? நான் முன்பு குறிப்பிட்டிருக்கும் தோழி கேட்பாள். ஆனால் அது எண்ணிக்கையில் குறைவுதானே? அவளுக்கு என்ன தெரியும்? ஒருநாள் அவளிடம் பைத்தியம் தொற்றுமா என்று கேட்டேன். தொற்றவே தொற்றாது எனச் சொல்லிவிட்டாள். ஆனால் எனக்கு நேரடியாகவே தெரியும். எனது கல்யாணமாகாத அத்தை ஒருத்திக்குப் பைத்தியம் பிடித்து இரவெல்லாம் கூ.. கூவென்று கத்திக்கொண்டே இருப்பாள்.

இரத்தச் சம்பந்தமில்லாத அவளது சினேகிதி மகள்தான் அவளைக் கடைசிவரை பார்த்துக்கொண்டாள். அவள் பேரில் ஊரின் முக்கியப் பகுதியில் ஒரு வீடு இருந்தது. அதற்காகத்தான் என்றால் குற்றமில்லை. ஆனால் அத்தை இறந்துபோன மறுநாள் அவளும் கூ.. கூவென்று கத்த ஆரம்பித்துவிட்டாள்.

நல்லவேளையாக மனைவி காப்பி கொண்டுவந்துவிட்டாள். டம்ளரை ஓரளவு சகிக்கத்தக்க ஒலி அளவுடன் வைத்தாள். அதன் பொருள், வந்திருக்கும் பெண்ணை அவள் அவ்வளவு அழகி என்றோ தனக்குப் போட்டியாளராக மாறக்கூடிய சாத்தியம் உள்ளவள் என்றோ கணிக்கவில்லை என்பதே.

வந்திருந்த பெண்ணிடம் ஏதோ குசலம் விசாரித்து எப்படியோ அனுப்பிவிட்டாள். "சாயங்காலம் வாங்களேன்."

அவள் போனபிறகும் நான் அப்படியே சோபாவில் அமர்ந்திருந்தேன். இதுதான் மிகவும் அபாயகரமான நேரம். மனைவியின் பைத்தியம் வெடிக்கும் நேரம். அவள் கிட்டே வந்து, ''என்ன.. ராத்திரி மாத்திரை போட்டீங்களா இல்லையா?'' என்றாள்.

"என்ன மாத்திரை?" என்றேன்.

அவள் "சரிதான்" என்றாள்.

நான் சோர்வுடன், "டயர்டா இருக்கு. போய் படுத்துக்கிறேன்" என்றேன்.

அவள் "ஆயிடுமே" என்றாள்.

அவள் இப்படி வார்த்தைக்கு வார்த்தை என்னை வீழ்த்த முயன்றது எனக்குச் சோர்வை அளித்தது. அம்மாவும் இப்படித்தான். ஆனால் அம்மாவுக்குத்தான் இறுதியில் பைத்தியம் பிடித்தது. இங்கோ நான்.

நான் அந்தப் பெண் குறித்து யோசித்தேன். என் ஈ மெயிலைத் திறந்து பரிசோதித்தேன். ஆமாம், ஏதோவொரு பத்திரிகைக்காக இண்டர்வியூ கேட்டிருந்தாள். பெயர் வசீகரமாக இருந்தது. ஆள் அந்தளவுக்கு இல்லை. எனக்குச் சிரிப்பு வந்தது. வசீகரமாக இருந்தாலும் நான் என்ன செய்துவிடப் போகிறேன்?

என் நினைவுகள் அம்மாவின் பக்கம் மீண்டும் திரும்பின. அம்மா என் கையை இறுகப் பிடித்து இழுத்துக்கொண்டு டவுனில் ஒரு சந்துக்குள் போய்க்கொண்டிருக்கிறாள். அப்போது தண்ணீர்க் கஷ்டகாலம். வழியெங்கும் குடங்கள் அடிபம்புகளின் முன்பு பிரஜைகள் போல் வரிசையாகக் காத்திருந்தன.

அந்த அடிபம்புதான் ராஜா. முன்னால் கம்பி போட்ட, ரேழி உள்ள வீட்டின் முன்பு நின்று, அம்மா வாசல் கொண்டியைத் தடதடவென்று ஆட்டினாள். கிருஷ்ணர் புல்லாங்குழல் வாசிக்கும் திரைச்சீலையை விலக்கிக் கொண்டு ஒரு சிறுமியின் முகம் எட்டிப் பார்த்தது. சட்டென்று மறைந்தது. உள்ளே கிசுகிசுக்கும் குரல்கள். கொஞ்ச நேரம் மௌனம். அம்மா கொண்டியை மீண்டும் லொடலொடவென்று தட்டினாள், பக்கத்து வீடுகளிலிருந்து எட்டிப் பார்த்தார்கள். எங்கோ அருகே சிலோன் ரேடியோ ஒன்று, "பொங்கும் பூம்புனல்" என்று மகிழ்ந்து கொண்டிருந்தது. நான் என் உள்ளங்கையில் அம்மாவின் கை வியர்வையை உணர்ந்தேன். மெல்ல விடுவித்துக்கொள்ள முயன்றேன். அவள் பிடி இன்னும் இறுகியது. உள்ளிருந்து இப்போது முண்டா பனியன் அணிந்த ஒருவர் எட்டிப் பார்த்தார். அவர் முகம் சிவந்திருந்தது. மீசை இல்லாது நன்கு மழுமழுவென்று சிரைக்கப்பட்ட முகம்.

"அம்மா, என்னம்மா நீங்க.. இப்படி வீட்டுக்கே வந்து தொந்திரவு பண்றீங்க? அன்னிக்கேதான் நான் ஆபீஸ்ல வச்சு விளக்கினேனேம்மா?"

அம்மா, "எனக்கு பேச்சு உங்க சம்சாரத்துக்கிட்டேதான். அவங்கதான் விளக்கணும்" என்றாள். "நேத்து அவரு சட்டைப்பையில இந்த மல்லிகைப்பூ இருந்தது" என்று பர்சிலிருந்து எடுத்துக் காண்பித்தாள். "இது உங்க சம்சாரத்தோடது இல்லன்னு அவங்க சொல்லட்டும்."

"சிவராமா, அங்கே என்னடா பிரச்சினை?" மாடியிலிருந்து ஒரு குரல் கேட்க அம்மா பதில் சொல்வதற்குள் அவர் தடாலென்ற சத்தத்தோடு கதவைத் திறந்தார். "உள்ளே வந்து பேசுங்கோ.. தலையெழுத்து-மானக்கேடு.."

அம்மா என்னையும் இழுத்துக் கொண்டு உள்ளே நுழைந்து அங்கிருந்த மர நாற்காலியில் அமர்ந்துகொண்டாள். "உங்க வீட்ல இருக்கிற பூஜை ரூம்ல சாமி முன்னாலே உங்க குழந்தை மேல ஒரு தடவை உங்க சம்சாரம் சத்தியம் பண்ணாப் போதும். நான் போயிடறேன். இனி வரமாட்டேன்."

அவர் சட்டென்று உள்ளே போனார். "கமலம், ஏய் கமலம்.."

கமலம் வெளியே வரவில்லை.

அதட்டல்களும் விசும்பல்களும்தான் வெளியே வந்தன. அவர் குரலின் ஸ்தாயி கூடிக்கொண்டே போவது கேட்டது. நான் அந்தக் கமலம் மாமியைப் பார்க்க மிகவும் விரும்பினேன். ஆனால் அவள் வரவேயில்லை.

நேரமாக ஆக அம்மாவின் முகத்தில் பிரகாசமும் அமைதியும் கூடிக்கொண்டே போனது.

"அப்போ?" எனத் தனக்குத்தானே உரக்கக் கேட்டுக்கொண்டாள். "நான் பைத்தியமில்லைதானே?"

யாரிடம் அந்தக் கேள்வியைக் கேட்டாள்? தெரியவில்லை.

எல்லோரது வீடுகளிலும் விளக்கு போட ஆரம்பித்துவிட்டார்கள். அம்மா புன்னகையுடன் எழுந்தாள். வெளியே சந்திப் பிள்ளையார் முக்குக்கு நடந்துவந்து பஸ் பிடித்தோம். அம்மா இப்போது உற்சாகமாக இருந்தாள். என் கையை விட்டுவிட்டாள்.

"உனக்கு என்னதாவது வேணுமாடா?" என்றாள். நான் "வேணாம்" என்றேன். இருந்தும் ஜங்ஷனில் இறங்கி லக்ஷ்மி விலாஸ் லாலா கடையில் எனக்குப் பிடித்த தடியங்காய் பர்பி, அரசன் கலர் பூந்தி எல்லாம் வாங்கினாள்.

அன்றிரவு அப்பா வரவில்லை. மறுநாள் காலையிலும் வரவில்லை. சாயங்காலம் வந்தார். சட்டையெல்லாம் அழுக்காகி, தலை வாராமல் குளிக்காமல், சிவந்த கண்களுடன் வந்தார்.

"செத்துப் போயிட்டாடீ!" என்று கதறினார். "கெரசின் ஊத்திக் கொளுத்திக்கிட்டா! கொன்னுட்டடீ அவளை.. பாவீ!"

அம்மா அசரவில்லை. "முதல்ல குளிங்க. சாவு வீட்டுக்குப் போனா குளிக்காம வரக்கூடாது!" என்றாள்.

அப்பா பேச்சின்றி அவளையே பார்த்தார்.

"காப்பி குடிக்கீகளா?" என்றாள் அவள்.

அப்பா அதன்பிறகு வெகுநாள் இருக்கவில்லை. பென்ஷன் பேப்பர்களுக்காக ஒரே ஒருமுறை அவர் அலுவலகத்துக்குப் போகவேண்டி இருந்தது. அதே அலுவலகத்தில்தான் கெரசின் ஊற்றி எரிந்துபோன கமலம் மாமியும் வேலை செய்துகொண்டிருந்தாள். எல்லோரும் அவளைப் பயத்துடன் பார்த்தார்கள்.

அம்மா அவர்களிடம் சொன்னாள். "ஏன் பயப்படணும்? நான்தான் பைத்தியம் இல்லேன்னு ப்ரூவ் ஆயிட்டுதே?"

# கலைந்த கனவாகும் “கட்டலோனியா”

## ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைகளும் ஸ்பெயினின் ஆதிக்க அழுத்தங்களும்

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**



2017ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஸ்பெயினில் இருந்து கட்டலோனியா (Catalonia) விடுதலை பெற்று தனி நாடாகிவிட்டதாக ஒரு பிரகடனத்தை கட்டலோனியா தன்னாட்சிப் பிரதேசத்தின் அதிபர் கார்லஸ் பூஜ்டியமோன் மற்றும், பிராந்தியத் தலைவர்கள் கையெழுத்திட்டு வெளியிட்டனர்.

**தனி நாடாக பிரகடனம்:**

“சுதந்திரமான, இறையாண்மை உள்ள நாடாக கட்டலோனியாவை அங்கீகரிக்க வேண்டும்,” என்று அந்தப் பிரகடனம் வேண்டுகோள் விடுத்தது. ஸ்பெயினின் தன்னாட்சி பெற்ற மாகாணமாக இருந்து வந்த கட்டலோனியாவில் தனிநாடு கோரி 2017 அக்டோபர் 1ல் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஸ்பெயின் நாட்டுடன் இணைந்து இருப்பதா..? அல்லது தனி நாடாக பிரிந்து செல்வதா..? என்பதை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது.

உலகெங்கிலும் ஒவ்வொரு தேசிய இனங்களும் ஒடுக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்து கொண்டிருக்கின்றன. தனக்கென தனி அரசுகளை அமைத்துக் கொள்ளும் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றன. அப்படி ஸ்பெயினிலிருந்து பிரிந்து கட்டலோனியா தேசமும் தனிநாடாக தன்னை 27.10.2017 அன்று பிரகடனப் படுத்திக் கொண்டது.

மக்களின் விருப்பம், ஸ்பெயினிடம் இருந்து கட்டலோனியா தனி நாடாகப் பிரிந்து செல்லவேண்டும் என்பதே என்று கட்டலோனிய நாடாளுமன்றத்தில் கூறிய பூஜ்டியமோன், அதே நேரம் தாம் இந்த விஷயத்தில் பதற்றத்தைத் தணிக்க விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

செழிப்பான வட-கிழக்கு பகுதியான கட்டலோனியாவில், உள்ள 23 இலட்சம் மக்களில், வாக்குப்பதிவில் பங்கேற்ற 90 சதவிகிதம் பேர், சுதந்திரம் வேண்டும் என்றே வாக்களித்துள்ளனர். இந்த வாக்கெடுப்பில் 43 சதவிகித ஓட்டுக்கள் பதிவாகின. இந்த தேர்தலில் பல முறை கேடுகள் நடந்ததாகவும், சில வாக்குப்பெட்டிகள் ஸ்பெயின் காவல்துறையால் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.




**தனி நாட்டு வாக்கெடுப்பை அங்கீகரிக்கவில்லை**

ஸ்பெயின் தனி நாட்டுக்கான வாக்கெடுப்பை அங்கீகரிக்கவில்லை. அதன் தலைவர்களையும் கைது செய்தது. கட்டலோனிய சுதந்திரம் கோரி போராடிய தலைவர்கள் சிறையில் அடைத்தனர். ஸ்பெயினுக்கெதிராக கிளர்ந்தெழுந்தனர் மக்கள். கட்டலோனிய சுதந்திரம் கோரி ஸ்பெயினுக்கெதிராக போராடிய தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டதை அடுத்து, ஏறத்தாழ 3,50,000 மக்கள் பார்சிலோனாவில் வீதியில் இறங்கி போராடினர்.

கட்டலோனியா சுதந்திர இயக்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக இவர்கள் அமைதியான ஒரு பேரணியையும் மேற்கொண்டனர். 2017ஆம் ஆண்டு கட்டலோனியா எனும் தனி நாட்டை வலியுறுத்தி சுதந்திரத்திற்கான வாக்கெடுப்பு சட்டத்திற்குப் புறம்பாக நடந்தது எனவும் ஸ்பெயினால் குற்றஞ்சாட்டப்பட்டது.

**நாடாளுமன்ற கலைப்பு:**

இதனை அடுத்து, ஸ்பெயினில் இருந்து பிரிந்து தனி நாடாவதாக அறிவித்த தன்னாட்சி பிரதேசமான கட்டலோனியாவின் பிராந்திய நாடாளுமன்றத்தை கலைப்பதாக அன்றைய ஸ்பெயின் பிரதமர் மரியனோ ரஜாய் அறிவித்தார்.

ஸ்பெயினின் நேரடி ஆட்சியின் கீழ் கட்டலோனியா வருவதாகவும், விரைவில் தேர்தல் நடத்தப்பட்டு கட்டலோனியாவுக்கு புதிய அரசு தேர்வு செய்யப்படும் என்றும் அவர் அப்போது கூறினார்.

கட்டலோனியா தன்னாட்சிப் பிரதேசத்தின் அதிபர் கார்லஸ் பூஜ்டிமோன் தலைமையிலான அமைச்சரவையையும் பதவி நீக்கம் செய்ய அவர் உத்தரவிட்டார். அத்துடன் கட்டலோனியா தனது சுதந்திரம் குறித்து விடுக்கும் எந்த ஒரு பிரகடனத்துக்கும் எந்த ஒரு பலனும் இருக்காது என்று ஸ்பெயின் பிரதமர் மரியானோ ரஜாய் எச்சரித்தார். மேலும் , கட்டலோனியா பிரதேசத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் தன்னாட்சி உரிமையை இடை நிறுத்தப்படும் என்று அவர் கூறினார்.

**வளமான கட்டலோனியா :**

ஸ்பெயினில் வள மான பகுதி கட்ட லோனியா. அவர்களுக்கென தனி கலாச்சாரமும், மொழியும் இருக்கிறது. அந்தப் பகுதியில் 75 லட்சம் பேர் வசிக்கிறார்கள். இது சுவிட்சர்லாந்து மக்கள் தொகையை விட அதிகம்.

ஐரோப்பிய ஒன்றியம் இந்த பிரச்சனையை ஸ்பெயினின் உள் விவகாரமாகக் கருதி, பிரிவினைவாத தலைவர்கள் முன் வைத்த கோரிக்கைகளைப் புறந்தள்ளிவிட்டது. ஸ்பெயினின் ஒரு தன்னாட்சி பெற்ற மாகாணம் ஆகும். இதன் தலைநகரம் பார்செலோனா, இதன் பரப்பளவு 32,114 சதுர கி.மீ. ஆகும். இதன் மக்கட்தொகை 7,504,881 ஆகும்.

கட்டலோனியா இது ஸ்பெயினின் வட கிழக்கு பகுதியில் அமைந்துள்ளது. கட்டலோனியா மாகாணத்திற்கு, தனி அரசியலமைப்பு சபை, தனி நாடாளுமன்றம், தனி தேசிய கீதம், தனி கொடி மற்று முத்திரைகள் கொண் டது. கட்டலோனியா ஸ்பெயினின் நான்கு மாகாணங்களை அடக்கி உள்ளது. பார் செலோனா, கிரோனா, இலைய்டால், தரகோனா. பார்செலோனா இதன் தலைநகரமாகவும் மிகப் பெரிய நகரமாகவும் விளங்குகின்றது. ஸ்பெயினின் இரண்டாவது பெரிய நகரமாகவும் ஐரோப்பாவின் பெரும் பெருநகரப் பகுதிகளில் ஒன்றாகவும் உள்ளது. 2017 அக்டோபர் 27 இல் கட்டலோனியா தன்னைத் தனி நாடாக அறிவித்தது.

**கட்டலோனியா தன்னாட்சி:**

முந்தைய கட்டலோனியா மன்னராட்சியின் பெரும்பகுதி தற்போதைய கட்டலோனியாவில் அடங்கியுள்ளது. மற்ற பகுதி பிரான்சின் பிரன்னீசு-ஓரியன்டேல் மாகாணத்தின் பகுதியாக உள்ளது. இதன் எல்லையாக வடக்கில் பிரான்சும் அந்தோராவும் உள்ளன. கிழக்கில் மத்திய தரைக் கடல் உள்ளது. ஸ்பெயினின் பிற தன்னாட்சிப் பகுதிகளான அரகொன் மேற்கிலும் வளன்சியான் மாநிலம் தெற்கிலும் உள்ளன.

இப்பகுதியில் காத்தலான், ஸ்பெயின் மற்றும் ஆக்சிதத்தின் அரணிய மொழியும் அலுவல்முறை மொழிகளாக விளங்குகின்றன. தற்போதும் பார்சிலோனா கால்பந்துக் கழகம் உலக அளவில் முதல் இடத்தை வகிக்கிறது. காட்டலோனியா தன்னாட்சி பகுதி, ஸ்பெயினில் இருந்து பிரிந்து சுதந்திரமான நாடாக அமைவதற்கு நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 80 வீத மக்கள் காட்டலோனியா தனி நாடாக பிரிவதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

**கட்டலோனியா விடுதலை இயக்கம்:**

1922 ஆம் ஆண்டில் கட்டலோனியா விடுதலை இயக்கம் தோன்றுகிறது. ஸ்பெயின் ராணுவத்தில் பணியாற்றிய பிரான்சிஸ் மாசி என்பவரால் தொடங்கப்பட்ட இந்த இயக்கம் ஸ்பானிய அரசிடமிருந்து விடுதலை பெறுவதை நோக்கமாகக் கொண்டு இயங்கியது. பின்னாட்களில் பல இயக்கங்கள் சேர்ந்து கட்டலோனியா குடியரசு இயக்கத்தை உருவாக்கினர்.

1930 ஆண்டில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் இந்த இயக்கம் பெரு வெற்றி பெற்றது. தனிநாடு கேட்டு வந்த இந்த இயக்கம் ஸ்பெயின் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி தன்னாட்சி பெற்ற கட்டலோனிய குடியரசு அமைத்துக் கொண்டது. சர்வதிகார ஆட்சி அமைந்த பின்பு தன் னாட்சி அதிகாரம் பறிக்கப்பட்டதையும் 1980 ம் ஆண்டு மீண்டும் தன்னாட்சி அதிகாரம் மீட்டுப்பெறப்பட்டது.

1980 ம் ஆண்டில் அமைக்கப் பெற்ற நாடாளுமன்றம் ஸ்பெயின் அர சின் கட்டுப்பாட்டில் தான் இருந்தது. கட்டலோனியா மக்களின் சமூக, அரசியல் பொருளாதாரத் திட்டங்களை தாங்கள் நினைத்தது போல் நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை. இதனால் கட்டலோனியா மக்கள் வீரியமிக்க போராட்டங்களை நடத்தினர். இதனால் ஸ்பெயின் அரசு “தேசத்தகுதி“ கொண்ட தன்னாட்சி உரிமை கொடுக்கப்படும் என்று அறிவித்தது.

அந்த அறிவிப்பு வெளியான உடன் ஸ்பெயின் உயர்நீதிமன்றம் “தேசத்தகுதி” கொண்ட தன்னாட்சி உரிமை என்பது அரசிலமைப்புக்கு புறம்பானது என்று கூறி இதனைத் தடை செய்தது. இது தான் இன்று கட்டலோனியா விடுதலைப் பிரகடனம் வரை கொண்டுவந்து சேர்த்துள்ளது.

**கட்டலோனியா கற்ற பாடம் :**

ஐ.நா. அவை, ஒன்றிற்கு மேற்பட்ட தேசிய இனங்களை கொண்ட நாட்டிலிருந்து எந்தவொரு தேசிய இனமும் பிரிந்து செல்வதற்கு உரிமை உள்ள சுயநிர்ணய உரிமையை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளது. அந்த சுயநிர்ணய உரிமையை சட்டப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு தான் எல்லா நாடுகளும் ஐ.நா அவையில் அங்கம் வகிக்கின்றன. அதற்கு ஸ்பெயின் விதிவிலக்கல்ல.

40 ஆண்டுகளாக ஆயுத போராட்டத்தை நடத்தி கொண்டிருந்த பாஸ்க் விடுதலை போராட்டத்தை ஒடுக்கிய ஸ்பெயினுக்கு கட்டலோனியா விடுதலை போராட்டத்தை நசுக்குவது மிக பெரிய வேலையாக கருதவில்லை. அதனால் தான், கட்டலோனியா விடுதலை பிரகடனத்தை அறிவித்த அடுத்த நாளே கட்டலோனிய நாடாளுமன்றம் ஸ்பெயின் பிரதமரால் கலைக்கப்பட்டது.



கட்டலோனிய விடுதலை பிரகடனத்தை செய்தவர்களும் துணை நின்றவர்களின் மீதும் தேசத்துரோக குற்றசாட்டப்பட்டது. அத்துடன் காவல் துறை அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். நீதிமன்றத்தில் நேர்மையாக விசாரணையை எதிர்கொள்ளச் சென்றவர் கள் சிறையில் அடைக்கபட்டார்கள். இப்படி ஸ்பெயின் கட்டலோனியா மீது கடூர அடக்கு முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளது என்பது உலகறிந்த உண்மையாகும்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27.  உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) 6 தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36.  இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

கல்வி tv CHANNEL-1

**31.07.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**31.07.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# சர்வகட்சி அரசாங்கத்தால் எவ்வித நன்மையும் இல்லை

## கூறுகிறார் சரத் பொன்சேகா



கொழும்பு, ஒக. 07

சர்வகட்சி அரசாங்கமொன்றை ஸ்தாபிப்பதனால் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அனைத்துக் கட்சி அரசாங்கம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறானதொரு அரசாங்கம் தற்போதுள்ள பிரச்னைகளுக்கு தீர்வை வழங்கும் என தான் எண்ணவில்லை என்றும் சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.

ஆகவே தற்போது மக்களின் குறைகளுக்கு உடனடியாக தீர்வை கண்டறிவதே மிகவும் அவசியம் என்றும் அவர் கூறினார். (அ)

# போசனை மிக்க உணவுகளின் விலை 156 வீதத்தினால் உயர்வு

## உலக உணவுத் திட்டம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக. 07

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் மோசமான பொருளாதார நெருக்கடியானது தீவிரமான உணவு நெருக்கடியில் இருந்து உருவாகியுள்ளது என்று உலக உணவுத் திட்டப் பிரதிநிதி அப்துர் ரஹீம் சித்திக் தெரிவித்துள்ளார்.

2018 ஆம் ஆண்டிலிருந்து போசனைமிக்க உணவின் சராசரி மாதச் செலவு 156 சதவீதம் உயர்ந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நச்சுக் கலவையான விலைவாசி உயர்வு பயிர் விளைச்சல் குறைதல் உக்ரைன் போரின் வீழ்ச்சி மற்றும் முக்கிய பொருட்களுக்கு பணம் செலுத்த அரசாங்கத்திடம் நிதி பற்றாக்குறை என்பன உணவு பற்றாக்குறைக்கான காரணங்கள் என்று அவர் விபரித்துள்ளார்.

இலங்கையில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது மற்றும் எரிபொருள் உணவு மற்றும் உரம் போன்ற அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய தேவையான பணம் இல்லை என்று குறிப்பிட்ட அவர், நன்கொடையாளர்களின் ஆதரவை வலியுறுத்தியுள்ளார்.

உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகளின் விவசாய சம்மேளனம் ஆகியவற்றின் சமீபத்திய மதிப்பீட்டின்படி இலங்கையில் 6.3 மில்லியன் மக்கள் - அதாவது மொத்த சனத்தொகையில் 30 சதவிகித மக்கள் - உணவுப் பாதுகாப்பற்றவர்களாக உள்ளனர்.

இலட்சக்கணக்கான குடும்பங்கள் அரிசி போன்ற முக்கிய உணவுப் பொருட்களைக்கூட வாங்க முடியாத வகையில் 90 சதவீத உணவுப் பணவீக்கத்துடன் இலங்கை போராடி வருகிறது.

2018 ஆம் ஆண்டிலிருந்து போசனைமிக்க உணவின் சராசரி மாதச் செலவு 156 சதவீதம் உயர்ந்துள்ளது. எனவே அவசர தலையீடு இல்லாமல் 22 மில்லியன் மக்கள்தொகைக்கு உணவளிக்கும் திட்டங்கள் இருண்டதாகவே இருப்பதாக சித்தீக் குறிப்பிட்டுள்ளார். (அ)

# உணவுப் பொதி, தேநீர் விலை குறைகின்றது

கொழும்பு, ஒக. 07

சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை குறைவடைந்ததைத் தொடர்ந்து, உணவுப் பொதி மற்றும் தேநீர் விலையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், கடந்த நாட்களை விடவும் பேலியகொடை மெனிங் சந்தையில் மரக்கறி, பழங்கள் மற்றும் மீன்களின் விலைகள் நேற்று அதிகரித்துக் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்துக்கான எரிபொருள் கொள்வனவில் உள்ள சிரமங்கள் காரணமாகவும், மழையுடனான வானிலை காரணமாகவும் இவ்வாறு விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# ஜனாதிபதியின்...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுபவர்களுக்கு முற்றுமுழுதான மன்னிப்பை வழங்குமாறு ஜனாதிபதியை நாம் கேட்டுக்கொள்கிறோம். அரசியல் தலைமைத்துவத்தில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு பங்களிப்புச் செய்த இளைஞர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மீது பெருந்தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். அவசரகால சட்டத்தை பயன்படுத்தி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது.

(5) நாடு இன்று எதிர்நோக்குகின்ற பொருளாதார இடர்பாடுகளும் செலவைச் சமாளிக்கக் கூடியதாக சம்பாதிக்க இயலாமல் இருக்கின்ற நிலையும் மக்களின் பொருளாதாரம், வாழ்க்கைத் தரம் மற்றும் ஜீவாதாரங்களில் பாரிய மறுசீரமைப்பை வேண்டிநிற்கின்றன. இதற்கு மக்களின் ஆதரவுடனும் புதிய ஆணையுடனும் கூடிய அரசாங்கம் ஒன்று தேவை. ஒரு வருட கால வரையறைக்குள் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்று நாம் கோருகிறோம். சிறுபான்மைச் சமூகங்களுக்கு முக்கியமானதான - நீண்டகாலமாக பின்போடப்பட்டிருக்கும் மாகாணசபை தேர்தல்களும் நடத்தப்படவேண்டும்.

போராட்ட இயக்கத்தின் முன்னணி உறுப்பினர்களை தொடர்ச்சியாக கைது செய்யும் நடவடிக்கை துரதிர்ஷ்டவசமாக நாட்டின் மீது இருளைக் கவிய வைத்திருக்கிறது. ஜனாதிபதி தனது கொள்கை விளக்கவுரையில் கூறியவற்றை நடைமுறையில் செய்துகாட்டினால் அந்த இருளை அகற்றமுடியும். அதைச் செய்யாவிட்டால் அரசியல் உறுதிப்பாடு மற்றும் தேசிய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சிக்கான எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் நழுவிப்போகும்.

அரசியல் உறுதிப்பாட்டை மீளநிலைநிறுத்துவதே உடனடித்தேவையாகும். அதற்கான மார்க்கம் போராட்டக்காரர்களுக்கும் அவர்களின் தலைவர்களுக்கும் எதிராக அவசரகாலச்சட்டத்தை பயன்படுத்தி நடவடிக்கை எடுப்பதல்ல, மாறாக நாடுபூராவும் இலட்சக்கணக்கில் இளையவர்களையும் முதியவர்களையும் வீதிக்கு இறக்கிய மூலக்காரணிகளை களைவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அத்துடன் போராட்டக்காரர்களுடன் அமைதிவழியில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான வழிவகைகளை கண்டறிய வேண்டும். ஒரு சில மாதங்களுக்குள் தங்களது வாழ்க்கைத்தரம் நிலைகுலைந்துபோய்விட்டதனால் திணறிக்கொண்டிருக்கும் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை அவர்களுடனான பேச்சுவார்த்தைகள் மூலம் கையாள வேண்டுமே தவிர எதிர்க்குரல்களை மௌனப்படுத்துவதற்கு அவசரகால சட்ட அதிகாரங்களை பயன்படுத்தி வேட்டையாடக்கூடாது.



# சர்வகட்சி அரசை அமைக்கவே கோட்டாபய பதவி விலகினார்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 07

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்காகவே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினார் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சியின் அலுவலகத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தனவுடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதியை இராஜினாமா செய்ய வைக்கும் ஆரம்ப இலக்கு நிறைவேறியதன் பின்னர் காலி முகத்திடலில் போராட்டக்காரர்களிடம் எவ்வித திட்டமும் இல்லை என்றும் தெரிவித்தார்.

இந்நிலையில் தன்னை நிரூபித்து நாட்டை வழிநடத்த புதிய ஜனாதிபதிக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

மேலும் நாட்டில் கிளர்ச்சி உருவாகும் பட்சத்தில், அதை அடக்குவதன் மூலமே கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 10 - 11 - 1955 |  | 05 - 08 - 2022 |

## திருமதி துரைராஜா மகேந்திரராணி

துன்னாலையை பிறப்பிடமாகவும், அல்வாய் மயிலிட்டி, பாமாலயத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைராஜா மகேந்திரராணி நேற்றுமுன்தினம் (05.08.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி – பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு – செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற டாக்டர் தம்பு துரைராசா (D.A.M) அவர்களின் அன்பு மனைவியும், திரு.சி. மகேந்திரன் (பாலேந்திரன் – ஓய்வுநிலை தபால் ஊழியர். கரவெட்டி) அவர்களின் அன்புச் சகோதரியும், த.இராசதுரை, காலஞ்சென்ற இ. தவமணிதேவி, திருமதி.க.கமலாதேவி. த.தவேந்திரராஜா (ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் கரவெட்டி), த.செல்வநேசன், திருமதி ம.மங்களவதனி ஆகியோரின் அன்பு மைத்துனியும், டாக்டர் து.இராஜவேல் (மாதுஜன் மெடிக்கல் வல்வெட்டித்துறை), ஞானவேல் (கல்விசாரா ஊழியர், யா/சின்னத்தம்பி வித்தியாலயம்), அ.பாமதி. வேலும்மயிலும் (சுவிஸ்). நிலோஜன் (சுவிஸ்), ஜீவிதன் (கமநலத்திணைக்களம் வேலணை), மாதுஜன் (மாதுஜன் கேபிள் ரீவி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி. ரா.சாயிதர்சினி (ஆசிரியர். யா/நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்), திரு.க.அனுசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிந்தூரிக்கா (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்). மாதுரி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.08.2022) சனிக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாமாலயம், மயிலிட்டி,
அல்வாய்.

தகவல் :
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு :
**0776664674, 0769195630**

## சர்வ கட்சி...

கப்பட்டுள்ளதாவது:

அனைத்து கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் பின்னர் உடனடியாக 30 பேர் கொண்ட அமைச்சரவையை நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை அடுத்த பதினைந்து நாட்களுக்குள் முடித்து வைத்து புதிய அமைச்சரவையை அறிவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் அந்தந்த கட்சிகளுக்கு வழங்கப்படும் அமைச்சுப் பதவிகள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்படவுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

18 அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தற்போது இடம்பெற்று வரும் கலந்துரையாடலின் பின்னர் மேலும் 12 அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சி உறுப்பினர்கள் பலருக்கும் அமைச்சரவை அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் அனைத்து அமைச்சர்களுக்கும் அமைச்சர் சம்பளம் மற்றும் வாகனம் மட்டும் வழங்கவும், கொடுப்பனவுகளை குறைக்கவும் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

அரசாங்கத்தை நடத்துவதற்கு ஜனாதிபதிக்கு ஆதரவான தரப்பினரிடம் இருந்து கிடைக்கப்பெறும் பிரேரணைகளின் பிரகாரம் அமைச்சர் பதவிகள் யாருக்கு வழங்குவது என்பது தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியால் முன்மொழியப்பட்ட அனைத்துக கட்சி அரசாங்கத்தை கட்டியெழுப்புவதற்கு ஆதரவளிப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட கட்சி நான்கு நிபந்தனைகளை விதித்துள்ளது. அழகப்பெரும தனது ருவிட்டர் செய்தியிலும் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## பொருளாதார...

தெரிவித்துள்ளார்.

இந்தச் சவால்களை எதிர்கொள்வதற்கான தேசிய மூலோபாயத்தை வகுப்பதில் அனைத்து அரசியல் கட்சிகளிடையே ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு ஜனாதிபதியின் அர்ப்பணிப்பை ஐ.நா பொதுச்செயலாளர் ஒப்புக்கொண்டுள்ளதோடு, அவ்வாறு செய்யும்போது பொதுமக்களுடன் கலந்தாலோசித்தல், சட்டத்தின் ஆட்சி மற்றும் அடிப்படை மனித உரிமைக் கோட்பாடுகளுக்கு மதிப்பளித்தல் உட்பட அனைத்துத் தரப்பினருக்குமிடையில் கலந்துரையாடலை ஊக்குவிப்பதன் முக்கியத்துவமும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பெண்களின் அரசியல் பங்கேற்புக்கான இலங்கையின் முயற்சிகளை அங்கீகரிப்பதிலும், முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கு ஜனாதிபதியின் தலைமைத்துவத்தை ஊக்குவிப்பதிலும் ஆதரவு வழங்குவதாக அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை, இலங்கை அரசுக்கும் மக்களுக்கும் உடனடி மற்றும் நீண்டகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளதுடன், அனைத்து இலங்கையர்களுக்கும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், நிலையான அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றில் ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்பைத் தொடர்ந்து பேணுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அந்த வாழ்த்துச் செய்தியில் ஐ.நா. பொதுச் செயலர் குறிப்பிட்டுள்ளார். (அ)

மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், விக்னேஸ்வரன் உள்ளிட்ட சிறு கட்சித் தலைவர்கள் அனைத்துக் கட்சி ஆட்சிக்கு ஆதரவளிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளனர்.

28 அமைச்சுகளுக்கான செயலாளர்களை நியமிக்கும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க முன்னர் வெளியிட்டிருந்தார்.

மே 9 ஆம் திகதி மற்றும் அதற்கு அடுத்த நாட்களில் தீயில் எரிந்து நாசமான பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பீரிஸின்...

ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பின்போது, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டுமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தீர்மானித்திருந்தது. கட்சி செயலாளரால் இது தொடர்பில் அதிகாரப்பூர்வமாக அறிக்கையும் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், கட்சியின் தவிசாளரான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு வழங்கினார். அவரின் பெயரையும் வழிமொழிந்தார். தற்போது டலஸ் அணியில் முக்கிய நபராக திகழ்கின்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 16 பேர் கொண்ட எம்.பிக்கள் குழுவொன்று டலஸ் அழகப்பெரும தலைமையில், சுயாதீனமாக செயற்பட்டுவருகின்றது .

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே பீரிஸிடமிருந்து தவிசாளர் பதவியை பறிக்குமாறு, கட்சி தலைமையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், டலஸ் அணியில் செயற்படும் உறுப்பினர்களிடமிருந்து மொட்டு கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவியும் பறிக்கப்படவுள்ளது. (அ)

## அமைச்சுப்...

இணக்கப்பாட்டை மீறும் வகையில் தலைமைப்பீடம் செயற்படுவதால், பங்காளிக்கட்சி தலைவரொருவர் கடும் அதிருப்தியில் இருப்பதாகவும் அவ்வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பின்போது டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்கும் முடிவை எடுத்திருந்த தமிழ் முற்போக்குக் கூட்டணி, கட்சிக்குள் சில இணக்கப்பாடுகளையும் ஏற்படுத்திக்கொண்டது.

புதிய பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படும்வரை அமையும் சர்வகட்சி இடைக்கால அரசில், ஏற்கனவே அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவிகளை வகித்த இருவரும், பதவிகளைப் பொறுப்பேற்கமாட்டார்கள் எனவும், ஏனையோருக்கு வாய்ப்பளிக்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இதில் பங்காளிக்கட்சி தலைவரொருவருக்கு அமைச்சரவை அமைச்சுப் பதவி பெற இடமளிக்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

எனினும், தற்போது ஏனைய இருவருமே அமைச்சுப் பதவிகளை பெறுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர் எனவும், இதனால் கடும் அதிருப்தியில் இருக்கும் பங்காளிக்கட்சித் தலைவர், விரைவில் தீர்க்கமானதொரு அரசியல் முடிவை எடுக்கக்கூடும் எனவும் தெரியவருகின்றது. (அ)

## இலங்கை...

யுள்ளார்.

இந்நிலையிலேயே, அவர்களைக் கைதுசெய்ய சர்வதேச நீதி அமைப்பை அமுல்படுத்தவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

தற்போது இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, சீனா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு மட்டுமே இலங்கை இராணுவ அதிகாரிகள் செல்ல முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பவித்ரா, ஜோன்ஸ்டன் குழுவுக்கு மீண்டும் அமைச்சுப் பதவிகள்?

கொழும்பு, ஒக. 07

சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் போது தமது மாவட்டத் தலைவர்களுக்கு அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு கோரிக்கை விடுக்கும் யோசனையை ஜனாதிபதியிடம் முன்வைக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாகதெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவுடன் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, மஹிந்தானந்த அளுத்கமகே, பவித்ரா வன்னியாராச்சி, எஸ்.எம். சந்திரசேன, ரோஹித அபேகுணவர்தன ஆகியோருக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சார்பில் அமைச்சுப் பதவிகளை பரிந்துரைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை 28 அமைச்சுக்களுக்கான வர்த்தமானி வெளியிடப்பட்டு செயலாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

சர்வகட்சி அரசாங்கத்தில் 30 அமைச்சரவை அமைச்சர் பதவிகளும், 30 இராஜாங்க அமைச்சர் பதவிகளும் நியமிக்கப்படவுள்ளதாகவும், அரசாங்க தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் வடக்கு-கிழக்கு மற்றும் மலையக தமிழ் மக்களுக்கு அதிகூடிய சேவையை வழங்குவதற்காக அந்த மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சரவை அமைச்சுப் பதவிகள் மற்றும் இராஜாங்க அமைச்சர் பதவிகளை வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், தேசிய காங்கிரஸ் தலைவர் எம். ஏ.எல்.எம். அதாவுல்லா மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பெற்றோலிய பொருட்களை இறக்குமதி, விற்பனை செய்ய பொருத்தமான நிறுவனங்களை மதிப்பாய்வு செய்யக் குழு!

பெற்றோலிய பொருட்களை இறக்குமதி செய்யவும், விநியோகம் மற்றும் விற்பனை செய்வதற்கும், பொருத்தமான நிறுவனங்களை மதிப்பாய்வு செய்வதற்காக, குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் இந்தக் குழு நியமிக்கப்பட்டதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர ருவிட்டர் பதிவொன்றில் தெரிவித்துள்ளார்.

மதிப்பாய்வுக்கு முன்னர், அதன் நோக்கங்கள் தொடர்பில் குறித்த குழுவுக்கு விளக்கப்பட்டுள்ளது. இதனூடாக, இலங்கையின் பெற்றோலிய தொழிற்துறையில், கனியவள கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சியுடன், பல நிறுவனங்கள் ஈடுபட உள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பு செய்வதற்கான பரிந்துரைகளை முன்வைக்க, 8 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம், குறித்த குழு நியமிக்கப்பட்டதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். (அ)

# கொழும்பில் கொரோனா உப திரிபு வேகமாக பரவல்!

கொழும்பு, ஒக. 07

கொழும்பிலும், அதனை அண்டிய பகுதிகளிலும், கொரோனா உப திரிபு ஒன்று வேகமாக பரவுவதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின், ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் துறைப் பிரிவு தெரிவித்துள்ளது.

24 கொரோனா நோயாளர்களின் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்தியதில், 20 மாதிரிகளில், இந்தப் புதிய உப திரிபு கண்டறியப்பட்டுள்ளதாக அந்தப் பிரின் விசேட வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

டீயு-5 என்ற கொரோனா உப திரிபானது, கொழும்பில் வேகமாக பரவுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில், மேலும் சில கொரோனா நோயாளர்களின் மாதிரிகள் இன்று பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. குறித்த வைரஸ் தொடர்பான புதிய தகவல்களை அதன் பின்னர் கண்டறிய முடியும் என விசேட வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். (அ)

## சிங்கப்பூரில்...

வரை சிங்கப்பூரில் தங்கியிருக்கும் வகையில் மேலும் 14 நாட்கள் தங்கியிருப்பதற்குச் சிங்கப்பூர் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார் என்று அரசியல் உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, “முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாடு திரும்புவதற்குப் பொருத்தமான நேரம் இதுவல்ல. அவர் இந்த நேரத்தில் நாட்டுக்கு வந்தால் அரசியல் ரீதியிலான பிரச்னைகள் ஏற்படலாம்“ - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்குக் கடந்த வாரம் வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

இதற்கு உள்நாட்டு ஊடகங்களிடம் பதிலளித்திருந்த ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி., “கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பினால் முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் அவருக்குத் தேவையான பாதுகாப்பு உள்ளிட்ட வசதிகளை அரசு செய்து கொடுக்க வேண்டும்“ - என்று கூறியிருந்தார். (அ)

## குமார்...

காலி முகத்திடல் போராட்டத்தை வன்முறைக்கு இட்டுச் சென்றதாகக் கூறி, இவர்களை கைது செய்யுமாறு சட்டமா அதிபரிடம் பொலிஸார் ஆலோசனை கோரியுள்ளனர்.

அரசாங்கத்திற்கு எதிரான செயற்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்யும் அரசியல் கட்சிகள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ள அரசாங்கம் தயாராகி வருவதாகவும் கொழும்பு செய்திகள் மேலும் குறிப்பிட்டன. (அ)

## சர்வகட்சி அரசு...

விமல தேரரை சந்தித்தபோது ஜனாதிபதி இதனை கூறியுள்ளார்.

ஜே.வி.பி தவிர்ந்த ஏனைய பிரதான கட்சிகள் பேச்சுவார்த்தையில் பங்கேற்றுள்ளன. சர்வகட்சி அரசாங்கம் அமைய வேண்டும் என அந்தக் கட்சிகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

அந்த அரசாங்கத்தை எவ்வாறு அமைப்பது என்பது குறித்து, வெவ்வேறு நிலைப்பாடுகள் உள்ளதாக ஜனாதிபதி ரணில் கூறியுள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்துள்ள ராமாக்ஞ் நிக்காயாவின் மாநாயக்கர், அரசியல் தொடர்பில் பேதங்கள் இருந்தாலும், தலைமைத்துவம் குறித்து நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அதனை உறுதிப்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu

# ஐஸ் போதைப்பொருளுடன் முல்லைத்தீவில் 2பேர் கைது

முல்லைத்தீவு, ஓக. 07

முல்லைத்தீவில் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இளைஞர்களில் ஒருவர் கள்ளப்பாடு தெற்கைச் சேர்ந்த 22 வயதுடையவர் என்பதோடு, மற்றைய நபர் உண்ணாப்பிலவைச் சேர்ந்த 21 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 04 . 1988



மறைவு 24 . 07 . 2022

## சபேசன் சிவனேஸ்வரன்

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டன் East Ham ஐ வதிவிடமாகவும் கொண்ட சபேஷன் சிவனேஸ்வரன் அவர்கள் 24.07.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிறைசூடி சிவரட்ணம் மற்றும் DLO வேலுப்பிள்ளை மனோன்மணி தம்பதிகளின் பாசமிகு பேரனும், சிவனேஸ்வரன் மனோகுமாரி தம்பதிகளின் இளைய புதல்வரும்,தினேசன் அவர்களின் பாசமிகு சகோதரரும், மனோரஞ்சிதம், பானுமதி, மனோரஞ்சனி, காலஞ்சென்ற ரவீந்திரா - மேரி, காலஞ்சென்ற சுரேந்திரா- கமலாதேவி, காலஞ்சென்ற தேவேந்திரா ஆகியோரின் அன்பு மருமகனும், விக்னேஸ்வரன், காலஞ்சென்ற கணேஸ்வரன், நடேஸ்வரன் - நகுலேஸ்வரி, தர்மகுமாரி, கோகுலகுமாரி ஆகியோரின் பாசமிகு பெறாமகனும்,சிவாந்தி சுசீந்திரன், ஜெரமி, மெகான், பமிஷன், விதுஷன் ஆகியோரின் அன்பு மச்சானும்,டினேஷ், சதீஷ் - அஜி, றம்மியா - அகிலன், அபிராமி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், ஜினோஷன், ஜெதீசன், றஜீஷன், தேஜிஷன், வைஷினி செலினா, லதுரா ஜீவானா, அஜந் நேய்வன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

பார்வைக்கு
Saturday, 06 Aug 2022 11:00 AM - 1:00 PM
Monday, 08 Aug 2022 4:00 PM - 6:00 PM
T Cribb & Sons Victoria House, 10 Woolwich Manor Way, London E6 5PA, United Kingdom

கிரியை
Wednesday, 10 Aug 2022 1:00 PM - 3:00 PM
T Cribb & Sons Victoria House, 10 Woolwich Manor Way, London E6 5PA, United Kingdom

தகனம்
Wednesday, 10 Aug 2022 4:00 PM
City of London Cemetery & Crematorium Aldersbrook Rd, London E12 5DQ, UK

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சிவாந்தி (Bobby) - மைத்துனி.**

தொடர்புகளுக்கு:
**மனோ - தாய்** Mobile : +442085520609
**சிவா - தந்தை** Mobile : +447544535793
**தினேஷ் - சகோதரன்** Mobile : +447985476448
**சிவாந்தி (Bobby) - மைத்துனி**
Mobile : +447474212023


நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த திருவிழாவையொட்டி
**ஓம் ரிவி** நடாத்தும்

**சைவம் தழைத்தோங்க....**
**சமய அறிவுப் போட்டி**

நல்லூர் உற்சவகாலத்தை ஒட்டி டான் குழுமத்தின் ஓம் தொலைக்காட்சியால் சைவம் தழைத்தோங்க.... என்ற தொனிப்பொருளிலான நிகழ்வுகள் இவ்வாண்டும் முன்னெடுக்கப்படவுள்ளன. பாடசாலை மாணவர்களின் சைவசமய அறிவை மேம்படுத்தும் நோக்குடன் இவ்வாண்டு 'சைவக்களஞ்சியம்' என்ற தலைப்பிலான - சமய அறிவுப் போட்டி முன்னெடுக்கப்படவுள்ளது.



செந்தமிழ் சொல்லருவி
ச. லலீசன் நடாத்தும்
சமய அறிவுப்போட்டி
ஆலய வடகிழக்கு வீதியில்
அமைந்திருக்கும்
நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் தினமும்
மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும்.



**போட்டி தொடர்பான விதி முறைகள்**

பாடசாலை மாணவர் மாத்திரமே போட்டியில் பங்கேற்கலாம்.

கேள்விகள் சைவசமய அறிவு சார்ந்த விடயங்களாகவும் பொதுவான அறிகை சார்ந்ததாகவும் இருக்கும்

வினாக்கள் பெரும்பாலும் தரம் 06 - தரம் 11 சைவநெறி பாடநூலை மையப்படுத்தியதாக அமையும்.

விடை வழங்குவதற்கு 10 செக்கன்கள் அவகாசம் வழங்கப்படும்.

நடுவரின் தீர்ப்பே இறுதியானது

போட்டிகளில் பங்கு கொள்ளவிரும்பும் மாணவர்கள் நிகழ்ச்சி நடைபெறும் மண்டபத்திற்கு நேரடியாக வந்து கலந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு: **075 3132 804**


# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 06 . 1981



மறைவு 01 . 08 . 2022

## லோகேஸ்வரன் பிரபானந்த்
### (ஜோய்)

அம்பாறை கல்முனையைப் பிறப்படமாகவும், கனடா Scarborough வை வசிப்பிடமாகவும் கொண்ட லோகேஸ்வரன் பிரபானந்த் அவர்கள் 01.08.2022 திங்கட்கிழமை அன்று அகால மரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூபாலப்பிள்ளை லோகேஸ்வரன் கெங்கநாயகி தம்பதிகளின் அன்பு மகனும், சுசிலாதேவி அவர்களின் அன்புக் கணவரும்,லோகானந்தி, கங்கானந்தி, தேவானந்தி, ஷோபானந்தி ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,குலசேகரம் மகேந்திரன்(ஹென்றி), கந்தசாமி கணேசதாசன், ஐய்யாதுரை ஸ்ரீகாந்த் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,இங்கிதன், சனாதனி, கிருஷா கிருஷ்ணபிரகாஷ், கிருஷாந்த், கபிஷாந்த், அபிராமி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

பார்வைக்கு
Sunday, 07 Aug 2022 5:00 PM - 9:00 PM
Monday, 08 Aug 2022 3:00 PM - 3:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Monday, 08 Aug 2022 3:30 PM - 5:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Monday, 08 Aug 2022 6:00 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கணேஸ் - மைத்துனர்.**

தொடர்புகளுக்கு:
**பிரசன்னன் - பெறாமகன்** Mobile : +16475633669
**கணேஸ் - மைத்துனர்** Mobile : +14164021282
**மகேந்திரன் (ஹென்றி) - மைத்துனர்** Mobile : +94774499155

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 06 . 1947



மறைவு 05 . 08 . 2022

## குமாரசாமி நவரெட்ணசிங்கம்
### (கந்தசாமி)

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வவுனிக்குளம், சிவபுரம் ஆகிய இடங்களை வசிப் பிடமாகவும், கனடா Wood Bridge ஐ வதிவிடமாக வும் கொண்ட குமாரசாமி நவரெட்ணசிங்கம் அவர்கள் 05.08.2022 வெள்ளிகிழமை அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை அனுமார் கந்தையா அபிராமிப்பிள்ளை தம்பதிகள், கனகசபாபதி கற்பகம் தம்பதிகளின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான வே.க குமாரசாமி காமாட்சி தம்பதிகளின் அருமை மூத்த புதல்வரும், காலஞ்சென்ற நாகரெட்ணம், பராசக்தி (கொழும்பு) தம்பதிகளின் அருமை மருமகனும், அன்னலெட்சுமி (வெள்ளைச்சி) அவர்களின் அருமைக் கணவரும், பாஸ்கரன் (சுவிஸ்), காலஞ்சென்ற நளாயினி (கனடா), கிருபாஜினி (சுவிஸ்), சண்முகாயினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரஸ்வதி (இராசாத்தி), காலஞ்சென்றவரகளான பாலசிங்கம், வசந்த குமாரி மற்றும் இரட்ணசிங்கம (கொழும்பு), நாகேஸ்வரி (கனடா), தனபாலசிங்கம் (சுவிஸ்), புஸ்பவதி (கனடா), சாந்தகுமாரி (சுவிஸ்), மகேந்திரன் (பாஸ்கி - சுவிஸ்), வனி தாம்பாள் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுபாஜினி (சுவிஸ்), அருட்பாலா (அருள்), உதயாஸ் (ASA Financial Services), கணேஸ்குமார் (சுவிஸ்), சத்தியதாசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திபாஸ்கி, ஷாகித், சரண், அஸ்வினி, ஆகாஸ், அவிநேஸ், சந்தோஸ், சஸ்மிகா, சஸ்விதன் ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்ற பாக்கியநாதன் (கிராம சேவை அலுவலர்), கலாநிதி (ரஞ்சி - கொழும்பு) ஆகியோரின் அருமை மைத்துனரும், யசோதராதேவி (கனடா) அவர்களின் அருமை உடன்பிறவாச் சகோதரரும் இராமசந்திரன்(கொழும்பு) அவர்களின் அருமை சகலனும், நடராசா (உமா றேடிங் கம்பனி), சுந்தரலிங்கம் (கனடா), உஷாகாந்தி (கொழும்பு), மகாலிங்கம் (கனடா), வனஜா (சுவிஸ்), கோனேஸ் (கனடா), காலஞ்சென்ற பரமேஸ்வரராஜா (சுவிஸ்), ரஞ்சனமாலா (சுவிஸ்), பிரபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான வே.க சோமசுந்தரம், வே.க நல்லதம்பி (சிவகுரு), வே, க சுப்பிரமணியம், சற்குணம், லெட்சுமி ஆகியோரின் பெறாமகனும்,காலஞ்சென்றவர்களான சண்முகநாதிஅம்மா (மலேசியா), கனசிங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

பார்வைக்கு
Monday, 08 Aug 2022 5:00 PM - 9:00 PM
Tuesday, 09 Aug 2022 9:00 AM - 10:00 AM
St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

கிரியை
Tuesday, 09 Aug 2022 10:00 AM - 12:00 PM
St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

தகனம்
Tuesday, 09 Aug 2022 12:00 PM
St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**அருள் - மருமகன்.**

தொடர்புகளுக்கு:
**பாஸ்கரன் - மகன்** Mobile : +41789623676
**அருள் - மருமகன்** Mobile : +14166247971
**இரத்தினசிங்கம் - சகோதரன்** Mobile : +94714404407
**தயாளன் - சகோதரன்**
Mobile : +41799119654 Phone : +41772121440
**கணேஸ்குமார் - மருமகன்** Mobile : +41792013401
**சத்தி - மருமகன்** Mobile : +41798785827
**மகாலிங்கம் - மைத்துனர்** Mobile : +14379992225
**கோணேஸ் - மைத்துனர்** Mobile : +14165610492
**திருமதி. கலாநிதி இராமசந்திரன் - மைத்துனி**
Mobile : +94773278486
**ராகுலன் - பெறாமகன்** Mobile : +16479947227
**ஜீவன் - மருமகன்** Mobile : +14163339997
**சோம சச்சி - உடன் பிறவாச் சகோதரர்** Mobile : +16472023234
**செல்வன் - உடன் பிறவாச் சகோதரர்** Mobile : +14167102666
**சுகுணன் - உடன் பிறவாச் சகோதரர்** Mobile : +16478877242
**பாபு - உடன் பிறவாச் சகோதரர்** Mobile : +16047673036

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.